மாலை 47 மணி 7 ஜூலை 2005 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## தெரிந்த கோயிலும் தெரியாத விஷயமும்

புதிய தொடர் ஆரம்பம்

## அருள் வழங்கும் குச்சனூர் சனீஸ்வரர்



## ஆடித்தபசு காணும் அருள்மிகு கோமதியம்பாள்

## படைவீடு அருள்மிகு இரேணுகாம்பாள்





## எட்டுப்பேட்டை கட்டியாளும் சேலம் கோட்டை பெரிய மாரியம்மன்

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்
# செவ்வாய்ப்பேட்டை, சேலம்



மங்களபுரி எனச் சிறப்பு பெயரால் அழைக்கப்படும் சேலம் மாநகரத்தில் பெருமளவில் தொழில்கள் நிறைந்து செல்வம் கொழிக்கும் நகரின் மையமாம் செவ்வாய்ப்பேட்டை பகுதியில் வணிகர்களுக்குச் செல்வம் கொழிக்கக் காரணமாக விளங்கும் தெய்வமாம் அருள்மிகு மாரியம்மன் தம் பக்தர்களுக்கு வேண்டிய வரம் நல்கி அருள் புரிந்து வருகிறாள்.

அருள்மிகு மாரியம்மனுக்கு வருடந்தோறும் ஆடிப்பெருவிழா தேரோட்டத்துடன் மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

**2005ஆம் ஆண்டு ஆடிப்பெருவிழா முக்கிய விழா நாட்கள்**

| | | |
|---|---|---|
| 26.07.2005 | - | பூச்சாட்டுதல் |
| 28.07.2005 | - | கம்பம் நடுதல் |
| 01.08.2005 | - | கொடியேற்றம் |
| 09.08.2005 | - | சக்தி அழைப்பு, உருளுதண்டம் |
| 10.08.2005 | - | பொங்கல் |
| 12.08.2005 | - | திருத்தேர் |
| 15.08.2005 | - | சத்தாபரணம் |

இத்திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலம் புதியதாக மரத்தேர் திருப்பணி ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுத் தற்பொழுது பணி முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் இராஜகோபுரம், மூலவர் விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், உள்பிரகாரம் மற்றும் வெளிப்பிரகார மண்டபங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்தல், உற்சவர் மண்டபம் புதியதாக நிர்மாணித்தல் ஆகிய திருப்பணிகள் உபயதாரர்கள் மூலம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட திருப்பணிகளில் விரும்பிய திருப்பணியை தங்கள் நேரடி உபயமாக செய்து கொடுத்து செவ்வை நகர் மாரியம்மன் திருவருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**இரா. ஜெகநாதன், பி.காம்., பி.எல்.ஐ.எஸ்,.**
செயல் அலுவலர்

**எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி**
அறங்காவலர் குழுத்தலைவர்

**அறங்காவலர்கள்**
**கே.ஏ. கோபால்**
**ஜி. மாணிக்கம் செட்டியார்**
**கே. பாலாமணி கிருஷ்ணன்**
**ஜே.ஆர் தாமோதரன்**




திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப ஆடி
மாலை 47 மணி 7 ஜுலை 2005


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்,

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று நம் முன்னோர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

தென்மேற்குப் பருவமழை நன்கு பொழிந்து, தென்னகமெங்கும் உள்ள நதிகள் யாவிலும் நீர்ப் பெருகி, ஏரி, குளம், குட்டை முதலான நீர்நிலைகள் யாவும் நிறையப் பெற்று, மக்கள் மிகுந்த குதூகலத்துடன் 'ஆடிப்பெருக்கி'னைக் கொண்டாடும் ஆனந்த மாதம் தான் ஆடிமாதம் ஆகும்.

மாணிக்கவாசகர் தாம் அருளிச் செய்துள்ள 'திருவெம்பாவை'யில் அம்பிகையின் வடிவம் போல் வானம் கருமை நிறம் கொண்டு, அம்பிகையின் சிற்றிடையைப் போல் மின்னலும் கீற்றாய் மின்னி, அம்பிகையின் திருப்புருவம் போல் வானவில்லும் வளைந்து தோன்றி, அம்பிகையின் காற்சிலம்போசைபோல் பேரிடியும் ஆர்ப்பரித்து ஒலித்து, பக்தர்களுக்கு அம்பிகை தாயாய்ப் பொழியும் திருவருள் போல் பருவமழையும் பொழிவதாகப் பாடியுள்ள பாடல் இங்கு நாம் நினைந்து மகிழ வேண்டிய ஒன்றாகும்.

***'முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்***
***என்னத் திகழ்ந்து எம்மைஆளுடையாள் இட்டிடையின்***
***மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்***
***பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்***
***என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்***
***தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு***
***முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே***
***என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்'***

இவ்வாறு ஞாலத்தை உய்விக்கும் நல்லமழை பொழியும் ஞாலமுதல்வியான அம்பிகைக்குப் பொங்கல் பக்தியுடனேபடைத்து, மக்கள் எல்லோரும் தம்நன்றி உணர்வைப் புலப்படுத்தும் புனிதமான மாதம்தான் ஆடிமாதம்.

***''அருளது சக்தியாகும் அரன்தனக்கு''*** என்று சைவ சித்தாந்த நூல்கள் இறைவன் திருவருளே அம்பிகையாகும் என அம்பிகையைக் கொண்டாடிப் போற்றுகின்றன.

இத்தகைய அருட்சக்தியாம் அம்பிகையைத் தமிழகமெங்கும் உள்ள புகழ்மிக்க அம்மன் திருத்தலங்களில் கொண்டாடும் ஒப்பற்ற மாதம் தான் ஆடிமாதம்.

ஆடித்திங்களின் சிறப்பை - மாரியம்மன் மகிமையைப் படம் பிடித்துக் காட்டுவதாய் வெளிவரும் இத்திங்கள் 'திருக்கோயில்' இதழ் முகப்பை ***'எட்டுபேட்டை கட்டியாளும் சேலம் கோட்டை மாரியம்மன்', 'படவேடு அருள்மிகு இரேணுகாம்பாள்', 'ஆடித்தபசு காணும் அருள்மிகு கோமதியம்பாள்'*** ஆகிய முப்பெருந்தேவியரின் வண்ணப்படங்கள் அலங்கரிக்கக் கண்டு களிபேருவகை கொள்ளலாம்.

இம்முப்பெருந்தேவியரின் திருவிளையாடல்கள் - அருள்விளையாடல்களை விவரிக்கும் அருமையான கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெற்று வாசகர்களுக்குப் பக்திப் பெருவிருந்தையும் படைக்கின்றன.

பிரதோஷ வழிபாட்டின் போது ***'சோமசூக்தப் பிரதட்சிணம்'*** செய்தால் அசுவமேத யாகம் செய்த பலன் உண்டாவதை விவரிக்கும் ஒரு அருமையான படைப்பும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

'ஆடி சுவாதி' - திருத்தொண்டத் தொகை நமக்கருளிச் செய்த சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜைத் திருநாளாகும். அவரைத் தடுத்தாட்கொண்டு சுந்தரர் வாழ்விலும், நம் சைவ சமயத்திலும் ஒரு மகத்தான திருப்பத்தை உருவாக்கிய இறைப் பேரருள் திறத்தை வியந்து கொண்டாடுகின்றார் 'எழுத்துச்சித்தர்' பாலகுமாரன் அவர்கள்.

***'தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை'***யில் ***பத்ரகிரியார்*** பெருமையைக் கொண்டாடுகின்றார் 'செந்தமிழ்வாரிதி' முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்கள்.

மதுரையிலும், மதுரையைச் சுற்றிலும் உள்ள மகிமைமிக்க ஆலயங்களைத் தரிசிக்க அழைக்கின்றது 'இவ்வளவு தூரம் வந்தபிறகு எனும் கட்டுரைத் தொடர்.

***'தெரிந்த ஆலயம், தெரியாத விஷயம்'*** என்று சுவையான தொடரும இவ்விதழில் ஆரம்பமாகின்றது.

வழக்கமாக இடம் பெறும் நீதிக்கதைகள், கேள்வி-பதில்கள், சுவையான பெட்டிச் செய்திகள் யாவும் இவ்விதழில் உங்களை வழக்கம் போல் மகிழ்விக்க இடம் பெற்றுள்ளன.

***'அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்'*** என்பார் மகாகவி பாரதியார். ஆடி இதழும் உங்களுக்கு அதிக ஆனந்தம் தரும் என நம்புகிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்


இந்த சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.




## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள பழநிமலை - இடும்பன்மலை கம்பிவட ஊர்தி

பழநிக்கு வரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக 3.11.2004 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கம்பிவட ஊர்தி (ரோப்கார்) தொடங்கி வைத்தார்கள். பக்தர்கள் அனைவரும் அப்பயன்மிகு திட்டத்தைப் பாராட்டிப் பயன்படுத்தி வருவது அனைவரும் அறிந்துள்ள ஒன்று.

3.11.2004 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பழநிக்கு வருகைதந்து பழநிமலைக் கோயிலுக்கான கம்பிவட ஊர்தியைத் துவக்கி வைத்தபொழுது பக்தர்கள் பழநிமலைக் கோவிலுக்கும், இடும்பன் மலைக்கோயிலுக்கும் இடையே கம்பிவட ஊர்தியை ஏற்படுத்தித் தர வேண்டுமென வேண்டுகோள் வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பக்தர்களின் கோரிக்கையை விரைந்து நிறைவேற்றித்தர ஆணையிட்டுள்ளதன் காரணமாக பழநிமலைக் கோவிலுக்கும், இடும்பன்மலை கோவிலுக்குமான கம்பிவட ஊர்தி அமைப்பதற்கான ஆயத்தப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள பழநிமலை - இடும்பன்மலைக்கோயில் கம்பிவட ஊர்தி | 2 |
| 2. | ஆடியில் நீராடும் கோடிதீர்த்த இராமேசுவரர் | 3 |
| 3. | படைவீடு அருள்மிகு இரேணுகாம்பாள் | 6 |
| 4. | தெரிந்த கோயிலும் தெரியாத விஷயமும் | 8 |
| 5. | காலச்சுவடுகள்: தீவட்டி சலாம் - அழ.முத்துப் பழநியப்பன் | 10 |
| 6. | ஞானப் பாலூட்டி நல்ல பெயர்சூட்டுக - பா. பாஸ்கரன் பி.எஸ்.சி.பில் | |
| 7. | ஆடித்தவசு காணும் அருள்மிகு கோமதியம்பாள் | 11 |
| 8. | ஏழரை ஆண்டுகளை ஏழரை நாழிகையாக்கி அருள் புரியும் குச்சனூர் சனீஸ்வரர் | 13 |
| 9. | சுந்தரர் வாழ்வில் இறைவர் தந்ததிருப்பம் - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் | 15 |
| 10. | அசுவமேத யாகப் பலன் தரும் சோமசூக்தப் பிரதட்சணம் | 19 |
| 11. | கேள்வி - பதில் | 21 |
| 12. | திருமந்திர உபதேசம் - ''திருமந்திரச் செல்வர்'' டி.வி.வெங்கட்ராமன் இ,ஆ,ப. (ஓய்வு) | 22 |
| 13. | ''ஆரூரானை மறக்கலும் ஆமே'' பு.ஏ. இராமையா இ,ஆ,ப. | 24 |
| 14. | தெய்வசகாயம் (நீதிக்கதை) - அருளரசு திருமுருக கிருபானந்தவாரியார் | 26 |
| 15. | மகாபாரதம் - முனைவர் த.அமிர்தலிங்கம் | 28 |
| 16. | திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசாமி | 31 |
| 17. | தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - பத்ரகிரியார் - முனைவர் இரா. செல்வக் கணபதி | 33 |
| 18. | இவ்வளவு தூரம் வந்த பிறகு - நிறைமதி | 35 |
| 19. | எட்டுப்பேட்டை கட்டியாளும் சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் - க. முருகன் எம்,ஏ,பி,எட் | 37 |



## பழநிமலை கம்பிவட ஊர்தி மூலம் வருமானம்.

கம்பிவட ஊர்தியில் மலைக்கோயிலுக்கு மேலே செல்ல பக்தர்களுககு ரூ 15ம், கீழே வர ரூ 15ம் கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| 2004 ஆம் ஆண்டு நவம்பரில் | ரூ 16 லட்சத்து 52 ஆயிரமும் |
| டிசம்பரில் | ரூ 24 லட்சத்து 63 ஆயிரமும், |
| 2005 ஜனவரியில் | ரூ25 லட்சத்து 75 ஆயிரமும், |
| பிப்ரவரியில் | ரூ 13லட்சத்து 49 ஆயிரமும், |
| மார்ச்சில் | ரூ 18 லட்சத்து 22 ஆயிரமும், |
| ஏப்ரலில் | ரூ 21 லட்சத்து 50 ஆயிரமும், |
| மே மாதத்தில் | ரூ 32 லட்சத்து 74 ஆயிரமும், |
| ஜீன் மாதத்தில் (26.6.05வரை) | ரூ 17 லட்சத்து 45 ஆயிரமும் |

வருமானம் மொத்த வசூல் ரூ 1 கோடியே 70 லட்சத்து 32 ஆயிரம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது


இராமேசுவரத்தின் பழமையும், புகழும், பெருமையும், இராமாயணத்திற்கு நிகரானது. இத்திருக்கோயில் காசிக்கு நிகரான யாத்திரைத் தலமாக முக்கியத்துவம் பெற்றது. காசிக்குத் தொடங்கப்பட்ட யாத்திரை இராமேசுவரத்தில் மூர்த்தியை வழிபட்ட பின்னர்தான் முடிவு பெறுகின்றது. காசிக்குச் சென்ற பயன் கைகூடுவது இராமேசுவரத்தில் தான் என்பது ஆன்றோர் வாக்கு.

இராமேசுவரம் என்ற புனித நாமம் இராமச்சந்திரமூர்த்தியால் பிரதிஷ்டை செய்யப் பட்ட ஈசன் எழுந்தருளியுள்ள புனிதத்தலம் என்பதை இயல்பாகவே குறிக்கின்றது. மூலஸ்தான மூர்த்தியை இராமேசுவரர், இராமலிங்கம், இராமநாதர் என்று பலவாறாக அழைப்பர்.


# ஆடியில் நீராடும் கோடிதீர்த்த இராமேசுவரர்

இராமேசுவரத்தில் வழிபாடும், மகோநதியும் (வங்காள விரிகுடா) இரத்தினாகரமும (இந்துமா கடல்) கூடுமிடமான தனுஷ்கோடியில் (சேது) முழுக்கும் செய்தால்தான் காசி யாத்திரை பூர்த்தியாகும். சேது முழுக்கும் செய்தால்தான் காசி யாத்திரை பூர்த்தியாகும்.

சேது என்ற வடமொழிச் சொல்லுக்குப் பாலம் என்று பொருள். இராமபிரான் இலங்கையை அடைவதற்காகக் கட்டிய அணையையே இது குறிக்கிறது. இராவணன் தம்பியும் இராமனின் நண்பனுமான விபீஷணனின் வேண்டு கோளுக்கிணங்கி இராமன் சேது அணையை வில் நுனியால் உடைத்ததால் தனுஷ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது. (தனுஷ்-வில்; கோடி-முனை) இராமன் தன் வில்முனையால் சேதுவுக்கு இடம் காட்டியமையால் இப்பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். இராமேசுவரம் கோயில் வழிபாட்டிற்கு முன்னும் பின்னும் இரண்டு கடல்கள் சங்கமமாகும் சேது தீர்த்தத்தில் முழுக வேண்டும் என்பது ஐதீகம்.



ஆனால், இப்போது இராமேசுவரத்துக்கு முதலில் போய் பிறகு தனுஷ்கோடிக்குச் செல்கிறார்கள்.




இருகடல்சங்கமத்தில் பிதுர்க் கடன் செய்தலும், அஸ்தி கரைத்தலும் வழக்கமாக நடக்கின்றன. தொடர்ந்து காணப்படும் பாறைகளும் சிறுதீவுகளும் பழம்பெரும் சேதுவின் எஞ்சிய பகுதிகள் என்று சொல்லப்படுகின்றன.

இராவணன் சம்ஹாரம் முடிந்ததும் மகரிஷிகளின் கருத்துப்படி இராவணனைக் கொன்ற பிரமஹத்தி தோஷம் நீங்குவதற்காக இராமன், சீதை இலட்சுமணனுடன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன. (இராவணன் பிரமனுடைய பேரன் மகன் ஆனதால் பிராமணன்). லிங்கம் பிரதிஷ்டை செய்வதற்கு நல்லவேளை குறித்து கைலாசத்திலிருந்து லிங்கம் கொண்டு வரும்படியாக இராமன் அனுமனை அனுப்பியதாகவும், நெடுந்தொலைவிலுள்ள கைலாசத்திலிருந்து ஆஞ்சநேயர் லிங்கம் கொண்டுவருவதற்குக் காலம் தாழ்ந்ததால், சீதை மணலால் செய்த லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டனர் என்றும் சொல்லப் படுகிறது. திரும்பி வந்த அனுமன் கோபம் கொண்டு மணலால் செய்யப்பெற்ற லிங்கத்தை அகற்ற முயன்றும் இயலவில்லை. அனுமனை ஆறுதல் செய்வதற்காக இராமலிங்கத்தின் பக்கத்தில் அனுமன் கொண்டுவந்த விசுவலிங்கத்தை ஸ்தாபித்து, அதற்கே பூசைமுதலியன முதலில் செய்ய வேண்டுமென்று இராமன்ஆணையிட்டார்.

இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் வடக்கே பத்ரிநாதம், கிழக்கே பூரிஜெகந்நாதர், மேற்கே துவாரகம், தெற்கே இராமநாதம் (இராமேஸ்வரம்) ஆகியவை புகழ் பெற்றன. இவைகளில் இராமநாதம் ஒன்றே சிவத்தலம். மற்ற மூன்றும் வைணவத் தலங்கள். இராமபிரான் (வைணவர்) ஈஸ்வரனை சிவலிங்க வடிவில் (சைவத்தை) பிரதிஷ்டை செய்தார் என்பதாலும், சைவ மதத்தினரும் வைணவ மதத்தினரும் வந்து கூடி வழிபடுவதாலும் இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் இராமேசுவரம் மிகவும் முக்கியமான இடத்தை வகித்து வருகிறது.

மேலும் இந்தியாவிலுள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் ஒன்று அருள்மிகு இராமலிங்கம் அமைந்த இராமேசுவரம் ஆகும். மற்றவை சௌராஷ்டிரத்தில் ஸ்ரீசோமநாதேஸ்வரர், ஸ்ரீ சைலத்தில் ஸ்ரீ மல்லிகார்ச்சுனர், உஜ்ஜயினியில் ஸ்ரீ மகாகாளேஸ்வரர், அமலேஸ்வரத்தில் ஸ்ரீ ஓம்காரேஸ்வரர், பரலியில் ஸ்ரீ நாகேஸ்வரர், வாரணாசியில் ஸ்ரீ காசி விஸ்வநாதர், நாசிக்கில் ஸ்ரீ திரியம்பகேஸ்வரர், ஹிமாலயத்தில் ஸ்ரீ கேதாரேஸ்வரர் மற்றும் எல்லோராவில் ஸ்ரீ குஸ்ருநேஸ்வரர் ஆகிய திருநாமங்களில் வழிபடப்பட்டு வருகின்றன.



காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையும்

வங்காளம் முதல் பம்பாய் வரையும் அதற்கு அப்பாலும் பரந்து விரிந்துள்ள பாரத தேசத்தில் தேசிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் வளர்க்கக் கூடிய இடமாக இப்புனிதஸ்தலம் விளங்கி வருகிறது. இராமேஸ்வரம் கோவிலில் விசாலாட்சி அம்பிகை சந்நிதிக்குப் பக்கமுள்ள ஜோதிர்லிங்கம் விபீஷணனால் நிலை நிறுத்தப் பெற்றது.

இராமாயண காலத்திலேயே தோன்றியுள்ள இக்கோயில் 12ஆம் நூற்றாண்டு வரை கூரைக் கொட்டகையில் ஒரு துறவியின் பாதுகாப்பில் இருந்து வந்துள்ளது. அதன்பின் கடந்த பல நூற்றாண்டுகளில் பலரால் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதில் முதலிடம் பெறுவோர் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களே யாவார்கள்.

கி.பி. 12ம் நூற்றாண்டில் இலங்கை அரசர் பராக்கிரமபாகு என்பவர் இத்திருகோயிலில் மூலஸ்தானத்தை (கர்ப்பக்கிரஹம்) கட்டினார் என்பதற்குரிய சான்றுகள் உள்ளன. அதன்பின் பதினைந்தாவது நூற்றாண்டில் இராமநாதபுரம் அரசர் உடையான் சேதுபதி அவர்களும், நாகூரைச் சேர்ந்த வைசியர் ஒருவரும் 78 அடி உயரமுள்ள மேற்குக் கோபுரத்தையும் மதில் சுவர்களையும் கட்டினர். மதுரையைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவர் அம்பாள் கோவில் பிரகாரம் மற்றும் சில திருப்பணியையும் செய்தார்.

பதினாறாம் நூற்றாண்டில் கோயிலின் தெற்கு இரண்டாம் பிரகாரத்தை இராமநாதபுரம் மன்னர் திருமயிலை சேதுபதி கட்டினார். அம்பாள் சன்னதி வாயிலில் தெற்குப் பக்கம் அவருடைய சிலை, அவருடைய மகன் இரகுநாத சேதுபதியுடைய உருவச்சிலை உள்ளன. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இரவில் மாலைசூட்டி மரியாதை செய்யப்படுகிறது. பின்னர் அதே நூற்றாண்டில் மதுரை மன்னர் விசுவநாத நாயக்கன் கீழ் குறுநில மன்னராக இருந்த சின்ன உடையான் சேதுபதி கட்டத்தேவர் நந்தி மண்டபத்தையும் மற்றும் சில திருப்பணிகளையும் செய்தார். இங்கு உள்ள நந்தி (செங்கற் சுண்ணாம்பு) சுதையால் ஆக்கப்பெற்றது. இதன் நீள, அகலங்கள் பின்வருமாறு :

நீளம் :22அடி, அகலம் : 12அடி, உயரம்: 17அடி

பதினேழாவது நூற்றாண்டில் தளவாய் சேதுபதி அவர்களால் திருக்கோயிலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ராஜகோபுரத்தின் ஒரு பகுதி கட்டப்பட்டது.

பதினெட்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்பாள் சன்னதியில் பள்ளியறையும், முன் மண்டபமும் இரவி விஜயரகுநாத சேதுபதி என்பவரால் கட்டப்பட்டது. பின்னர் அதே நூற்றாண்டில் முத்துராமலிங்க சேதுபதி அவர்களால் உலகப் பிரசித்தி பெற்ற மூன்றாம் பிரகாரம் கட்டி முடிக்கப்பட்டது.

மூன்றாம் பிரகாரத்தின் அமைப்பு :

| | | |
|---|---|---|
| வெளிப்புறம் | கிழக்கு - மேற்கு - 690 அடி | |
| | வடக்கு - தெற்கு - 435 அடி | |
| உட்புறம் | கிழக்கு - மேற்கு - 649 அடி | |
| | வடக்கு - தெற்கு - 395 அடி | |
| மொத்த தூண்கள் | | |
| எண்ணிக்கை | | ... 1212 |
| உயரம் | | ... 22 அடி 7.5 அங் |

முத்துராமலிங்க சேதுபதி மற்றும் அவருடைய இரு அமைச்சர்கள் ஆகியோரது சிலைகள் மூன்றாம் பிரகாரம் மேற்கு வாயிலில் இருக்கின்றன.

## இராமேஸ்வரத்திற்கு சுவாமி விவேகானந்தரின் வருகை

1897ம் ஆண்டு ஜனவரி மாதம் இராமேஸ்வரம் கோவிலுக்கு சுவாமி விவேகானந்தர் வருகை தந்து வழிபட்டு மகிழ்வுற்றார்கள்.

27.1.1897 அன்று இராமேஸ்வரம் கோவிலில் அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவு அரும் பெரும் கருத்துக்கள் அடங்கியதாகும்.

சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவு ஆங்கிலத்திலும் தமிழிலும் கல்வெட்டுக்களாகக் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளதை இன்றும் பக்தர்கள் படித்துப் பயன் பெறலாம்.








# படைவீடு அருள்மிகு இரேணுகாம்பாள்

சீரும் சிறப்பும் பொருந்திய தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் பலவற்றுள் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அம்மன் கோயில் படைவீட்டில் அமைந்துள்ள அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில் சக்தி தலங்களில் ஒன்றாகும். தனிச் சிறப்பு வாய்ந்த சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கினுள் ஒன்றெனவும் பகரப்படுகிறது. இத்திருக்கோயில் அமைந்துள்ள படைவீடு எனும் இக்கிராமம் கிழக்கு தொடர்ச்சி மலைகளின் (ஜவ்வாது மலைத்தொடர்) அடிவாரத்தில் உள்ளது. சுற்றிலும் மலைகளும், பசுமையான வனங்களும் அரணாக அமைந்து அழகு சேர்க்கின்றன. இவ்வூர் வேலூர் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் வேலூரிலிருந்து 32வது கி.மீட்டரில் சந்தவாசல் எனும் ஊரின் சாலை சந்திப்பிலிருந்து 6 கி.மீட்டர் மேற்கில் உள்ளது. ஆரணியிலிருந்து 23 கி.மீட்டரிலும், திருவண்ணாமலையிலிருந்து 55 கி.மீட்டரிலும் உள்ளது.


தொண்டை மண்டலத்து சக்தி தலங்களில் இத்தலம் முக்கியமான ஒன்றாகும். அம்மன் சுயம்புவாய் எழுந்தருளி உள்ளதுடன் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும் உடன் கொண்டு பேருருக் கொண்டு உலகில் சக்தியே எல்லாமென எடுத்துக் காட்டி அருள் புரிந்து வருகிறாள். ஞானியர் பலர் தவமிருந்து சித்திகள் பல பெற்றதும் இத்திருத்தலத்தில்தான். ஆதி சங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பாணலிங்கமும், ஜனாகர்ஷண சக்கரமும் அமைந்துள்ளது சிறப்பாகும். ஒரு காலத்தில் 1008 சிவாலயங்களும், 108 விஷ்ணு ஆலயங்களும் இவ்வூரில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவற்றுள் அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு இராமச்சந்திர சுவாமி திருக்கோயில் தவிர இதர திருக்கோயில்கள் அனைத்தும் இயற்கை சீற்றத்தால் அழிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஜமதக்கினி முனிவர் யாகம் செய்த இடத்தில் இருந்து பிரதி வருடமும் ஆனி திருமஞ்சனத்தன்று வெட்டி எடுத்து வரப்படும் திருநீறு தான் இங்கு சன்னதியில் வழங்கப்படுகிறது. இதனை அணிய பிணிகள் அகலும்.

இத்திருகோயில் உட்பகுதியில் ஒரு திருச்சுற்றும், வெளிப்புறம் ஒரு திருச்சுற்றும், நான்கு மாடவீதியுடன் அமைந்துள்ளது. வினாயகர், ஆறுமுகர் தனித்தனி சன்னதிகளில் காட்சி அளிக்கின்றனர். திருச்சுற்றில் ரேணுகாம்பாள் அம்மன் சன்னதிக்கருகில் உட்பிரகாரத்தில் அருள்மிகு சோமநாத ஈஸ்வரர், உமாமகேஸ்வரி அம்மன் தனித்தனி சன்னதிகளில் காட்சி யளிக்கின்றனர். திருக்குளம் உட்பிரகாரத்தில் வடகிழக்கில் அமையப் பெற்றுள்ளது.

இத் திருக்கோயிலின் கருவறையில் வேறெங்கு மில்லாத வகையில் சிறப்பு அம்சமாக அன்னை ரேணுகாதேவி (சிரசு மட்டும்) சுயம்பு உருவமாகவும், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகள் அரூபங்களுடன் எழுந்தருளி யுள்ளார்கள். மேலும் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த பாணலிங்கமும், சிலாசிரசும், அத்தி மரத்தினாலான அம்மன் முழு திருவுருவமும் கருவறையில் அமையப் பெற்றுள்ளது. மும்மூர்த்திகளுடன் எழுந்தருளியுள்ள அன்னை ரேணுகாதேவியை வழிபட மும்மூர்த்திகளையும் வழிபட்ட பலன் உண்டு.

படை + வீடு = படைவீடு. படைகள் தங்கி இருந்த இடம். அன்னை ரேணுகாதேவி இத்தலத்தில் படையுடன் வந்து அருள் பாலித்ததால் படைவீடு எனவும், இராசகம்பீர சம்புவராயர்



# ஆடிப்பெருக்கு



மகமாயி மாரியம்மன் திருவருளால் நம் மனம் குளிர மழை பொழிந்து நிலம் குளிர நீர்நிலைகள் ஓங்குவதைக் கொண்டாடுவதே ஆடிப்பெருக்கு திருவிழாவாகும்.

''நீரின்றி அமையாது உலகு'' என்பதையே மக்கள் உணர்ந்து, மழைக் கடவுளாம் மாரியம்மனை ஆடிப்பெருக்கின் போது அகம் நெகிழ்ந்து வழிபடு கிறார்கள்.

பலவித சித்ரான்னங்கள் தயார் செய்து காவிரித் தாய்க்கு நைவேத்யம் செய்து பக்தர்கள் வழிபடுவது ஆடிப்பெருக்கின் விசேடமாகும்.

வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், பூ, காதோலை, கருகமணி இவற்றை ஓடும் காவிரிக்குச் சமர்ப்பித்துக் குடும்பத்தோடு அமர்ந்து பக்தர்கள் சித்ரான்னம் பகிர்ந்து உண்பது, காவிரித் தாயே கண் கண்ட தெய்வம் ஆவதை நமக்கு இனிதினில் உணர்த்துகின்றது.

எனும் அரசன் தனது படைகளுடன் இத்தலத்தில் தங்கிப் போரிட்டதால் படைவீடு எனவும் பெயர் பெற்று நாளடைவில் படவேடு எனப் பெயர் மருவி வந்துள்ளது.

அருள்மிகு ரேணுகாதேவி இரைவத மகாராஜனின் மகளாய் பிறந்து ஜமதக்கினி முனிவரை மணம் முடித்து பரசுராமன் உள்ளிட்ட நன்மக்களைப் பெற்றெடுத்தாள். ரேணுகாதேவி தன் கணவருக்குப் பணிவிடை செய்து வரும் நாளில், கணவர் பூஜைக்கு நீர் முகந்திட கமண்டல நதிக்குச் சென்றாள். அவ்வமயம் வானவீதியில் சென்ற கந்தர்வன் சாயையை நீரிலே கண்டு அவனழகையும், இளமையையும் எண்ணி ஆச்சரியப்பட நீரில் மட்குடம் உடைந்து அத்தண்ணீரால் உடம்பு முழுவதும் நனைந்ததை முனிவர் ஞானக்கண்ணால் கண்டு கோபம் கொண்டு தன் மகன் பரசுராமனை அழைத்து அன்னையின் சிரசைத் துண்டிக்க ஆணையிட அதன்படி அன்னையைச் சிரச்சேதம் செய்கிறார்.

பின் தந்தையிடம் வந்து தங்கள் கட்டளையை நிறைவேற்றிவிட்டேன். கோபத்தை அடக்கித் தயை செய்ய வேண்டும். பெற்ற தாயை கொன்றக் என் கையையும் வெட்டிவிட்டேன் என்ற மகனிடம், வேண்டிய வரம் தருவதாக கூறினார். பெற்ற தாயை மீண்டும் உயிர்ப்பித்துதரக் கோருகிறார். அவரும் மகன் விருப்பத்திற்கிணங்கி கமண்டல நீரை மந்திரித்துக் கொடுக்க, அவர் அதை பெற்றுக் கொண்டு தன் தாய் வெட்டுப்பட்ட இடத்தில் சென்று காலகதியால் அங்கே வெட்டுப்பட்டு கிடக்கின்ற சண்டாளச்சி உடலில் தவறுதலாக ரேணுகா தேவியின் தலையை ஒட்டும்படி வைத்து நீரைத் தெளித்தவுடன் அன்னை சண்டாளப் பெண்ணின் உடம்போடு பிழைத்து நின்று தன் புதல்வனைப் பார்த்துத் தனக்கு நேர்ந்த வேறுபாட்டை சொன்னார். பின் தன் தந்தையின் முன்சென்று நடந்தவற்றை விவரிக்கிறார்.

இது தெய்வச் செயலால் வந்தது. இனி இதை மாற்ற முடியாது எனக் கூறியதனால், அது முதல் அவ்வேறுபட்டவுடலுடன் அன்னை பணிவிடை செய்துவரும் நாளில் அங்கு வந்த கார்த்தவீரிய அர்ச்சுனன் ஜமதக்கினி முனிவரிடமிருந்த காமதேனுவை தனக்கு வழங்க வேண்டுகிறான். முனிவர் வழங்க மறுத்ததால் அவரைக் கொன்று காமதேனுவை கார்த்தவீரிய அர்ச்சுனன் அழைத்துச் சென்று விடுகிறான். கணவர் இறந்ததால் ரேணுகை கணவர் உடலுடன் உடன்கட்டை ஏறினாள். அவ்வமயம் தெய்வ வசத்தால் மழை பொழிந்தது. அம்மழை நீரால் சுடலை நெருப்பு அணைந்து அன்னை கொப்புளங்களுடன் ஆடை இன்றி எழுந்து வேப்பிலை ஆடையைக் கட்டிக் கொண்டு மகன் பரசுராமனைச் சந்தித்தாள். உடனே பரசுராமர் வந்து மிக்கக் கோபத்துடன் சென்று கார்த்தவீரியனைக் கொன்று சினத்துடன் திரும்ப, க்ஷத்திரிய குலம் முழுவதும் அழிக்கச் சபதமிடுகிறார். இதனைக் கண்ட சிவபெருமான், பிரம்மா, விஷ்ணுவுடன் தேவர்களோடு வந்து **''கோபத்தை விட்டுவிடும், இக்காரியம் விதிப்பயனாலானது, யாராலும் தடுக்க முடியாது''** என்றார்கள். பின் ஜமதக்கினி முனிவரை சிவபெருமான் உயிர்ப்பித்தெழச் செய்கிறார். அன்னை ரேணுகை சிவபெருமானிடம் வேண்டியபடி சிரசு மட்டும் பிரதானமாகக் கொண்டு இப்பூவுலகில் பூஜைக் கருஉருவாய் விளங்கவும், உடலின் மற்ற பிரிவு முனிவருடன் சுவர்க்கத்துக்கு செல்லவும் சிவபெருமான் அருள் வழங்கினார்.

அவ்வாறே அன்னை ரேணுகை பூவுலகில் சிரசைப் பிரதானமாகக் கொண்டு படைவீட்டில் அமர்ந்து அருள்பாலித்து வருகிறாள்.

★ ★ ★

# தெரிந்த கோயிலும் தெரியாத விசயமும்

'சிதம்பரம்' திருத்தலம் என்பது அனைவரும் அறிந்த திருத்தலம்.

ஆனால் ''ஆதிசிதம்பரம்'' என்று குறிப்பிடப் படும் திருத்தலம் ஒன்று உள்ளது. அத்திருத்தலம் எது என்பது அறிவீர்களா?

இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீட்டர் தொலைவில் உள்ள ''உத்தரகோசமங்கை'' திருத்தலம் தான் ''ஆதிசிதம்பரம்'' என்று சிறப்பிக்கப்படும் திருத்தலம் ஆகும்.

**''மண்தோன்றிய போதே மங்கை தோன்றியது''** என்ற பழமொழி கொண்டு இத்திருத்தலத்தின் தொன்மையை அறியலாம்.

பதஞ்சலி முனிவர், வியாக்ரபாதர் போன்ற பெரியோர்களுக்காக சிவபெருமான் முதன் முதலில் நர்த்தனம் ஆடிய திருத்தலம் உத்தரகோசமங்கைதான்.

இங்கு ஆடியதற்குப் பிறகு தான் சிதம்பரத் தலம் வந்து ஆனந்த தாண்டவம் ஆடினார்.

ஆகவே சிதம்பரத்தில் நடனம் ஆடுவதற்கு முன்பே ''உத்தரகோசமங்கைத்'' திருத்தலத்தில் சிவபெருமான் நடனம் ஆடினார் என்பதால் இத்திருத்தலம் ''ஆதிசிதம்பரம்'' என்று சிறப்பிக்கப் படுகின்றது.

''உத்தரகோசமங்கை'' என்று இத் திருத்தலம் ஏன் பெயர் பெற்று விளங்குகின்றது என்பதும் பலருக்கு இன்னும் தெரியவில்லை.

சொக்கலிங்கப் பெருமான் உமாதேவியைப் பரதவர் மகளாகச் சபித்தார். பின் இத்திருத்தலத்தில் பரதவர் மகளாக வளர்ந்த உமாதேவிக்குச் சாப விமோசனம் தந்து அம்பாளை மணந்து கொண்டு, அம்பாளுக்கு வேதப் பொருளை உபதேசம் செய்தார். இங்கு வீற்றிருந்த அடியார்கள், சிவயோகிகள் முதலிய பல்லாயிரவர்க்கு ஞான உபதேசம் செய்து முத்தி நல்கிப் பின்னர் அம்பிகையுடன் மதுரை வந்ததாக மதுரைப் புராணம் கூறுவதால் மதுரைக்கு முந்தைய பழமையும் சிறப்பும் கொண்ட திருத்தலம்



மரகத நடராஜர்

உத்தரம் - உபதேசம்


கோசம் - ரகசியம்

மங்கை - பார்வதி

அதாவது பார்வதி தேவிக்குச் சிவபெருமான் பிரணவ மந்திரத்தை உபதேசித்த இடம் என்பதால் இத்திருத்தலத்திற்கு ''உத்தரகோசமங்கை'' என்ற பெயர் உண்டாகியுள்ளது.



மாணிக்கவாசகர்



சஹஸ்ரலிங்கம்

உத்தரகோசமங்கை என்பதை நாம் உணரலாம்.

இதுஇராமாயண காலத்தில் நிகழ்ந்த ஒரு வரலாறு ;

உத்தரகோசமங்கையில் சிவபெருமானை நோக்கித் ஆயிரம் வேதியர்கள் தவமிருந்தனர். இராவணன் மனைவி மண்டோதரி மிகச் சிறந்த சிவபக்தை. அவளுக்கு அருள் செய்ய சிவபெருமான் செல்லும் போது ''சிவாகம நூலைக் காத்துக் கொண்டு இருங்கள். மண்டோதரிக்கு அருள் புரிந்து வருகிறோம்'' என்றார் சிவபெருமான்.

''இராவண அரக்கனால்.உங்களுக்குத் துன்பம் உண்டானால் என் செய்வோம்''? எனக் கலங்கினர் சிவவேதியர்கள்.

''அப்படி ஏதும் நேராது. ஏதேனும் நேரும் பட்சத்தில் இந்தக் குளத்தின் நடுவே ஒரு அக்கினிப் பிழம்பு தோன்றும்'' என்று கூறி மறைந்தார் சிவபெருமான்.

இலங்கையில் மண்டோதரியின் எதிரே மாற்று உருவில் இறைவன் தோன்றினார். அங்கே வந்த இராவணன் ஈசனடியார் என்று உணராமல் சினமடைந்து அவரை இறுக்கக் கட்டிப் பிடித்தான்.

அதனால் உத்திரகோசமங்கையில் அக்கினி தோன்றியது. இது கண்ட ஆயிரம் வேதியர்களில் ஒருவர் நீங்கலாக எஞ்சிய 999 வேதியர் இறைவனுக்கு ஆபத்து என்று அலறியவாறு அந்த அக்கினியில் இறங்கி விட்டனர்.

ஒரே ஒரு வேதியர் மட்டும் ''சிவாகம நூலைக் காப்பாற்றும்படியல்லவா ஈசன் கட்டளை இட்டார்'' என்று சிவாகமநூலைக் கட்டி அணைத்து நின்றார்.

சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து ''ஆகமநூலைக் காப்பாற்றிய உம் பக்தியை மெச்சினோம். சிவாகமநூலைத் தோத்திரப் பாக்களாய்ப் பாடி நம்மை மீண்டும் வந்து அடைக; அப்போது உமது நாமம் மாணிக்கவாசகர் என வழங்கும்'' எனத் திருவருள் புரிந்தார்.

அவ்வாறு அருளப்பெற்ற சிவவேதியரே மறுபடி மாணிக்கவாசகராக அவதாரம் செய்தார் என்பதை உத்தரகோசமங்கைத் தலபுராணம் கூறுகின்றது. **''உத்தரகோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பும்''** என்று கீர்த்தித் திருஅகவலில் இச்சம்பவத்தைப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

உத்திரகோசமங்கையில் உள்ள நடராஜர் மரகத நடராஜர். அவர் பெயர் இரத்தின சபாபதி. அவரையே ஆதிசிதம்பரேசர் என்று அழைக்கின்றார்கள்.

ஐந்தரை அடி உயரம் உள்ள மரகத நடராஜர் ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பிலேயே காட்சி தருகிறார். மார்கழி மாதம் திருவாதிரை ஒருநாள் மட்டும் சந்தனக்காப்புக் களைந்து விசேஷ அபிஷேகம் நடைபெறும்.

இத்திருத்தலம் மிதித்தாலே மங்களங்கள் யாவும் கைகூடிவரும் என்பதால் இங்கு எழுந்தருளி உள்ள இறைவர்-இறைவிக்கு மங்களநாதர், மங்கள நாயகி எனத் திருநாமங்கள் வழங்குகின்றன.

சிவபெருமானை வழிபட்ட ஆயிரம் சிவவேதியர்களும் ஒவ்வொரு லிங்க வடிவில் இறைவனோடு ஒன்றினர். அதுவே இங்கு சஹஸ்ரலிங்கமாகத் தரிசனம் தருகின்றது.

## சிற்பிகளுக்கு அரிதானது எது?



**''திருவலஞ்சுழிப் பலகணி,**
**தாரமங்கலம் தூண்,**
**ஆவுடையார் கோயில் கொடுங்கை -**
**இவற்றைத்**
**தவிர மற்றச் சிற்பவேலைப்பாடுகளின்**
**சிறப்புக்கு குறையாமல் நாங்கள் செய்து தருகிறோம்''**

-இவ்வாறு ஒரு கோயிலைக் கட்டத் தொடங்குவதற்கு முன்பு சிற்பிகள் ஒப்பந்தம் எழுதிக் கொடுப்பது வழக்கம். இதன் வாயிலாக மேற்கூறிய மூன்று சிற்பப் படைப்புகள் எவ்வளவு சிறப்பானவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

காலச்சுவடுகள்

### பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில்

# தீவட்டி சலாம்

- அழ. முத்துப்பழனியப்பன், எம்.ஏ., பி.எல்.



இறைவனை ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விதத்தில் போற்றி மகிழ்கின்றன. இஸ்லாமியர்கள் தங்கள் வணக்க முறையைச் 'சலாம்' எனக் கூறுவர். அருணகிரிநாதரும் முருகனை வணங்குவதற்கு இச்சொல்லைப் பயன்படுத்துவார்.

கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலமான அவிநாசிக் கோயிலில் பணியாற்றியபோது, 'தீவட்டி சலாம்' என்பதைத் தேர்த்திருவிழா நிகழ்வில் காண நேர்ந்தது. இதுபற்றி அர்ச்சகர்களைக் கேட்டபோது அவர்கள், தேர்த்திருவிழாவில், தினமும் மாலையில் செய்யப்படும் சிறப்பு வழிபாடு என்றனர்.

மேலும் இதுபற்றி ஆய்வு செய்தபோது ஓர் உண்மை வெளிவந்தது. 'தீவட்டி சலாம்' திப்புசுல்தான் பழைய திருக்கோயில்களில் ஏற்படுத்திய ராஜாங்க மரியாதை என்று புலனாகிறது.

கொங்குச்சீமை மைசூர் மன்னர்களின் ஆட்சியில் விளங்கியது. திப்புசுல்தான் மைசூர்ச்சீமையை ஆண்டபோது, கொங்கு நாடும் அவன் கட்டுப்பாட்டில் இருந்தது. அவன் ஆட்சி செய்தபோது பழைமை வாய்ந்த திருக்கோயில்கள் அனைத்திலும், தினமும் அரசமரியாதையாக தீவட்டி சலாம் என்ற வழிபாட்டை ஏற்படுத்தினான். அதன்படி, கோபுரத்தின் வெளிப்புறம் கோயிற் சேவகர், தீவட்டியால், மூன்று தடவை மேலும் கீழும் ஆட்டி, இறைவனுக்குச் சலாம் செய்வர். இதன் பின்னர் மற்ற வழிபாடுகள் தொடரும்.

பெரும்பான்மையான கோயில்களில் (அவிநாசி போன்ற) இந்த வழிபாடு, தேங்காய் உடைத்து வழிபாடு செய்வதோடு நின்றுவிட்டது. ஆனால், கோவை - பேரூர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி கோயிலில் தினமும் நடைபெறுகிறது. மாலை (சாயரட்சை) வழிபாடு தொடங்குமுன்னர், கோயிலுக்கு வெளியில், கோயில் பணியாளர் ஒருவர் கோபுர வாசலில் நின்று கொண்டு, தீவட்டியை மேலும், கீழும் ஆட்டி, பட்டிப் பெருமானைச் 'சலாம்' செய்ய மாலை வழிபாடு நடைபெறும்.

இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

# ஞானப்பாலூட்டி நல்ல பெயர் சூட்டுக

பா. பாஸ்கரன். பி,எஸ்சி., பி,எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி
அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

மதுரையில் புகழ் பெற்று விளங்கும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் குழந்தைகளுக்கு இறைவன் இறைவியரின் திருப்பெயர்களைச் சூட்டி அவர்களுக்கு ஞானப்பால் ஊட்டி, இறைவன் இறைவி சந்நதிகளில் அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திருப்பெயர் சூட்டும் முறையானது சந்திரன் நிற்கும் இடங்களான மேஷம் முதல் மீனம் வரையிலான 12 இராசிகளையும், அஸ்வினி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு அந்நட்சத்திரங்களை நான்கு பாதங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாதத்திற்குரிய முதல் எழுத்துக்களில் வடிவமைத்துப் பெயர் சூட்டப்படுகிறது.



நட்சத்திரத்திற்கு உகந்த முதல் எழுத்துக்களில் அடிப்படையில் பெயர் வைத்து இறைவனை நம் பால் அழைக்கும் சொல்லே நாமதேயம். ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அர்த்தங்களும், இறைவன் நாமங்களும் சேர்ந்து வருவதே நாமதேயம்.

இறைவன் இறைவி பெயர்களைச் சூட்டி அழைக்கும் போது அந்நாமம் கொண்டவர்களிடத்து மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். இறைவன் இறைவித் திருப்பெயர்கள் சூட்டி அழைப்பதால், குழந்தைகளின் மனதில் இறை சிந்தனை வளரும். நல்லொழுக்கமும், நற்பண்புகளும் கைக்கொண்டு திகழ அடிகோலும்.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 9.30 மணிமுதல் 10.30 மணி வரையிலும். சுபமுகூர்த்த நாட்களில் சுபமுகூர்த்தத்திலும் திருப்பெயர் சூட்டப்படும். இதனைப் பக்தர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகின்றேன்.

# ஆடித் தபசு காணும்

அருள்மிகு

# கோமதியம்பாள்



தென்பாண்டி நாட்டிலுள்ள சிலஸ்தலங்களில் சங்கரநயினார் கோயில் ஓர் முக்கிய ஸ்தலம். சைவ உலகமாதாவாகிய பார்வதி தேவியின் வேண்டு கோளின்படி முழுமுதலிறைவனாகிய பரமேஸ்வரன் தன்னுள்ளடங்கிய நாராயணனை வெளிப் படையாகத் தன் வாமபாகத்தில் காட்டியருளிய பேறு பெற்றது இத்தலம். இக்காட்சி ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத் தபசுத் திருவிழா இறுதி நாளில் நடக்கும்.

சங்கரநாயினார் கோவில் ஐம்பூத தலங்களில் ஒன்று. இது மண்தலம். தாருகாபுரம் நீர்த்தலம். தென்மலை காற்றுத்தலம். கரிவலம் வந்த நல்லூர் தீத்தலம். தேவதானம் ஆகாயத்தலம். இவ்வைந்தனுள் சங்கரநயினார் கோவிலே முதன்மையானது. சில ஆண்டுகளுக்கு முன்வரை சிவராத்திரியன்று பல அடியார்கள் ஒன்று கூடி இவ்வைந்து கோவில்களையும் அவ்விரவிலேயே கால்நடையாகச் சென்று வழிபட்டு வந்தார்கள். இப்போதும் சிலர் அங்ஙனம் செய்து வருகிறார்கள்.

சங்கரனார் திருக்கோயில், சங்கரலிங்கர் கோவில், கோமதியம்மை கோவில், சங்கரநாராயணர் கோவில் என மூன்று பெரும் பகுதிகளாக இருக்கின்றது. கோவிலின் தலைவாயிலுக்கு நேரே இருப்பது சங்கரலிங்கப் பெருமான் கோவில். இது தென் பகுதியில் இருக்கிறது. வடபகுதியில் கோமதியம்மை திருக்கோவில் அமைந்துள்ளது. இவ்விரண்டு கோவில்களுக்கும் தனித்தனி கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், அந்தராள மண்டபங்கள் இருக்கின்றன.

வடபகுதியிலுள்ள கோமதியம்மை கோயில் முன்புக்கு ஸ்ரீசக்கரம் எழுதி ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இங்கேயே பிணியாளர்கள் அமர்ந்து அம்மையை நோக்கித் தவஞ்செய்து பிணி நீக்கம் பெறுவார்கள். நறுநெய் ஊற்றி மாவிளக்கு ஏற்றி வழிபடுவார்கள். வடக்குப் பிரகாரத்தில் சகல நோய்களையும் தீர்க்கவல்ல புற்று மருந்து இருக்கின்றது. கோமதியம்மையின் திருஉருவம் கல்மனத்தையும் கரைக்கும் பேரழகு வாய்ந்தது. இவள் அழகில் ஈடுபடாதவர்களில்லை. என்றும் மறக்க முடியாத திருக்கோலமும் அவள் திருக்கண் நோக்கும் உள்ள இவ்வம்மையே இக்கோயிலின் பெருமைக்கு ஓர் முக்கிய காரணம். இவள் அருள் உருவத்திலே ஈடுபட்ட திருநெல்வேலி அழகிய சொக்கநாதப் பிள்ளை பின்வருமாறு கேட்கின்றார்.

''கேடாவரும் நமனைக் கிட்டவராதே தூரப்
போடா என்றோட்டி உன்தன்
பொற்கமலத்தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால் அம்மா!
உனைக்
கூடாதென்றார் தடுப்பார் கோமதித்தாய்
ஈஸ்வரியே''.

இறைவன், இறைவி கோயில்களுக்கு நடுவே சங்கரநாராயணர் கோவில் இருக்கிறது.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சங்கரநாராயணர் திருவுருவம் வலது பக்கம் ஈஸ்வரனாகவும், இடது பக்கம் திருமாலாகவும் ஒரே உருவத்தில் அழகாய்ச் செய்யப் பெற்றது. இக்கோயிலில் ஓர் ஸ்படிகலிங்கம் ஒரு அழகிய வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டிருக்கிறது. இவருக்கு அன்றாட அபிஷேகம் உண்டு. சங்கர நாராயணருக்கு அபிஷேகம் கிடையாது.

உமாதேவியார் சிவபெருமானிடத்தில் ''விஷ்ணுமூர்த்தியுடன் நீர் பொருந்தியிருக்குந் திருக்கோலத்தைக் காட்ட வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தனர். சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கிணங்கி அம்மையாரை நோக்கி, '' அகத்திய முனிவரிருக்கும் பொதிகை மலைப் பக்கத்தில் புன்னை விருக்ஷ வடிவமாக அநேகர் தவஞ் செய்தனர். அங்கே நீயுஞ் சென்று தவஞ் செய்வாயானால் நீவிரும்பிய திரு உருக்காட்டுவோம்'' என்று அருளினார்.

சிவபெருமான் புன்னைவனத்திலெழுந்தளி வந்து ஆடி மாதம் பௌர்ணமியன்று சங்கர நாராயணராகிய திரு உருவக் காட்சி கொடுத்தனர். உமா தேவியர் அக்காட்சியைக் கண்கள் களிகூறத் தரிசித்துத் தோத்திரஞ் செய்யவும் சிவபெருமான் தேவியாரை நோக்கி ''உனக்கு வேண்டிய வரங்கேட்பாய்'' எனவும் தேவியார் ''சுவாமி ! இத்திருக்கோலத்தை மறைத்து உம்முடைய திரு உருக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபிரான் சிவலிங்க வடிவாகி அந்த உமாதேவியருடன் புன்னை வனத்திலே எழுந்தருளியிருந்தனர்.


அருள்மிகு சங்கரநாராயணர்

ஆடித்தபசன்று மாலை இறைவன் வீதியில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பது, தேவியார் விரும்பிய சங்கரநாராயணர் கோலம். இரவு எழுந்தருளிக் காட்சி கொடுப்பது தேவியார் சங்கர நாராயணர் காக்ஷி கண்ட பின்பு தாம் வேண்டிய சிவபெருமானின் திருஉருவம். இதுவே ஆடித்தவசு விழாவின் முக்கியக் கருத்தும் சிறப்பும் ஆகும்.

இவ்விதமாகச் சிவபெருமான் சங்கர நாராயணராகக் காட்சி அருளியதால், நான்முகன் முதலிய தேவர்கள் யாவரும் சிவனார் திரு உருவில் அடங்கினவர்களே என்ற உண்மை நிலை பெறுகின்றது.

சங்கன். பதுமன் என்னும் நாகர் இருவர் இருந்தனர். அவர்களில் சங்கன் சிவபெருமான் இடத்தும், பதுமன் திருமாலிடத்தும் அன்பு பூண்டு அரன் பெரியவன், அரி பெரியவன் என வாதிட்டுச் சங்கரநார்ாயணர் காட்சியைக் கண்டு அரனின் கூறுதான் அரியென்ற உண்மையை உணர்ந்தனர்.

ஆடித்தபசு விழா இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழும் பெருந் திருவிழாக்களில் ஒன்று. தபசு விழா நாளில் இந்த மாவட்டத்திலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் திரள் திரளாக மக்கள் கூடி விழாக் காட்சிகளைக் கண்டு களிப்பார்கள்.

மணிக்கிரீவன் என்ற வேதியன் பார்வதி தேவியின் சாபத்தால் பறையனாகிப் புன்னைவனக் காவலாக இருந்தான். அதனால் அவன் காப்பறையன் என்றும், காவற் பறையன் என்றும் பெயர் பெற்றான். கரிவலம்வந்தநல்லூர்ப் பால் பண்ணை நாதருக்குப் புன்னை வனத்திலே ஒருபூந்தோட்டம் இருந்தது. அதற்கும் அவனே காவல். தோட்டத்தின் ஒரு பக்கம் புற்றொன்று வளர்ந்தது. அதை ஒரு நாள் அவன் வெட்ட அதிலிருந்து பாம்பின் வால் வெட்டப்பட்டது. அப்போது அவன் புற்றின் பக்கத்தில் சிவலிங்கம் இருப்பதையும் கண்டான். அதே சமயத்தில் உக்கிர பாண்டியர் அடுத்த வனத்தில் வந்திருப்பதாக அறிந்து செய்தி தெரிவிக்க ஓடினான்.

உக்கிரபாண்டியர் சென்று புற்றினையும், புற்றிடங்கொண்டாரையும் கூழைவாலினதாகிய பாம்பினையும் கண்டார். சங்கரனார் அசரீரியாக ஆணைதரப் பாண்டியர் காடு கெடுத்து நாடாக்கிக் கோவில் கட்டிச் சங்கரன்கோவில் ஊரையும் தோற்றுவித்தார். கோவிலில் கோபுரத்தைத் தாண்டியதும் காவற்பறையனுடைய திருவுருவத்தை இப்போதும் நாம் காணலாம்.

இவ்வூரில் வழிபடுவதால் பேசாத பிள்ளைகள் பேசுகின்றன. குட்டம் முதலிய தீராத நோய்களெல்லாம் தீர்ந்து போகின்றன. பிள்ளை இல்லாத பேர்களுக்குப் பிள்ளைப் பேறு உண்டாகிறது.

இங்ஙனமாகத் தம்மைத் தஞ்சமென்று வந்தடையும், அன்பருக்கெல்லாம் அவரவர்கள் வேண்டும் வரங்களையெல்லாம் வேண்டியபடி அருள் செய்து கோமதியம்மையோடு எழுந்தருளி அருள்பாலிக்கும் சங்கரனார் பெருமையை யாரால் அளவிட்டு உரைக்க முடியும்.

**கோமதியம்மை திருவடிகளே சரணம் !**
**சங்கரனார் பொன்னடி மலரிணை வாழ்க !**

## ஆடியில் ஆழ்வார், நாயன்மார் திருநட்சத்திரம்



| | | |
|---|---|---|
| ஆண்டாள் | - | பூரம் |
| மூர்த்தியார் | - | கார்த்திகை |
| புகழ்ச்சோழர் | - | கார்த்திகை |
| கூற்றுவர் | - | திருவாதிரை |
| பெருமிழலைக் குறும்பர் | - | சித்திரை |
| சுந்தரர் | - | சுவாதி |
| கழறிற்றறிவார் | - | சுவாதி |
| கலியர் | - | கேட்டை |
| கோட்புலியார் | - | கேட்டை |

# ஏழரை ஆண்டுகளை ஏழரை நாழிகையாக்கி அருள் புரியும் குச்சனூர் சனீஸ்வரர்

அனைத்துச் சிவாலயங்களிலும் பிற கோள்களுடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ காட்சியளிக்கும் சனீஸ்வரர், தேனி மாவட்டத்தில் உள்ள குச்சனூர் என்ற திருத்தலத்தில் மூலமூர்த்தியாகச் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

தேனி அல்லி நகரத்திற்குத் தெற்கே 20 கி.மீ தொலைவிலும், உத்தமபாளையத்திற்கு வடக்கே 10 கி.மீ. தொலைவிலும் குச்சனூர் உள்ளது. தேனியிலிருந்து உப்புக்கோட்டை வழியாகவும், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய ஊர்களிலிருந்து மார்க்கயன் கோட்டை வழியாகவும் செல்லும் நகரப் பேருந்துகளில் சென்றால் குச்சனூரை அடையலாம்.



குச்சனூர் சனீஸ்வரர் மான்மியத்தைத் ''தினகரன் மான்மியம்'' எனும் தலைப்பிட்டுச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த வித்துவான் இராயகிரி முத்துச்சாமிக் கவிராயர் என்பவர் ஒரு தலபுராணம் பாடியுள்ளார்.

அத்தலபுராணம் கூறும் வரலாறு பின்வருமாறு:

வான் பொய்ப்பினும் தான் பொய்க்காத நீர்வளம் மிக்க நாடு குலிங்கநாடு. இந்நாட்டை ஆண்ட தினகரன் என்ற அரசன் குடிமக்களைத் தன் கண்போல பாவித்து அரசாண்டு வந்தான்.

அனைத்துச் செல்வங்களும் பெற்றிருந்த இம்மன்னனுக்குப் பிள்ளைபேறு மட்டும் இல்லை. இவனும், இவன் மனைவி விந்துரு என்பாளும் மக்கட்செல்வம் இல்லாத குறை எண்ணிப் பெரிதும் வருத்தமுற்று வாடினர்.

இந்நிலையில் இவன் நாட்டிற்கு வந்த வானுலக அரம்பையர்கள் ''மன்னா ! வருத்தப்படாதே ! உன் இல்லத்திற்கு ஒரு அந்தணக் குழந்தை வந்தடையும். அக்குழந்தையைக் கண்டவுடன் உனது பட்டத்தரசியின் தனங்களில் பால் சுரக்கும். அக்குழந்தையை உன் குழந்தையாக வளர்த்து வா. உனக்கு உரிய காலத்தில் மற்றொரு மகன் பிறப்பான்'' என்று அருளி மறைந்தனர்.

அரம்பையர்கள் உரைத்தவண்ணமே வறிய அந்தணதம்பதிகள் வர, அவர்தம் குழந்தையைக் கண்ட அரசியின் தனங்களில் பால் சுரக்க, அக்குழந்தையைப் பெற்றுத் தம் மகனாகவே ''சந்திரவதனன்'' எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தான் தினகரன்.

சிலகாலத்தில் அழகிய ஆண் மகவொன்றை அரசி பெற்றெடுக்க ''சதாகன்'' எனப் பெயரிட்டு இரு குழந்தைகளையும் வேற்றுமையின்றிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர் பெற்றோர்.

வாலிப வயதுற்றதும், வளர்ப்புமகன் எனப் பாராது சந்திரவதனனுக்கே மகுடம் சூட்டி மகிழ்ந்தான் தினகரன்.

அவ்வேளையில் ''ஏழரைச்சனி'' தினகரனைப் பிடித்துக் கொள்ள, பலவித துன்பங்களும், நோய் நொடிகளும் தினகரனை வாட்டின.

சனிக்கிழமைகளில் சனீஸ்வரருக்குப் பால், பச்சரிசி, வெற்றிலை பாக்கு, பழம், அவல், தேங்காய், சந்தனம், சர்க்கரை, உளுந்து, பிண்ணாக்கு ஆகியவற்றைப் படைத்து வழிபட்டால் தினகரனுக்கு ஏழரைச்சனியால் ஏற்படவல்ல தொல்லைகள் குறையும் என்று சோதிடர்கள் பரிகாரம் கூறினர்.

தம் தந்தை தினகரனுக்குத் தொல்லைகள் குறைய சனிக்கிழமைகளில் சனிபகவானை வழிபட்டு வந்தான் சந்திரவதனன். சந்திரவதனனின் பூசைக்கு இரங்கிச் சனீஸ்வரரும் காட்சிகொடுத்தார்.

தம் தந்தையைப் பிடித்துள்ள தோஷத்திலிருந்து விடுதலையளிக்குமாறு சனீஸ்வரரை வேண்டினான் சந்திரவதனன்.

''சிவபெருமான், திருமால், தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் என்னால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலிருந்து தப்புவது இயலாது. உன் பக்தியை மெச்சி உன் தந்தையைப் பீடித்திருக்கும் காலத்தை ஏழரை ஆண்டிலிருந்து ஏழரை மாதமாகக் குறைக்கிறேன்'' எனச் சனிபகவான் வரம் தந்து அருளினார்.

தம் தந்தைமேல் மிகுந்த பாசம் கொண்டிருந்த சந்திரவதனன் சனிபகவானைத் தோத்தரித்துத் தந்தைக்குப் பதில் தன்னை ஏழரை மாதங்கள்

பிடித்துக் கொள்ளுமாறு வேண்ட, சனீஸ்வரரும் அவ்வாறே தினகரனை விட்டுவிட்டுச் சந்திரவதனனைப் பிடித்துக்கொண்டார்.

பெற்றவரத்தால் திருப்தி அடையாத சந்திரவதனன் அரசவை துறந்து கானகம் அடைந்தான். சுருளிமலையருவிகளால் செழுமையாக்கப் பெற்ற சண்பகவனத்தைத் தவம் செய்வதற்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்து, சனீஸ்வரர் போன்ற உருவம் அமைத்துக் கடுமையாகத் தவம் புரிந்தான்.

சந்திரவதனனின் கடுந்தவத்தை மெச்சிய சனீஸ்வரர் மீண்டும் காட்சியளித்தார்.

''பக்தனே! உன் தவத்தை மெச்சி ஏழரை மாதக் காலத்தை ஏழரை நாழியாகக் குறைத்துக் கொள்கிறேன். அதனையும் விடுத்தால் பூவுலகில் உள்ள சகல ஜீவராசிகளுக்கும் குற்றம் உண்டாகிவிடும். எனவே உன்னைச் சிறிதும் பிடிக்காமல் விடுவது இயலாது. இந்த ஏழரை நாழிகைக்குள் உனது உற்றார்களிடமிருந்து உனக்குப் பற்பல துன்பங்கள் ஏற்படும். முடிவில் நான் அருள் புரிகிறேன்'' என்று சனிபகவான் கூறி மறைந்தார்.

இந்நிலையில் சந்திரவதனனைத் தேடி வந்த அவன் தம்பி சதாகன் எங்கோ காணாமல் போய்விட, அரசகுமாரர்கள் இருவரையும் தேடிவந்தன அரசனின் படைகள்.

செண்பக வனத்தில் சனீஸ்வரன் பூசையில் தன்னை மறந்திருந்தான் சந்திரவதனன். பூசைக்குப் படைக்கப்பட்ட பூசணிக்காய், கீரை, எள்ளுப்புண்ணாக்கு, கரும்பு, பால் போன்ற பொருள்களே சந்திரவதனன் முன் இருந்தன.

ஆயினும் சனீஸ்வரன் மாயையால் மன்னனின் படைவீரர்களுக்குத் தன் தம்பி சதாகனைக் கொன்று கூறு போட்டு அவன் குடலைச் சந்திரவதனன் மார்பில் அணிந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது.


இக்காட்சியைக் கண்டு திகைத்த படைவீரர்கள் சந்திரவதனன் மேல் பாய்ந்தனர். படைத்தலைவன் சந்திரவதனனை வாளால் வெட்டிக் கொல்ல முயன்றான். அதே நேரம் சனி பிடித்திருந்த ஏழரை நாழிகைக்காலம் முடிந்து போக, அண்ணனைத் தேடிக் கொண்டிருந்த சதாகனும் அங்கு வந்து சேர, யாவரும் உண்மை உணர்ந்து சனிபகவானை வணங்கி வழிபடலானார்கள்.

அத்தருணத்தில் சனிபகவான் அனைவருக்கும் காட்சியளித்துத் தனக்குக் கோயில் அமைத்து வழிபடுமாறு கட்டளையிட்டு மறையலுற்றார். கரிய மேகம் போல் திரண்ட உருவேற்று ஆதவனின் பிரகாசத்துடன் பூமியிலிருந்து வெளிவந்ததைப் போல சனீஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக அங்குக் காட்சியளித்தார்.

சண்பகவனத்தில் சனீஸ்வரர், சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளிய இடத்தில் ஒருசிறு கோயில் எழுப்பிக் குச்சுப்புல்லால் கூரை வேய்ந்தனர். குச்சுப்புல்லால் வேயப்பட்ட கூரைக் கோயில் கொண்ட சனீஸ்வரருக்குக் 'குச்சன்' என்ற பெயர் உண்டானது. குச்சன் குடிகொண்டுள்ள

## நவகிரகங்கள் அருளும் நன்மைகள்

| | |
|---|---|
| சூரியன் | - ஆரோக்கியம் |
| சந்திரன் | - கீர்த்தி |
| செவ்வாய் | - நிலபுலம், செல்வம் |
| புதன் | - கல்வி, அறிவு |
| குரு | - நன்மதிப்பு |
| சுக்கிரன் | - அழகு |
| சனி | - சந்தோஷம் |
| ராகு | - பகைவர்பயம் போக்குதல் |



திருத்தலம் குச்சனூர் என வழங்கப்பெற்றது. இதுவே குச்சனூரில் சனீஸ்வரர் கோயில் கொண்ட அருள் வரலாறு ஆகும்.

மூலஸ்தானத்தில் சுயம்புவாகத் தோன்றிய சனீஸ்வரர் சற்று அகலமான லிங்கம் போல காட்சியளிக்கிறார். இவர் கருமை வண்ணத்தாலானவர். அருகில் உலோகத்தால் ஆன உற்சவமூர்த்தியும் உள்ளார்.

மூலஸ்தானத்தின் இடப்புறத்தில் சனீஸ்வரரை வழிபட்டு முத்தி பெற்ற கேரளாவைச் சார்ந்த லாடசன்னியாசியின் திருவுருவம் உள்ளது.

சனீஸ்வரரின் முன்னோடித் தெய்வமாகவும் காவல் கடவுளாகவும் திகழும் சோணை கருப்பண்ண சாமியின் சந்நிதியும் சற்றுத் தொலைவில் வாய்க்கால் கரையில் உள்ளது. இவர் வெள்ளைக் குதிரை மீது கம்பீரமாக வீற்றிருக்கிறார். இவர் தொண்டர்களின் உடைமைகளைக் காப்பதற்காக இரவில் பவனி வருவார் என மக்கள் நம்புகின்றனர்.


சுரபிநதி இங்கு புண்ணியதீர்த்தம், தலவிருட்சமான விடத்தலைமரம் சனீஸ்வரர் ஆலயத்தின் பின்புறம் உள்ளது.

தினமும் விடியற்காலம், உச்சிகாலம், மாலைவேளை ஆகிய மூன்று வேளைகளில் பூசைகள் நடைபெற்று வருகின்றன. உச்சிகால வழிபாடு முடிந்ததும் சனீஸ்வரரின் வாகனமான காகத்திற்குத் தளிகை அளித்தவுடன் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுகின்றது.

ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் சனிக்கிழமைகளில் இங்குத் திருவிழா நடைபெறுகின்றது. முதல் சனிக்கிழமையன்று காகஉருவம் பொறித்த கொடி ஏற்றப்பட்டு விழா துவக்குவார்கள். மூன்றாவது சனிக்கிழமையே அதிவிசேடமான திருவிழாவாகும். அதற்கு முதல்நாளான வெள்ளிக்கிழமை சனீஸ்வரர் திருக்கல்யாண உற்சவம் நிகழும்.

இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை சனிபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குச் செல்லும் சனிப்பெயர்ச்சி இங்கு விமரிசையாகக் கொண்டாடப்பெறும்.

# சுந்தரர் வாழ்வில் இறைவர் தந்த திருப்பம்



''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

அந்த இளைஞனுக்கு அன்று திருமணம். அவன் பெயர் சுந்தரன். பேருக்கேற்றாற்போல பேரழகன். மிகுந்த புத்திசாலி. தமிழ்ப் புலமையும் வடமொழிப் பேரறிவும் மிக்கவன். அவன் நல்லதொரு அந்தணர் குடும்பத்தில் பிறந்தாலும் அவன் அழகும் மழலைப் பேச்சும் கண்டு அந்த ஊரின் தலைவர் - குறுநில மன்னர் நரசிங்க முனையரிடம் வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்தான். அவர் அரண்மனையிலேயே வாழ்ந்தான்.

நல்ல குடியில் பிறந்து, நல்லதொரு குடும்பத்தாரிடம் சீரும், சிறப்புமாக அவன் வளர்க்கப்பட்டதைப் பார்த்து எல்லோரும் இதை இறையருள் என்றும், அவன் அதிர்ஷ்டக்காரன் என்றும் கொண்டாடினார்கள். அவன் குழந்தையாக இருந்தபோது மடியில் வைத்து முத்தமிட்டார்கள். அவனை முத்தமிடச் சொன்னார்கள். அவன் சிறுவனாக இருந்தபோது காலிடுக்கில் வைத்துப் பாட்டு பாடினார்கள். அவனைப் பாடச் சொன்னார்கள். சற்று வளர்ந்தபிறகு எதிரே அமர வைத்து அவனோடு பேசினார்கள். அவன் பேசுவதைக் காது குளிரக் கேட்டார்கள்.



அவன் இளைஞனான பிறகு அவர்கள் எழுந்து நின்றார்கள். அவன் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். அவன் வணக்கத்தை மனமார வாங்கி அவனை வாயார வாழ்த்தினார்கள். அவனோடு பேசவும், பழகவும் ஊர்மக்கள் அனைவருமே ஆசைப்பட்டார்கள். அவனும் எல்லோரிடமும் மிகப்பிரியமாகவும், மரியாதையுடனும் நடந்து கொண்டான். அவன் சகலரையும் மிகமிக மரியாதையாக நடத்தினான்.

ஆனால் அவனுக்குஉள்ளூர ஒரு வியப்பு இருந்தது. மனிதர்களில் பலபேர் சாதாரணமாக இருக்கத் தான் மட்டும் மிகுந்த உயர்ந்த நிலையில் எல்லாவித வசதிகளோடும் வாழ்கிறோமே ! அது எப்படி ? என்ற கேள்வி இருந்தது.

அவன் பேச்சு சாமர்த்தியம் அவனையே வியக்க வைத்தது. அவன் அழகு அவனைச் சிந்திக்க வைத்தது. ஆண்களும். பெண்களும். அவன் அழகு கண்டு வியந்து அவனைப் பின்தொடர்வதைப் பார்த்து அவன் உள்ளுக்குள் இதெல்லாம் என்ன என்று கேள்வி கேட்டுக்கொண்டான்.

எல்லாம் கடவுளுடைய கருணை என்ற முடிவுக்கு வந்தான். தன்னை இன்னும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான். எதற்கு என்ற கேள்வி வந்தபோது பதில் தெரியாமல் அந்தக் கேள்வியையே மறந்து போனான்.

சுந்தரன் என்கிற அந்தப் பேரழகனுக்கு திருமணம் நிச்சயமாயிற்று. மிக, விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று ஊர் மொத்தமும் விரைந்தது. அவனை அவன் உறவினர்கள் வீட்டின் பின்புறம் அமர்த்தி விதம்விதமான வாசனை திரவியங்களை உடம்பில் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள். அலங்கரித்தார்கள். மலர்மாலை சூட்டினார்கள். அவன் அழகு கண்டு விலகி நின்று வியந்தார்கள். எங்கள் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது என்று மெய்சிலிர்த்தார்கள்.

அவன் கம்பீரமான ஒரு காளையைப் போல சிவபெருமானின் சேனைத் தலைவர்களில் ஒருவர் போல மிகக் கம்பீரமாய் நடந்து சபைக்கு வந்தான். சபை ஆரவாரம் செய்து பாராட்டிற்று. சுந்தரனை மங்கள ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். மணமேடையில் உட்கார வைத்தார்கள்.

அப்பொழுது ஒரு குரல் கேட்டது. ''இவனா? இவனுக்கா கல்யாணம் ? இன்றா திருமணம் ? நடக்கக் கூடாதே'' என்று உரத்த குரலில் கேட்க எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். சிவந்த மேனியராய், பெரிய விழியினராய் திருநீறு பூசியவராய், அழகுடையவராய் மிகுந்த தள்ளாட்டம் உடைய கிழவராய் ஒருவர் நின்றிருந்தார்.



# அந்தியூர் திருக்கோயிலில்

அந்தியூர் வனப்பகுதியில் அமைந்துள்ள அழகான திருக்கோயில் அருள்மிகு குருநாத சுவாமி திருக்கோயில்.

ஆடிமாதம் முதல் புதன்கிழமை பூச்சாட்டுதல், 2ஆம் புதன்கிழமை கொடியேற்றுதல், 3ஆம் புதன்கிழமை வனப்பூஜை, 4ஆம் புதன்கிழமை முதல் சனிக்கிழமை முடிய நான்கு நாட்கள் ஆடிப்பெருந்தேர் திருவிழா நடைபெறும்.

ஐந்தாவது புதன்கிழமை பால்பூஜையுடன் விழா முடிவடையும்.

ஆடிமாதம் 4ஆம் புதன்கிழமையன்று பல்லக்கில் ஸ்ரீகாமாட்சியம்மனும், சிறிய மகாமேரு தேரில் ஸ்ரீபெருமாள் சுவாமியும்,

''ஏனய்யா ... ஏன் இவருக்கு திருமணம் நடத்தக்கூடாது''

''என்னிடம் அனுமதி வாங்கவில்லையே''

''நீர் யார் ? உம்மிடம் எதற்கு அனுமதி வாங்க வேண்டும். சுந்தரனுக்கும், உமக்கும் என்ன சம்பந்தம்''

சபை வினவிற்று.

''சுந்தரனாகிய இவன் என்னுடைய அடிமை. எனவே, ஒரு அடிமை, ஆண்டானை அனுமதி கேட்க வேண்டாமா ? என் அனுமதியில்லாமல் இவன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது'' என்று கடுமையான உரத்த குரலில் அந்தக் கிழவர் முழங்கினார்.

சுந்தரனுக்கு உள்ளுக்குள் சினம் பொங்கிற்று. எழுந்து நின்றான்.

''பெரியவரே ! நமஸ்காரம். எதற்குத் தகாத வார்த்தைகளில் பேசுகிறீர்கள். உங்கள் வயதுக்கு மதிப்பு கொடுத்து உங்கள் முன்பு கைகூப்பி வணங்கி நிற்கிறேன். இது என் திருமண நாள். நானும் என் உறவினரும், இந்த ஊரும் சந்தோஷமாக இருக்கின்ற நாள். இப்போது வந்து ஏதேனும் பேசிக் கலகம் விளைவிக்க வேண்டாம். உங்களுக்குப் பொழுது போகவில்லையெனில் வேறு எங்கேனும் போங்கள். இங்கு இருக்க வேண்டிய அவசிய மில்லை'' என்று மெல்லிய குரலில் அதட்ட, கிழவரின் கண்கள் சிவந்தன.

''என்னையா அப்புறப்படுத்தப் பார்க்கிறாய்? நீஎன் அடிமை. இதோ உன் தந்தை எழுதிக் கொடுத்த ஓலை இருக்கிறது. தானும், தன் குடும்பத்தினரும் பரம்பரை பரம்பரையாக எனக்கு அடிமை செய்வதாக அவர் ஓலை எழுதிக் கொடுத்திருக்கிறார். இது ஏதும் அறியாத நீ, மிகக் கம்பீரமாகப் பேசுகிறாய். உன் தமிழும், வடமொழி அறிவும் உன்னை பெரிய ஆளாக இந்த ஊருக்குக் காட்டலாம். ஆனால், எனக்கு நீஅடிமை. இவை ஏதும் எனக்கு முக்கியமில்லை'' என்று முழங்க சபை திகைத்தது. சுந்தரனைப் பார்த்தது.

''என்ன உளறல் ? அந்தணர் அந்தணருக்கு அடிமையாவதுண்டோ ? நான் அந்தணர் குலம். நரசிங்க முனையர் வீட்டில் வசிக்கிறேன். என்னை எவரும் இதுவரை அடிமையென்று சொன்ன தில்லை. தகாது பேசுகிறீர்கள். கவனமாய்ப் பேசுங்கள். இது எச்சரிக்கை'' என்று உரத்த குரலில் கூறினான்.

''இதோ இந்த ஓலையைப் பார்'' என்று வந்தவர் ஓலையை நீட்ட சுந்தரர் வாங்கிப் பார்த்தார். அதில் அவருடைய முன்னோர் கையெழுத்து இருந்தது. கோபம் அதிகமாயிற்று.

''என்ன. இந்த ஓலையை வைத்துக் கொண்டு ஏதோ மிரட்டுகிறீர். இது பழம் ஓலை. இதில் இருக்கின்ற கையெழுத்துப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது அடிமை சாசனம் என்றால் இதோ இதைக் கிழித்துப் போட்டுவிட்டேன்'' என்று கிழித்துப் போட அந்த பெரியவர் சினம் கொண்டவரானார்.

''எனக்குத் தெரியும். உன் புத்தி என்னதென்று தெரியும். மிகுந்த கர்வத்திலும், அகம்பாவத்திலும் இருக்கின்ற நீஇந்தத் தகாத காரியத்தைச் செய்வாய் என்று தெரியும். நீகிழிப்பது பிரதிஓலை. மூலஓலை என்னிடம் இருக்கிறது. நீஎன் அடிமை. என்னை விட்டு நீஎங்கும் போக இயலாது. போகவும் விடமாட்டேன். ஏதும் அறியாத இந்தப் பெண்ணோடு உன் திருமணத்தை, இப்போதே நிறுத்தி என் பின்னே வா'' என்று இரைந்தார்.

திருமண வீடு களையிழந்தது. உறவுகள் பெருமூச்சுவிட்டார்கள். சிலர்தாங்காமல்அழுதார்கள்.

சுந்தரன், இளைஞன், பேரழகன். கலங்கினான். என்னசெய்வது என்று தெரியாமல் அல்லாடினான்.

சபை விழித்துக் கொண்டது.

''உங்கள் மூல ஓலையைக் காட்டுங்கள்'' என்று அவரை வினவியது.

அந்த மூல ஓலைக்குப் பங்கம் வரக்கூடாது என்று அந்த முதியவர் சொல்ல சபை அந்த மூல ஓலையைக் காபந்து செய்வதாகச் சத்தியம் செய்தது.

# ஆடிப் பெருந் தேர்த்திருவிழா

பெரிய மகாமேரு தேரில் ஸ்ரீகுருநாத சுவாமியும் வனத்திற்கு வருவார்கள்.

1951 ஆம் ஆண்டு முதல் இங்கு விழாவின் போது நடைபெறும் மாட்டுச்சந்தை, குதிரைச் சந்தை விசேடமானது.

இவ்விழாவைக் காணப் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.



மூல ஓலையை அவர் இடுப்பிலிருந்து கொடுக்க அது படிக்கப்பட்டது. அதிலுள்ள கையெழுத்து ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. பலபேர் அதைப் பார்த்துவிட்டு அது இன்னார் கையெழுத்து. நாங்கள் அறிவோம் என்று கை உயர்த்தினார்கள்.

சபை பரிதாபமாய்ச் சுந்தரனைப் பார்த்தது.

''நீசெய்தது மிகப்பெரிய தவறு சுந்தரா ! அறிவும், திறனும் உடைய நீஏன் இப்படியொரு தவறு செய்தாய். உன் குடும்பமே பரம்பரை பரம்பரையாய் இவருக்கு அடிமை என்று மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. நீகோபம் அடைவதில் பிரயோஜனமில்லை. ஒரு பெண்ணோடு உனக்குத் திருமணம் என்பது இவர் அனுமதியில்லாமல் நடக்கமுடியாது. இவர் உனக்கு அனுமதி தருவார் என்றும் எங்களுக்குத் தோன்றவில்லை. உன்னை அவர் தன் பின்னே வரும்படி அழைக்கிறார். எனவே, எந்தவிதமான மறுப்பும் சொல்லாமல் இந்தக் கிழவரின் பின்னே போகவேண்டியது உன்னுடைய கடமை. இது இந்தச்சபையின் உத்தரவு''.

வருத்தத்துடன் சபை தன் உத்தரவை வழங்கியது. சுந்தரர் திகைத்தார். மாலை அலங்காரங்களைக் கழற்றினார். மெல்ல அந்த முதியவரிடம் வந்து நின்றார்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உணர்ச்சி வயப்பட்டு வாழ்க்கை பற்றிய சபலத்திற்கு ஆளாகி ஒழுக்கம் மீறி உங்களிடம் கடுமையாக நடந்து கொண்டு விட்டேன். தவறு செய்து விட்டேன். என் தவறை மன்னித்து என்னை என்ன வேண்டு மானாலும் செய்து கொள்ளுங்கள். மறுபடியும் நான் இந்தத் தவறு செய்ய மாட்டேன். உங்களோடு பிணங்க மாட்டேன்'' என்று கைகூப்பினார்.

''அப்படியானால் என் வீட்டிற்கு வா''

அந்தக் கிழவர் நெஞ்சு நிமிர்த்தி முகம் முழுவதும் புன்னகையாய்க் கம்பீரமாய்ச் சொன்னார்.

''எது உங்கள் வீடு''.

''வா பின்னால். என் வீடு காட்டுகிறேன்'' என்று அந்தக் கிழவர் முன்னால் நடக்க, மூச்சிரைக்க சுந்தரர் பின்னால் நடந்தார்.

கிழவர் திருவெண்ணெய் நல்லூர் கோயிலுக்குப் போய் நின்றார்.

''உங்கள் வீட்டிற்கு வா என்று சொல்லிவிட்டு கோயிலுக்குப் போகிறீர்களே என்னது இது?'' என்று சுந்தரர் கேட்க அவரிடமிருந்து விலகி நின்ற கிழவர் ''இதுவே நம் வீடு வா'' என்று அழைத்தார். உள்ளே போனார். சுந்தரர் திகைத்து நின்றார். அந்தக் கோயிலையே பார்த்தார். நடந்து போன கிழவரைப் பார்த்தார். மெல்ல மெல்ல அந்தக் கோயிலுக்குள் நுழைந்து நிமிர்ந்து பார்க்க கோயிலின் மேல் பகுதியில் பிரகாசமாக ஒளி தோன்றியது. ரிஷபாரூடராக சிவபெருமான் உமையோடு காட்சியளித்தார். ''சுந்தரா வா'' என்று அழைத்தார்.

''நீங்களா .. என் சிவனே .. நீங்களா'' என்று சுந்தரர் நாக்குழறினார். தடுமாறினார். கைகூப்பினார். கண்ணீர் மல்க நின்றார். விம்மி விம்மி அழத்துவங்கினார்.

''என்னை அழைக்கவா வந்தீர் ! என்னை அழைக்கவா கிழவனாக வேடமிட்டீர். இது எதற்கு.. இது எதற்கு.. நான் என்ன அப்படி ... என்று வார்த்தைகள் கோர்வைகள் இல்லாமல் வந்தன.

''ஆமாம். சுந்தரா ! உன்னை நாடி உன்னை என்பால் இருத்தவே நான் வந்தேன். வா''

''எதற்கய்யா. எதற்கு இவனை இங்கு அழைத்தீர்கள். உங்களை ஏளனமாகப் பேசினேனே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஏன் இங்கு என்னை அழைத்தீர்கள்''.

''சுந்தரா என்னைப் பற்றிப் பாடு. அதற்காகத் தான் அழைத்தேன்''

''பாடுவதா ? செய்யுள் இயற்றுவதா? எனக்கு அந்த வித்தை தெரியாதே ! நான் படிப்பவனே தவிர படைப்பவன் இல்லையே. நான் கவிதைகளை ரசிப்பேனே தவிர ஆக்கியவன் இல்லையே''

''இல்லை. உன்னால் முடியும். நீஎன் தொண்டு ஆற்ற வந்திருக்கிறாய். எனக்காக வந்து பூமியில் பிறந்திருக்கிறாய். எனவே என்னைப் பற்றிப் பாடு'' என்று உரத்த குரலில் சொல்ல ''எனக்குப் பாட்டு எழுதிப் பழக்கமில்லையே'' சுந்தரர் சிணுங்க. ''பழக்கம் உண்டாகும், பாடு'' என இறைவன் கட்டளையிட்டார்.

''என்னவென்று பாடுவது''

''என்னைப் பைத்தியக்காரன் என்று தானே நடு சபையில் அழைத்தாய். என்னைப் பித்தன் என்றே பாடு. பித்தன் என்றே உன் பாடலைத் துவங்கு''.

**''பித்தாபிறைசூடி பெருமானே அருளாளா''...**

சுந்தரர் தன்னை மீறி பாடத் துவங்கினார்.

இறைவன் ஆணையிட்ட அந்தப் பாடல் பணி துவங்கியது. இறைவனுடைய லீலைகள்- அவனுடைய கணக்குகள் என்னவென்றே நமக்குத் தெரியாது. அவை ஏதோவொரு பித்துப் பிடித்தவனின் கிறுக்கல்கள் போல நம்மை நாலா திசைக்கும் இழுத்துப் போகின்றன. ஆனால், பித்துப் பிடித்தவன் போல அவன் நடந்து கொண்டாலும், அவன் பிறைசூடி சந்திரனைத் தலையில் சூடிக் கொண்டவன். குளுமையான புத்தியை உடையவன். நடுநிலை வகிப்பவன். அவன் செய்கைகளைக் கண்டு அவன் கோபமிக்கவன் என்றோ, அவன் நிலை தடுமாறிய புத்தியுடையவன் என்றோ எண்ண முடியாது. அவன் பிறை சூடியவன். சந்திரனைத் தலையில் தரித்தவன். குளுமையானவன்.

அடுத்த வார்த்தை இறைவனைத் தெரிந்து கொண்ட பெரும் வியப்பு அந்தப் பாட்டில் வந்தது. பெருமானே என்ற அலறல் வந்தது. அருளாளா... என்று அடுத்தபடி இறைவனைப் பார்த்ததும் கேட்டுக் கொண்டது.

''எனக்கு அருள் செய்- என்னை கவனித்துக் கொள். என்னை மேம்படுத்து'' என்றெல்லாம் அதில் பல்வேறு விஷயங்கள் தொக்கியிருக்கின்றன.

இடையறாது உன்னுடைய நினைப்பே என் மனதில் இருக்கின்றது. தென்பெண்ணை நதியோரம் திருவெண்ணெய்நல்லூரில் வசிப்பவனே .. அப்பா.. உனக்கு நான் ஆளானேன். அடிமையானேன். இனி நான் என்னை உனக்குத் தரமுடியாமல் போகுமோ ? தரமாட்டேன் என்று சொல்லத் தகுமோ ? தராமல் இருந்தால் விடுவாயோ?''. ஏனெனில் உனக்கு நான் ஆளாகிவிட்டேன். அடிமை .. அடிமை.. என்று தானே அழைத்தாய். ஆம். நான் உனது அடிமை. இனிமேல் என் கவலை நீங்கியது.

ஆண்டவனாகிய நீ, என்னை இனி கவனித்துக் கொள்ள வேண்டும் என்கிற சரணாகதி அங்கு வெளிப்பட்டுவிட்டது.

சுந்தரரின் வாழ்க்கையை இறைவன் திசைதிருப்பினான். இதைத் தடுத்தாட்கொள்ளுதல் என்று சைவசமயம் பெருமிதமாய் கூறுகிறது.

## ஆடிப்பௌர்ணமியின் விசேடம்



ஆடிப் பௌர்ணமியை 'வியாசர் ஜெயந்தி' என்றும் 'குருபௌர்ணமி' என்றும் சிறப்பிப்பர்.

வேதங்களை வரிசைப்படுத்தித் தொகுத்தவர்,

பதினெண் புராணங்களை எழுதி, மகாபாரதம் ஸ்ரீமத் பாகவதம் எழுதி - இறைவன் திருவிளையாடல்களைப் பூரணமாக எழுதி மக்கள் யாவரும் பயன்பெறச் செய்த மாபெரும் ஞானியாகிய வியாசர் தோன்றிய சிறப்புடைய நாள் என்பதால் ஆடிபௌர்ணமி நாள் 'வியாசர் ஜெயந்தி' - 'குரு பௌர்ணமி' எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

- தகவல், இராமகிருஷ்ணன், மும்பை.

வாசகர் எண்ணங்கள்

## வாசகர் எண்ணங்கள்



''திருக்கோயில்'' இதழ் படிப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. புண்ணிய திருக்கோயில்கள் பலவற்றைத் தரிசித்த பரமானந்தம் உண்டாகிறது.

- வி.என்.சி. குமார்.
தலைவர், திருமுறைக்கழகம், பவானி.

திருவிழாக்களின் கண்ணாடி இது.
ஊரு புகழும் தகவல்கள் தருவது இது.
விழாக் கோலம் கொண்டது இது.
தக்க கோயில்களில் காணக் கிடைப்பது இது.
வண்ணமயில் போன்றது இது.
ஆன்மீக எல்லையைக் காட்டுவது இது.
அது எது ?
''திருக்கோயில்'' இதழ் தான் அது. படித்ததில் எண்ணற்ற மகிழ்ச்சி,
பாராட்டுகள்.

என்றும் உங்கள் வாசகன்
- மு. ரகுநாதன், சேலம்-6.

# அசுவமேதயாகப் பலன் தரும் சோமசூக்தப் பிரதட்சணம்

இந்திராதி தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் பெற முயன்றார்கள்.

மந்திரகிரியை மத்தாகவும், வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள்.

திருமால் கூர்மமாகி, மந்திரகிரியைத் தம் முதுகில் தாங்கினார். அசுரர்கள் வாசுகியின் தலைப்புறமும், தேவர்கள் வால்புறமும் நின்று பாற்கடலைக் கடைந்தார்கள்.

பாற்கடலைக் கடைந்த நாள் தசமி திதி. மறுநாள் ஏகாதசியன்று பாற்கடலைக் கடைந்த போது, வாசுகி வருத்தம் தாங்காமல் பதைபதைத்து நஞ்சைஉமிழ்ந்தது. கடலிலிருந்தும் நஞ்சு தோன்றியது.

வாசுகி கக்கிய ஆலமும், கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து '' ஆலாலம் '' என்று பெயர் பெற்றது.

இந்த ஆலாலம் மிகுந்த வெப்பத்துடன் வெளிப்பட்டு விண்ணவரை வலமாகவும் இடமாகவும் மறித்துத் தாக்கியது.

வானவர்கள் அஞ்சி திருக்கயிலாயம் சென்று சிவபெருமானைத் தஞ்சம் அடைந்து முறையிட்டார்கள்.

கருணையே வடிவமான கண்ணுதற்கடவுள் தம் அருகிலிருந்த சுந்தரரைப் பார்த்து '' சுந்தரா ! அவ்விடத்தை இவ்விடம் கொண்டு வா '' என்று பணித்தார்.

மால்அயன் ஆதி வானவர்களால் அணுக முடியாத அதிபயங்கரமான கொடிய விடத்தைச் சுந்தரர் நாவல்பழம் போலத் திரட்டி உருட்டிக் கொணர்ந்து சிவபெருமானிடம் தந்தார்.

சிவபெருமான் அந்தக் கொடிய விடத்தை அமிர்தம் போல் உண்டு அருளினார்.

ஆலாலவிடம் உள்ளே சென்றால் உள்முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். அதை உமிழ்ந்தால் வெளிமுகத்தில் உள்ள உயிர்கள் அழிந்து விடும்.

ஆதலால் உண்ணாமலும், உமிழாமலும் ஆலாலத்தைக் கண்டத்தில் தரித்தருளினார் கருணையங்கடவுளான கண்ணுதற்பெருமான்.

இறைவன் ஆலகால விடத்தை உண்டிருக்க வில்லையானால், பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் உள்ளிட்ட யாவரும் அன்றே மாண்டு இருப்பார்கள்.

எல்லோருடைய கண்டத்தையும் எந்தைப்பிரான் கண்டம் தீர்த்தருளியது. அதன் காரணமாக சிவபெருமான் மணிகண்டர், நீலகண்டர் என்று பேர்பெற்றார்.

மீண்டும் பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கடையப் பாற்கடலிலிருந்து லட்சுமி, ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச் சிரவம் முதலியன ஒவ்வொன்றாகத் தோன்றின.

திருமகளைத் திருமால் ஏற்றுக் கொண்டார். பிறவற்றை இந்திராதி தேவர்கள் அடைந்தார்கள்.

ஏகாதசியாகிய அன்று இரவு முழுவதும் அவர்கள் உறக்கம் இன்றிப் பாற்கடலைக் கடைய மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் பாற்கடலிலிருந்து அமுதம் தோன்றியது.

அமுதத்தைத் தேவர்கள் பகிர்ந்து உண்டு ஆடியும், பாடியும் பொழுதைப் போக்கினரே அன்றித் தமக்கு அமுதம் கிடைப்பதற்குக் காரணமான சிவபெருமானை அன்று முழுதும் அவர்கள் நினைந்து வழிபடவில்லை.

மறுநாள் திரயோதசி அன்று சிவபெருமானை வணங்காத தம் குற்றத்தை உணர்ந்து திருக்கயிலை சென்று தம்மை மன்னித்துப் பிழை பொறுத்து அருளுமாறு வேண்டினார்கள்.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் தேவர்களின் குற்றத்தைப் பொறுத்தருளிய அன்று பிரதோஷ வேளையில் (மாலை 4.30 மணி முதல் 6 மணிவரை உள்ள காலம்) தம் திருமுன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று, அம்பிகை காணத் திருநடம் செய்தருளினார். தேவர்கள் சிவபெருமானின் திருநடம் தரிசித்துத்



# திருநீற்றின் மகிமை



அநேகம் பிறவிகளில் செய்த பாவங்களை நீறாகச் செய்வதால் ''திருநீறு'' என்பது பெயர் ஆகும்.

சம்பத்தைக் கொடுப்பதால்

பூதி:

தனக்கு மேலான ஐசுவர்யம் இல்லாதத ல் விபூதி என்று பெயர் வழங்குகின்றது.

கங்கை முதலான புண்ணிய நதிகளில் கோடிமுறை நீராடிய புண்ணிய பலன்கள் யாவும், தேகம் முழுவதும் உத்தூளனமாக விபூதியைத் தரித்துக் கொள்வதால் உண்டாவதாகக் காமிக ஆகமம் கூறுகின்றது.



துதி செய்து வணங்கிப் போற்றலானார்கள். அதுமுதல் திரியோதசி திதியன்றைய மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கி வருகின்றது.

பிரதோஷத்தின் போது சிவபெருமானை பிரதட்சணம் செய்யும் முறைக்கே ''சோம சூக்தப் பிரதட்சணம்'' என்று பெயர் ஆகும்.

ஆலகாலவிடம் தேவர்களை முன்னும் பின்னும் வலமும் இடமுமாகத் துரத்தியது அல்லவா! அப்போது தேவர்கள் வலமும் இடமுமாக வந்த அந்த நிகழ்ச்சிதான் சோம சூக்தப் பிரதட்ணம் எனப் பெயர் பெற்றுள்ளது.

முதலில் சிவலிங்கத்தையும் ரிஷபதேவரையும் வணங்கிக் கொண்டு, அப்பிரதட்சணமாகச் சண்டேசுவரர் சந்நிதிவரை சென்று அவரை வணங்கிக் கொண்டு, அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு, வழக்கம் போல் பிரதட்சணமாக ஆலயத்தை வலம் வரும்போது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே வந்த வழியே திரும்பி அப்பிரதட்சணமாக சந்நிதிக்கு வந்து சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்க வேண்டும்.

இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இவ்வாறு வழிபட்டால் அநேக அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்று நூல்கள் கூறுகின்றன.

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் நந்திதேவரின் இரு கொம்புகளுக்கு இடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடம் புரிந்தார்.

அப்போது சரசுவதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினான். பிரம்மதேவர் தாளம் போட்டார். லட்சுமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார்.

தேவர்கள் முனிவர்கள் வித்தகர்கள் யாவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபடுகிறார்கள்.

தேவர்கள் பிரதோஷ வழிபாடு செய்வதோடன்றி அவ்வழிபாட்டிற்குத் தாங்களே முன்வந்து உதவுகிறார்கள் என்று பிரமோத்தர காண்டம் தெரிவிக்கின்றது.

சனிக்கிழமை வரும் பிரதோஷம் மிகவும் விசேடமானது. இது மகாப்பிரதோஷம் ஆகும்.

சனிப்பிரதோஷத்தன்று பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் இறை வழிபாடு செய்தால் ஐந்து வருடம் தினமும் தவறாமல் ஆலய வழிபாடு செய்த பலன் கிடைக்கும்.

பிற பிரதோஷங்களில் ஆலய வழிபாடு செய்தால் ஒரு வருடம் தினமும் தவறாமல் இறை வழிபாடு செய்த பலன் கிடைக்கும்.

சோம சூக்தப் பிரதட்சணம் செய்து பிரதோஷ வழிபாடு செய்தால் அநேக அசுவமேத யாகங்கள் செய்த பலனைப் பெறுவர் என்பது திண்ணமாகும்.



**2005 -ம் வருடத்தின் பிரதோசநாட்கள்**

| | | |
|---|---|---|
| ஜுலை | 3 ஞாயிறு 19 செவ்வாய் | |
| ஆகஸ்டு | 2 செவ்வாய் | 17 புதன் |
| செப்டம்பர் | 1 வியாழன் | 15 வியாழன் |
| | | 30 வெள்ளி |
| அக்டோபர் | 15 சனி | 30 ஞாயிறு |
| நவம்பர் | 13 ஞாயிறு | 29 செவ்வாய் |
| டிசம்பர் | 13 செவ்வாய் | 28 புதன் |

# பதில்



★ சுமதி, சேலம் -2.

**கேள்வி :** *ஆடிமாதம் வெள்ளிக்கிழமைக்கு என்ன விசேடம் என்பதை விவரிக்கவும்*

**பதில் :** அம்பாளுக்குரிய கிழமை என்பதால் எல்லா வெள்ளிக்கிழமைகளுமே விசேடமானவைதான்.

ஆடிமாதம் மற்றும் தைமாதம் வரும் வெள்ளிக் கிழமைகள் கூடுதல் விசேடம் பெறுகின்றன.

அதற்குக் காரணம் தட்சிணாயத்தின் ஆரம்பம் என்பதால் ஆடிமாதத்திற்குச் சிறப்பு.

உத்தராயணத்தின் ஆரம்பம் என்பதால் தை மாதத்திற்குச் சிறப்பு.

இவ்விரு மாதங்களிலும் வரும் வெள்ளிக் கிழமைகள் மிகவும் விசேடமுடையனவாகக் கொள்ளப்படுகின்றன.

மேலும் இவ்விரு மாதங்களிலும் வரும் அமாவாசை, கிருத்திகை நாட்களும் கூட ஆடி அமாவாசை, ஆடி கிருத்திகை. தை அமாவாசை, தைகிருத்திகை எனச் சிறப்பினைப் பெறுகின்றன.

**★ சுப்பிரமணி, திருவள்ளூர்.**

**கேள்வி :** *பூஜை முறைகளில் ஐவகை சுத்திகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்கிறார்கள். பஞ்சசுத்தி என்ன என்பதை விளக்கவும்.*

**பதில் :** ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி என்பனவே பஞ்சசுத்தி எனக் கூறப்படும்.

1. ஆத்மசுத்தி - பூஜை செய்பவர் தம் உடம்பையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்.
2. ஸ்தானசுத்தி - பூஜிக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்.
3. திரவிய சுத்தி - பூஜைக்குரிய பாத்திரங்களை நன்கு தூய்மைப்படுத்திப் பூஜைக்குரிய பொருள்களில் அர்க்கிய நீரைத் தெளித்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்.
4. மந்திரசுத்தி - மூல மந்திரங்களை முறைப்படி ஜெபித்தல்.
5. பிம்பசுத்தி- அபிசேகப் பாத்திரத்தில் நீர் நிரப்பி, அதில் தீர்த்தங்களை ஆவாகனம் செய்து, தெய்வத்திருமேனிகளை அபிஷேகம் செய்து சுத்தமான ஆடை அணிவித்தல் வேண்டும்.

**★ கல்யாணி, கும்பகோணம்.**

**கேள்வி :** *கர்ப்பக்கிரகத்தினுள் இருக்கும் மூலவருக்கும், அவருக்கு எதிரில் இருக்கும் நந்திக்கும் இடையில் நின்று வணங்கக் கூடாது என்கிறார்களே ! அது ஏன் என்பதை விளக்கவும்.*

**பதில் :** ஆலய ஆகம விதிப்படி கர்ப்பக்கிரகத்தினுள் இருக்கும் மூலவருக்கும், எதிரில் நந்தி இருக்கும் இடத்திற்கும் இடையில் நின்று வணங்குதல் கூடாது.

ஆலய சாஸ்திரப்படி மூலவருக்கு முன்னால் உள்ள நந்தி தம் மூக்கிலிருந்து விடும் மூச்சுக் காற்றினால் தான் கர்ப்பக்கிரகத்திலுள்ள மூலவருக்கு உயர்நிலை உண்டாவதாகக் கூறப்படுகின்றது.

இதனால்தான் மூலவரின் வயிற்றுப்பகுதி கொப்பூழ் (தொப்புள்) பாகத்தை உயர்நிலையாகக் கொண்டு அந்த இடமட்டத்தின் நேராக நந்தியின் மூக்கு அமையுமாறு ஆலயங்களில் நந்தி அமைக்கப் படுகின்றது. நந்தியின் மூச்சுக்காற்று தடைப் படாமல் மூலவரைச் சென்று சேர வேண்டும் என்பதனாலேயே மூலவர், நந்தி குறுக்கே போவதும் இங்கு வீழ்ந்து வணங்குவதும் கூடாது என்று முறைப்படுத்தியுள்ளனர்.

**★ விசுவநாதன், மாமல்லபுரம்.**


**கேள்வி :** *தீக்கை என்பதன் பொருளை விளக்கவும்.*

**பதில் :** குரு, தம் சீடருக்குச் செய்யும் அருள் உபகாரமே தீட்சை. இது தமிழில் 'தீக்கை' என வழங்கப்படுகின்றது.

தீ + க்ஷா = தீக்ஷா. ஞானத்தை அருளிப் பாவத்தைப் போக்குவது என்பது இதன் பொருள் ஆகும்.

இனி, தீட்சையின் சில வகைப்பாடுகளைக் காணலாம்.

1. சமயதீட்சை: சரியை மார்க்கம் தொடங்குமுன் சீடருக்குக் குருவால் செய்யப்படுவது.
2. விசேஷ தீட்சை: கிரியை மார்க்கத்திற்கு முன் சீடருக்குக் குருவால் செய்யப்படுவது.
3. நிர்வாண தீட்சை: யோகத்திற்கும், ஞானத்திற்கும் முன் குருவால் செய்யப்படுவது.
4. ஸ்பரிசதீட்சை: குரு, தம் திருக்கரங்களால் சீடனைத் தொட்டு வழங்குவது.
5. நயன தீட்சை: குரு தம் அருட்பார்வையால் சீடனை நோக்கியருள்வது.
6. மானசதீட்சை: குரு தம் மனத்தால் சீடனது மனதைத் தன்வயப்படுத்துவது.
7. வாசக தீட்சை: வாசகம் என்பது உபதேசம். இது குரு உபதேசம் எனப்படும். நல்ல அருள்வாக்குகளைக் குரு சீடனுக்கு உபதேசிப்பது.



# திருமந்திர உபதேசம்

"திருமந்திரச்செல்வர்" டி.வி. வெங்கட்ராமன், இ,ஆ.ப. (ஓய்வு)

சீடன் ஞானாசிரியனிடம் சிவத்தைப் பார்க்கின்றான். தூய்மையடைந்த அவனது உள்ளம் குருவைச் சிவனாகவே தெரிந்து கொள்கிறது. **"குருவே சிவமெனக் கூறினன் நந்தி"** என்றார் திருமூலர். குருவிடமிருந்து மேலும் சிவப்பரம் பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவது இயற்கை. குருவிடமிருந்து இந்த ஞானத்தைப் பெற்று, அதிலே ஆழ நின்று, சிவமாம் தன்மையை பெறுவதும் சீடனின் நோக்கமாகும்.

**"ஏதுக்களாலும். எடுத்த மொழியாலும் மிக்கு சோதிக்க வேண்டாம் ; சுடர் விட்டுளன் எங்கள் ஜோதி"** என்று சொன்ன திருஞானசம்பந்தப் பெருமான் சிவபெருமானுடைய உண்மை அல்லது சொரூப நிலையைக் கோடிட்டுக் காட்டுகிறார். அப்போது சிவப்பரம்பொருளுக்கு பராபரசிவம் என்ற பெயர் உண்டு. அதையே சத், சித், ஆனந்த நிலை என்றும் சொல்வர். வாக்குக்கும், காட்சிக்கும் எண்ணங்களுக்கும் அப்பாற்பட்ட அந்த நிலையில், சிவமும், சக்தியும் ஒன்றேயாய் இருக்கும். இதை தாதான்மிய சம்பந்தம் என்பார்கள். இங்கே சக்திக்குப் பராபரை என்ற பெயருண்டு. பராபரமாக நிற்பதே சிவத்தின் சொரூப, அல்லது உண்மை நிலையாகும். அதுவே அதன் இயற்கைத் தன்மை. பராபரையாக நிற்பதே சக்தியின் சொரூப நிலை, இயற்கைத் தன்மை. இந்த நிலையில் சிவமும் சக்தியும் ஞானமேயாயிருக்கும். பராபரைக்குப் பராசக்தி என்ற பெயரும் உண்டு. இது பரநிலை, அல்லது மேல்நிலை.

இயற்கை நிலையில் உள்ள பராபர சிவம், உயிர்களை உய்விக்கவேண்டும் என்று திருவுள்ளம் கொள்கிறது. உயிர்களை, அவற்றின் பக்குவத்திற்கேற்ப தனது திருவடிநிழலில் அமர்த்திக் கொள்ளவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் உயிர்கள் பல பிறவிகளில் சேர்த்து வைத்திருக்கும் வினைப்பயன்களை அனுபவித்துத் தீர்க்க வேண்டும்.

உயிர்கள் அறிவுப் பொருள்கள். ஆனால் உயிரினது அறிவு குறைபாடு உடையது. தான் சார்ந்த பொருளின் தன்மையைத் தான் ஒரு சமயத்தில் அறிவாகப் பெற்றுக் கொள்ளும். தான் காணும் எல்லா பொருட்கள் பற்றிய அறிவினையும் உயிராய் ஒரே நேரத்தில் பெற இயலாது. எல்லாவற்றிற்கும் மேலாக, உயிரினது அறிவு தானாக இயங்காது. இயக்கினால் தான் இயங்கும். இறைவனுடைய பேரறிவு இயக்கினால்தான் உயிரறிவு இயங்கும்.

உயிர், தான் அனுபவிக்க வேண்டிய வினைப் பயன்களை, உடல் மூலமாக வினைகளைச் செய்து பெறுகிறது. ஆகவே வினைப்பயன்கள் அனுபவித்துத் தீர்த்துக் கொள்ள உடல் தேவைப் படுகிறது. கருவிகள் வேண்டும். உலகமும் தேவை. தனு, கரண, புவன போகங்கள் என்பார்கள். எனவேதான் நாம் எடுக்கும் உடலை வினை உடல் என்று கூறுவதுண்டு.

உடல் இல்லாமல் உயிர் இருக்கும் நிலை கேவல நிலை. அப்போது உயிர் ஆணவமலத்தால் மூடப்பட்டுக் கிடக்கும். தனியாக ஒன்றும் செய்ய இயலாது. உடல் இல்லாமல் எதையும் அனுபவிக்கவும் இயலாது.

உயிர்கள் உய்தி பெறுவதைப் படிநிலை வளர்ச்சி என்று சான்றோர் சொல்வர். படிநிலை வளர்ச்சி பெறுவதற்கும், உடலும் கருவிகளும் உலகமும் தேவைப்படுகின்றன.

பராபரசிவம், உயிர்கள் உய்தி பெற வேண்டு மென்று பெறுகிற விருப்பமே, உலகத் தோற்றத்திற்குத் தொடக்க நிலையாகும். அப்போது பராபரசக்தி, ஆதிசக்தியாய் நிற்கும். அது உலகத்தை நோக்கி வரும் நிலையானதால், அதை **"விண்ணின்று இழிந்து வந்த தண் நின்ற நிலை"** என்று திருமூலர் பெருமான் விளக்குகிறார்.

ஆதிசக்தி உலகத்தை நோக்கி நிற்கும் போது திரோதான சக்தி, திரோதாயி என்றெல்லாம்

அழைக்கப்படுவாள். இந்தச் சொல்லுக்கு மறைக்கும் ஆற்றல் என்ற பொருள் உண்டு. இந்த ஆற்றலின் செயல் பாட்டின் விளைவாக உயிர்கள் உலகத்தோடு தொடர்பு கொள்ளும் உடலையும், உலகத்தையும் உண்மைப் பொருள்கள் என்றும், நிலைபேறுடைய பொருள்கள் என்றும் கருதும். இந்த ஆற்றல் வழி செல்லும் உயிர் தன்னைத் தெரிந்து கொள்ளாது; கடவுளையும் அறிந்து கொள்ளாது.

அளவற்ற ஆற்றலை உடைய சிவப்பரம் பொருள் தம் சக்தியின் ஒரு சிறு கூற்றால், இந்த பிரபஞ்சஇயக்கத்தை உயிர்களின் நலனுக்காக செய்து வைக்கின்றார். இதை உடலில் புகுந்த உயிர்கள் தெரிந்து கொள்வதில்லை. எல்லாம் தனது ஆற்றலால்தான் நடக்கின்றன என்றே தவறாகக் கருதுகிறது.

உயிர் தொன்று தொட்டு ஆணவ மலத்தால் கட்டுண்டு நிற்கிறது. உடலோடும், கருவிகளுடனும் பிறவி எடுக்கும் போது இணைந்த நிலையில். உயிர், வினைகளைச் செய்யச் தொடங்குகிறது. முன்னம் பிறவிகளின் வினைப் பயன்களை அனுபவிக்கவும் செய்கிறது. இதற்கெல்லாம் அடிப்படையாக உலகமும். மற்ற பொருட்களும் மாயா கருவிகளாக அமைகின்றன. மாயை என்பது மனநிலையல்ல. ஆதிசக்தி, உலக சிருஷ்டிக்காக, எடுக்கும் பரிணாமங்கள் மாயா காரியங்களான பொருட்களைத் தோற்றுவிக்கின்றன. உயிர், ஆணவம், கன்மம் மாயை ஆகிய மலங்களால் கட்டுண்டு செயல்படும்போது. பெத்த நிலையில் உள்ளது.

உயிர் பெத்த நிலையிலிருந்து விடுபட்டு முத்தி நிலைக்குச்செல்ல வேண்டும்.

பெத்த நிலையில் உயிர் திரோதன சக்தியின் வழி நின்று செல்கிறது. **''முன் தலைக்காவல் வைத்து''** என்கிறார் திருமூலர். வினை உடலை இயக்கி, கன்மங்களைச் செய்து இன்ப, துன்பங்களை அனுபவித்து இறப்பு - பிறப்பு என்னும் சூழலில் மாட்டிக் கொள்கின்றன. உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம் இதற்குப் பெரிய பொறுப்புடையதாகிறது.

சிவப்பரம்பொருள் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு வெறுமனே இருக்கவில்லை. அப்பாலுக்கு அப்பாலாய் இருக்கும் ஞானப்பொருள், உயிருக்கு உயிராகவும், உயிருக்கு வேறாகவும் உயிருக்குத் தோன்றாத் துணையாகவும் இயங்குகின்றது. அந்த வகையில் உயிர், தனது வினைக்கேற்ப எடுத்துக் கொண்டிருக்கும் உடலில் தனக்கும் இடம் அமைத்துக் கொள்கிறது. திருமூலர் இந்த நிலையை **''வினைக்கீடாய் மெய்கொண்டு''** என்கிறார்.

உயிர்கள் அடையும் பக்குவம் ஒரே தன்மையுடையதாக இருக்காது. சைவசித்தாந்த நூல்கள் உயிர்களை மூன்று வகையாகத் தொகுத்து உள்ளன. உயிர்கள் வெவ்வேறு பக்குவ நிலைகளில் சகலர், பிரளாயாகலர், விஞ்ஞானகலர் என்று பெயர் பெறும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் உடையவர்கள் சகலர். சகலர் கன்மத்தைக் கழித்தாலும், மாயையை விலக்கிக் கொண்டாலும், திருவருளால்தான் அவர்களுடைய ஆணவமலத்தை வலுவிழக்கச்செய்ய இயலும்.

மாயை நீங்கி இருமலமுடையவர்கள் பிரளயாதலர்கள், விஞ்ஞானகலர்கள் மாயை, கன்மம் ஆகிய இருமலங்களும் நீங்கப் பெற்றவர்கள். ஆணவத்திலிருந்து விலகிக் கொள்வது இவர்களுடைய சாதனையாகும்.

பல பிறவிகளை எடுத்த உயிர் ஒரு விதமான இளைப்பினைப் பெறுகிறது. அதனை நீக்க இறையருளை நாடுகிறது. **''தளர்ந்தேன், தாங்கிக் கொள்ளே''** என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

இறைவன் உள்நின்று உருக்குகிறான். அதுவே அவனுடைய பணி. அவன் உருக்குவது உடலையல்ல; உயிரை. உயிரின் தன் முனைப்பு பிறவிதோறும் வளர்கிறது. அதனுடைய உலக அறிவும். ஆசாபாசங்களும் வளர்ந்து வருகின்றன. இவையெல்லாம் ஆணவத்திற்குப் பெரும் விருந்து போல உயிரைச் சுற்றியுள்ள அறியாமையாகிய இருள் திரையும் தடித்துக் கொண்டே போகின்றது. இவற்றையெல்லாம் தன்மை இழக்கச் செய்வதுதான் இறைவனுடைய வேலை.

**''பாவியேனுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்தமாயத்**
**தேனினைச் சொரிந்து ....''**

என்கிறார் மாணிக்கவாசக பெருமான்.

(தொடரும்)

## திருமண்ணின் மகிமை



திருநாராயணபுரத்தில் கிடைக்கும் ஒருவகை வெள்ளை மண்ணில் செய்யப்படுவதே நாமக் கட்டியாகும். இதனை நெற்றியில் இட்டுக் கொள்வதே ''திருமண்காப்பு'' எனச் சொல்லப் படுகின்றது.

பரந்தாமனின் பாதாரவிந்தமே உயிருக்குக் கதி என்பதை உணர்த்தும் பொருட்டுத் திருவடி போன்று இடப்படுகின்றது.

மத்தியில் இடப்படும் செந்தூரம் இலக்குமியின் அம்சம்.



# ஆரூரானை மறக்கலும் ஆமே!

திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

சிவபெருமானின் அணுக்கத் தொண்டர் சுந்தரர். கயிலாய நந்தவனத்தில் இறைவனுக்காக மலர் பறிக்க வந்தார். அவ்வாறே பராசக்திக்காக மலர் பறிக்க வந்தனர் அனிந்திதை, கமலினி எனும் இரு சேடியர்கள்.

உத்தம சிவபக்தரான சுந்தரர் இவ்விரு பெண்களின் மேல் தம் நாட்டத்தைச் செலுத்தியதை அறிந்து கொண்டார் சிவபெருமான்.

''பெண்கள் மீது ஆசைகொண்டனை. ஆகவே தென்னாட்டில் பிறந்து அவர்களுடன் இன்ப வாழ்வு வாழ்ந்து வருக'' என்றார் இறைவர்.



''அடியேன் புவியில் மனிதனாய்ப் பிறந்து உம்பணி மறப்பேன் ஆகில் நீரே வந்து எம்மைத் தடுத்தாட்கொள்ளல் வேண்டும்'' என்று வரம் வேண்டினார் சுந்தரர்.

அவ்வாறே தடுத்தாட்கொள்வதாக உறுதி கூறினார் சிவபெருமான்.

மாதவம் செய்த புண்ணிய தமிழகத்தில் திருமுனைப் பாடி நாட்டில் திருநாவலூரில், வேதியர் குலத்தில் சடையனார் - இசைஞானி தம்பதியர் திருமகனாராகத் திருஅவதாரம் செய்தார் சுந்தரர்.

நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசரின் வளர்ப்பு மகனாய் வளர்ந்து வாலிபப் பருவமுற்ற சுந்தரருக்குப் பெற்றோரும், உற்றோரும் திருமண ஏற்பாடு செய்தனர்.

கமலினி - அனிந்திதை என்னும் இரு கயிலாய மங்கையரை மணப்பதற்கு மட்டுமல்லாமல், திருத்தொண்டர் பெருமை போற்றும் 'திருத்தொண்டர்த் தொகை' பாடிச் சைவ சமயத்தை மலர்ச்சி பெறச் செய்ய திருஅவதாரம் புரிந்த பெருமகனாரே சுந்தரர்.

**''மாதவம் செய்த தென்திசைவாழ்ந்திட
தீதிலாத் திருத்தொண்டர் தொகைதரப்
போதுவார் அவர் மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்''**

என்று அவர்தம் அவதார நோக்கம் சைவ சமய மறுமலர்ச்சியே என்பதைத் தெளிவுபடுத்துகின்றார் சேக்கிழார்.

தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று சுந்தரர் கயிலையில் சிவபெருமானை வேண்டிக் கொண்டதற்கு இணங்கவே திருமண மண்டபத்திற்கு ஒரு வயோதிகராய் வந்து ''வழக்குள்ளது'' என்று வாதிட்டுச் சுந்தரருக்குத் திருக்காட்சி வழங்கி அவரைப் ''பித்தா'' எனத் தொடங்கிப் பாடுமாறு அறிவுறுத்திப் பணி கொள்கின்றார் சிவபெருமான்.

சுந்தரருக்குத் ''தமிழ் சமர்த்தர்'' என்றொரு பெயரும் உண்டு. ஒரு திருமணத்தைத் தடுத்த இறைவரையே தாம் பணி கொண்டு, அவரால் இரு திருமணங்கள் செய்து கொண்டு, தாம் வாழ்ந்திருந்த குறுகிய 18 ஆண்டுக் காலத்திற்குள் தமிழையும், சைவத்தையும் வளர்ச்சி பெறச் செய்த தமிழ் சமர்த்தர் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவார்.

மாதவ சிவஞான மாமுனிவர் சுந்தரரின் சமர்த்தைப் போற்றியுள்ள அற்புதமான பாடல் இது:

**''ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாள் என்றும்
திருமணக் கோலப் பெருமாள், மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வம் ஆமால்''**

சுந்தர மூர்த்தி நாயானரை நமது குலதெய்வம் என்று தமிழ்ப் பெருமக்கள் கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் மாதவ சிவஞான மாமுனிவர்.

அத்தகைய சுந்தரர் 18 ஆண்டுக் காலம் இப்பூவுலகில் வாழ்ந்து, நமக்கெல்லாம் அறிவுறுத்தியுள்ள ஒப்பற்ற உண்மை யாதெனின் சகோதரத்துவம், சமத்துவம் என்பதாகும், இறைவன் படைத்துள்ள ஆறறிவு உயிர்களாகிய மாந்தர்கள் நாம், சகோதரத்துவமும், சமத்துவமும் வளர்த்தல் வேண்டும் என்பதைத் திருத்தொண்டத் தொகை வாயிலாக் வலியுறுக்குகின்றார்.

***''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்***
***திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்***
***இல்லையே என்னாத இயற்பகைக்கும்அடியேன்***
***இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்***
***வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக்கு அடியேன்***
***விரி பொழில் சூழ் குன்றையார் விறன் மிண்டற்கு அடியேன்***
***அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்***
***ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே''***

ஒன்றுக்கு இரண்டு திருமணங்களைத் திருவருள் கூட்ட செய்து கொண்ட சுந்தரர் புலனின் பத்திற்கு இடமாகும் இல்லறத்தை வரவேற்றார் இல்லை.

***''பரிந்த சுற்றமும் மற்றவன் துணையும்***
***பலருங் கண்டழு தெழு உயிர் உடலைப்***
***பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தால்***
***பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து***
***கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்***
***கால காலனைக் கடவுளை விரும்பிச்***
***செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்***
***சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே***
***வேந்தராய் உலகாண்டு அறம் புரிந்து***
***வீற்றிருந்த இவ்வுடலிது தன்னைத்***
***தேய்ந்து இறந்து வெந்துயர் உழந்திரும் இப்***
***பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே!***
***பாந்தளங் கையில் ஆட்டுகந் தானைப்***
***பரமனைக் கடற் சூர்தடிந்திட்ட***
***சேந்தர் தாதையைத் திருத்தினை நகருள்***
***சிவக் கொழுந்தினைச் சென்றடை மனனே!''***

என்று புலனின்பம் மறந்து, புவிவாழ்வுத் துன்பம் என்பதை அறிந்து சிவபெருமானையே தஞ்சம் அடைதல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

***''வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்***
***பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்***
***தாழாது அறஞ்செய்மின் தடங்கண்ணான் மலரோனும்***
***கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரம் எனீரே''***

எனும் பாடலில் வாழ்வு நிலையாமையை, உடல் நிலையாமையை எடுத்துக் காட்டும் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைத் தஞ்சம் கொண்டு வாழ்வதால் உண்டாகும் செல்வம் முழுமையும் அறத்திற்கே செலவிட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

இறைவன் நம்குற்றங்களைப் பொறுத்து குறைவிலா வாழ்க்கை தரும் கற்பகம் ஆவான். அவனை ஒருபோதும் மறவாது வாழ்தல் வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

***''பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்***
***போகமும் திருவும் புணர்ப் பானைப்***
***பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்***
***பிழையெலாம் தவிரப் பணிப்பானை***
***இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா***
***எம்மானை எளிவந்த பிரானை***
***அன்னம் வைகும் வயற் பழனத்து அணி***
***ஆரூரானை மறக்கலும் ஆமே!''***
***''கற்பகத்தினைக் கனகமால் வரையைக்***
***காம கோபனைக் கண்ணுத லானைச்***
***சொற்பதப் பொருள் இருளறுத் தருளும்***
***தூய சோதியை வெண்ணெய் நல்லூரில்***
***அற்புதப் பழ ஆவணம் காட்டி***
***அடியானான என்னை ஆளது கொண்ட***
***நற்பதத்தை நள்ளாறானை அமுதை***
***நாயினேன் மறந்து என் நினைக்கேனே''***

என்று பாடியுள்ள சுந்தரர் வாக்கினையே மெய்வாக்காய் கொண்டு, மேன்மை நாம் பெற்று இன்புறுவோமாக!


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# தெய்வ சகாயம்

(நீதிக்கதை)

''அருளரசு'' திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்



பல்லவபுரம் என்ற நகரத்தைப் பராந்தகன் என்ற அரசன் அரசு புரிந்து வந்தான். அவன் தோள்வலியாலும் வாள்வலியாலும் மிகுந்தவன்.

அந்த அரசனுடைய அரண்மனையில் இரு வேலையாட்கள் இருந்தார்கள். ஒருவன் பேர் செல்லப்பன். மற்றொருவன் பேர் மல்லப்பன். செல்லப்பன் எப்போதும் ''தெய்வ சகாயம்'' என்று கூறிக் கொண்டிருப்பான். அரசனிடம் ஏதாவது ஒன்றைக் கொணர்ந்து தருகின்ற போது ''தெய்வ சகாயம்'' என்று கூறுவான். இருந்தாலும், நின்றாலும், சென்றாலும் ''தெய்வ சகாய'ம்'' என்று இனிது கூறுவான்.

மல்லப்பன் இதற்கு நேர்மாறாக ''ராஜ சகாயம்'' என்று கூறுவான். அரசன் தண்ணீர் கேட்டால், மல்லப்பன் தண்ணீரைக் கொணர்ந்து தரும்போது ''ராஜ சகாயம்'' என்று கூறுவான். அரசன் அவனை அழைக்கும்போதெல்லாம் ''ராஜ சகாயம்'' என்று கூறிக் கொண்டு வருவான். அரசன் இந்த இருவருடைய சொற்களையும் செயல்களையும் உற்று நோக்கினான். செல்லப்பன் தெய்வ சகாயம் என்கின்றான். மல்லப்பன் ராஜசகாயம் என்கின்றான். இந்த இருவரையும் சோதிக்க வேண்டும் என்று எண்ணினான்.

மந்திரியை அழைத்தார். ''மதிமிகும் அமைச்சரே ! நம்மிடம் உறையும் இந்த பணியாளர்களில் செல்லப்பன் எப்போதும் ''தெய்வசகாயம், தெய்வசகாயம்'' என்கின்றான். மல்லப்பன் எந்த நேரத்திலும் ''ராஜ சகாயம், ராஜ சகாயம்'' என்றே கூறுகின்றான். இவர்களை நீதக்கபடி சோதித்து உண்மையை உணர்ந்து எனக்கு உரைப்பாயாக'' என்றான்.

மந்திரி தனிமையில் அந்த இருவரையும் அழைத்தான். ''செல்லப்பா ! நீதெய்வசகாயம் என்கின்றாயே ? உன் கருத்து என்ன?'' என்று வினவினான்.

''ஆழாழி கரையின்றி நிற்பதும், அனைத்துலகில் உள்ள ஆருயிர்கள் எல்லாம் வாழ்வதும் தெய்வசகாயம். தெய்வசகாயம் இன்றி நாம் ஒரு கணம் வாழ முடியுமா? ஆதலால், தோன்றாத் துணையாக நமக்கு உதவி புரிகின்ற, உயிர்க்குயிராகிய தெய்வந்தான் நமக்குத் துணை. அதனால் தெய்வசகாயம் என்கின்றேன்'' என்றான்.

இதனைக் கேட்ட மந்திரி மகிழ்ச்சியுற்றான். அடுத்து மல்லப்பனை அழைத்து ''அப்பா ! மல்லப்பா ! நீராஜசகாயம் என்கிறாயே ! உன் கருத்து என்ன ?'' என்று கேட்டான்.

மல்லப்பன் ''அமைச்சர் பெருமானே! கடவுள் கண்ணுக்குத்தெரிகின்றதா? இல்லை. கண்ணுக்குத் தெரியாத கடவுளை நம்பி தெய்வசகாயம் என்பது பேதைமை. நமக்கு உணவு தந்து, உடை தந்து, பொருள் தந்து உதவுகின்றவர் அரசர் பெருமான். ஆதலால், கண்கண்டதெய்வம் அரசர். அதனால், நான்ராஜசகாயம் என்கின்றேன்'' என்றான் அவன்.

செல்லப்பனையும் மல்லப்பனையும் பார்த்து நீங்கள் இருவரும் 40 நாட்கள் இந்த நகரையும் நாட்டையும் விட்டு வெளியேறி வசிக்க வேண்டும். நாற்பது நாள் செலவுக்கு நாற்பது ரூபாய் தருகின்றேன். இதனைப் பெற்று, இங்கே இனி ஒரு விநாடி கூடத் தாமதியாமல் புறப்பட்டுப் போங்கள். நாற்பது நாட்கள் கழித்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

செல்லப்பனும் மல்லப்பனும் நாற்பது வெண் பொற்காசுகளை வாங்கிக் கொண்டு கிளம்பினார்கள். செல்லப்பன் சிரித்த முகத்துடன் 'தெய்வசகாயம்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

வாடிய முகத்துடன் 'ராஜசகாயம்' என்று கூறிவிட்டு மல்லப்பன் புறப்பட்டான்.

செல்லப்பன் அந்த நாட்டை விட்டுச் சென்றான். வழியில் ஒரு வரசித்தி விநாயகர் கோயில். அன்று சதுர்த்தி. நிரம்பப் பால் வாங்கிப் பிள்ளையாருடைய திருமேனி குளிர அபிசேகஞ் செய்தான். மிகுதியுள்ள ரூபாய்க்கு அரிசி வாங்கி சர்க்கரைப் பொங்கல் செய்து பிள்ளையாருக்கு நிவேதனஞ் செய்தான். அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு வழங்கினான். அந்த வறியவர்கள் சர்க்கரைப் பொங்கலை வயிறார உண்டு, செல்லப்பனை வாயார வாழ்த்தினார்கள்.

'தெய்வசகாயம்' என்று கூறிக்கொண்டே கால்போன வழியில் நடந்து ஓர் ஏரிக்கரை வழியே சென்றான். விசாலமான ஏரி. ஏரிக்கரையில் ஒரு குதிரை வண்டியில், வயது ஐந்து உள்ள ஓர் அரசகுமாரனை ஏற்றிக் கொண்டு அரசசேவகன் வண்டியை ஓட்டிக் கொண்டு வருகின்றான். பள்ளத்தை நோக்கி வண்டி கிடுகிடு என்று ஓடியது. குதிரை மிரண்டு வண்டியுடன் ஏரியில் விழுந்தது. குதிரை, வண்டியோட்டும் பாகன், மன்னவன் மகன் மூவரும் ஆழமான ஏரியில் விழுந்தார்கள். கரையில் வழி நடக்கும் செல்லப்பன் கண்டான். கருணை

கொண்டான். தன் உயிரைத் துரும்பாக நினைத்து, ஏரியில் குதித்தான். முதலில் ராஜகுமாரனைக் கரையேற்றினான். பிறகு வண்டிக்காரனைக் கரையேற்றினான். ஒருவாறு குதிரையும் பிழைத்தது. இந்தப் பேராபத்திலிருந்து செல்லப்பன் காத்தருளினான். அரசகுமாரனும் வண்டிக்காரனும் அரண்மனைபோய் இந்த நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

மன்னவன் கேட்டு அதிசயம் அடைந்தான். உடனே ஓடி ஏரிக்கரையை அடைந்தான். செல்லப்பனை கண்டு கைகூப்பிக் தொழுதான். அவன் அரசனைப் பார்த்து 'தெய்வ சகாயம்' என்றான்.

''செல்லப்பா ! தெய்வம் உன் மூலம் என் அருமந்த மகனைக் காத்தது. செல்லப்பா ! நீநல்லப்பா ! என் அரண்மனைக்குச் செல்லப்பா '' என்று நன்றியறிவுடன் கூறினான். அவனை அன்புடன் அரண்மனைக்கு அழைத்துப் போய், பலவகை உபசாரங்கள் புரிந்தான். இனி எங்கும் செல்லாதே. என் சொல்லுக்கு மறுப்பு சொல்லாதே. இங்கேயே இரு'' என்று கூறி அரண்மனையில் பரம சுகமாக வைத்து உணவும் உடையுந்தந்து உபசரித்து வந்தான்.

மல்லப்பன் 'ராஜ சகாயம்' என்று கூறிச் சென்றான். வழியில் ஒரு சத்திரத்தில் சோறுண்டு படுத்தான். கள்வர்கள் அவனிடம் இருந்து நாற்பது ரூபாயைக் கவர்ந்து சென்றார்கள். மல்லப்பன் கண் விழித்து எழுந்தான். காசு போனதையறிந்து கவன்றான். கண் கலுழ்ந்தான். ''இனி என் செய்வது? எங்கு போவது ? என் கதி அதோ கதியாயிற்றே ?'' என்று வருந்தினான். பட்டினியால் வாடிப் பரிதவித்தான். உடல் இளைத்தது. கால் தேய நடந்து செல்லப்பன் இருக்கும் நகரத்துக்கு வந்தான். அந்த நகரத்தின் நந்தவனத்தில் சோர்ந்து அமர்ந்தான்.

அந்த நந்தவனத்தில் ஒரு பூமரத்தின் கீழ் அரசகுமாரன் கண் துஞ்சிக் கொண்டிருந்தான். அரசன் நெடுந்தொலைவில் உலாவிக் கொண்டு இருந்தான்.

அந்த மரத்தின் மீது ஒரு கருடன் ஒரு பாம்பைக் காலால் கொத்தித் தின்றுக் கொண்டிருந்தது. பாம்பின் விஷம் அரசகுமாரன் கழுத்தின் மீது விழுந்தது. மல்லப்பன் ஓடி ராஜசகாயம் என்று கூறி, தன் கையில் இருந்த சிறு கத்தியால் அந்த விஷத்தைச் சுரண்டியெடுத்தான். கருடன் பாம்புடன் பறந்து போய்விட்டது. தொலைவில் உலாவிக் கொண்டிருந்த அரசன் ஓடி வந்தான். மல்லப்பன் மன்னவன் மகன் கழுத்தில் கத்தியை வைத்துச் சுரண்டியதைப் பார்த்த அரசன் ஆலகாலம்போல் சீறினான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மல்லப்பன் கையிலுள்ள கத்தியைப் பிடுங்கி எறிந்தான். அவன் கன்னத்தில் 'பளார் பளார்' என்று நான்கு அறைகள் தந்தான். ''**'சண்டாளா ! கத்தியால் என் மகனைக் கொல்ல முயன்றனையா ? ஆ! நீமனிதனா ? பாவி! உனக்கு என்ன கேடு ?'** என்று கூறிச்சீறி வைதான்.


மல்லப்பன் மன்னவன் மலரடி மீது விழுந்து வணங்கினான். 'மன்னவரே ! ராஜசகாயம். நான் தங்கள் புத்திரரைச் சத்தியமாகக் கொல்ல முயன்றேனில்லை. மரத்தின் மீது கருடன் பாம்பைக் கொத்தியது. பாம்பின் விஷம் தங்கள் மகன் மீது விழுந்தது. அதனைத்தான் கத்தியால் சுரண்டினேன். தாங்கள் என்னைப் பிழையாக நினைக்க வேண்டாம். ராஜசகாயம்'' என்றான்.

அவனுடைய சொல்லை அரசன் நம்பினான் இல்லை. உடனே, மல்லப்பனைச் சிறையில் தள்ளினான். மல்லப்பன் சிறைப்பட்டுப் பெருந்துயர் உழந்தான்.

சில தினங்கட்குப் பிறகு சிறையில் உள்ள கைதிகட்கு அறிவுரை பகரச் செல்லப்பன் சென்றான். அங்குள்ள கைதிகட்குத் 'தெய்வ சகாயத்தின்' திறத்தைக் கூறினான். அங்கே மல்லப்பனைக் கண்டான். அதிசயங் கொண்டான். ''ராஜசகாயம் மல்லப்பா ! நீஎப்படி இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

மல்லப்பன் செல்லப்பன் கால்மீது வீழ்ந்து அழுதான். தொழுதான். நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறினான்.

செல்லப்பன் ''மல்லப்பா ! இன்றிருந்து நாளை அழிகின்ற மனிதரைப் புகழ்ந்து ராஜ சகாயம் என்கின்றனையே ! முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பலாய் வெந்து மண்ணாவார்கள். என்றும் எங்கும் உள்ளது தெய்வம். இனியேனும் ராஜசகாயம் என்ற சொல்லை மறந்து தெய்வ சகாயம் என்று கூறுவாய். தெய்வம் சகாயம் புரியும்'' என்று உபதேசித்தான்.




# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

15

வீடுமர், துரியோதனனிடம் களப்பலிக்குரிய நேரத்தைக் கணித்துத் தரவல்லவன் சகாதேவனே, களப்பலியாவதற்குப் பொருத்தம் மிகுந்தவன் அர்ச்சுனன் மகன் இரவானே என்பதை எடுத்துக் கூறியவுடன், துரியோதனன் உடனே அன்னப் பறவையின் வ்டிவில் செய்யப்பட்ட இயந்திர வாகனம் ஒன்றில் பறந்து, உபப்பிலாவியம் வந்து அடைகிறான். சகாதேவன் இருக்கும் இடத்திற்கு துரியோதனன் செலகிறான். வாஞ்சையுடன் சகாதேவனும் துரியோதனனை வரவேற்று, ஆசனத்தில் அமர வைத்து, ''அண்ணா வந்தனம், தாங்கள் என்ன காரணம் கருதி என்னைத் தேடி வந்தீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று விநயமாக வினவுகிறான். துரியோதனனும் ''போரில் யான் வெல்வதற்குக் களப்பலி கொடுப்பதற்கான காலத்தைக் கணித்துத் தருவாயாக'' என்று கேட்டுக் கொள்கிறான்.

சகாதேவன், துரியோதனனை வரவேற்காமலே அலட்சியப்படுத்தி விரட்டியனுப்பியிருக்கலாம். ''போர்'' என்பது முடிவாகி விட்டதற்குப் பிறகு பகைவனான துரியோதனனுக்கு அவன் மரியாதை கொடுத்திருக்க வேண்டியதில்லை. ஆனல், பகைவராயினும் வீடு தேடி வந்தவரை வரவேற்று உபசரிக்கும் நல்ல பண்பாடு தவறாதவனாகிய சகாதேவன், துரியோதனனை வரவேற்று உபசரிக்கும் உயர்குணம் அனைவரும் போற்றிக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதே போல் பாண்டவர்களை வெல்வதற்குக் களப்பலி கொடுப்பதற்கான காலத்தைக் கணித்துத்தர துரியோதனன் கேட்டபோது, ''கணித்துத் தர முடியாது; எங்கள் கண்களை நாங்களே குத்திக் கொள்வதா ? எங்கள் மார்பிலே நாங்களே வேலைப் பாய்ச்சிக் கொள்வதா ? துரியோதனா ! துட்டன் ஆகிய நீ எங்களுக்கு சேர வேண்டிய நாட்டுரிமையை மறுத்து, எங்களுடனே அநியாயமாகப் போருக்குத் துணிந்து விட்டதற்குப் பிறகு, உனக்கா களப்பலிக்குக் காலத்தைக் கணித்துத் தருவது ? இது நடவாத காரியம்'' என்ற மறுத்தும் ஏசியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்கிறானா சகாதேவன் என்றால் இல்லை. வஞ்சதுரியோதனனை வஞ்சகத்தினாலேயே வெல்ல சதி செய்தும் சகாதேவன் தீமையான நேரத்தைக் கணித்துத் தந்து



# ஆடிப் பூரத்தில் அவதரித்த ஸ்ரீ ஆண்டாள்



ஆடிப் பூரத்தில் அவதாரம் புரிந்தவர் **'சங்கத் தமிழ் மாலை'** நமக்கருளிச்செய்த ஸ்ரீ ஆண்டாள் ஆவார்.

திருமாலிருஞ்சோலை பெருமாளிடம் இவர் ஒரு பிரார்த்தனை செய்து கொண்டார். ''அரங்கரை மணக்க அருள் புரிய வேண்டும். இந்த என் வேண்டுகோளை நிறைவேற்றித் தந்தால் நூறு அண்டா நிறைய அக்கார அடிசிலும் நூறு அண்டா நிறைய வெண்ணெயும் காணிக்கையாகச் செலுத்துகின்றேன்.''

ஆண்டாளின் பிரார்த்தனை பலித்தது.

அரங்கரை மணம்புரிந்த கையோடு அரங்கரோடு ஐக்கியமாகி விட்டார் ஸ்ரீ ஆண்டாள்.

திருப்பாவை ஜீயராம் இராமானுஜர் திருமாலிருஞ்சோலைக்கு வருகைபுரிந்தபோது ஆண்டாளின் பிரார்த்தனை நினைவிற்கு வந்து விட்டது. நூறு அண்டா அக்கார அடிசிலும், நூறு அண்டா வெண்ணையும் திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்குக் காணிக்கை செலுத்தி வழிபட்டார்.

காணிக்கை செலுத்திய கையோடு ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றார் ஸ்ரீ ஆண்டாளைச் சேவிக்க ஸ்ரீராமானுஜர்.

கருவறையில் வீற்றிருந்த ஆண்டாள் நடந்து வந்து ''எம் அண்ணாவே! வருக!'' என்று இராமானுஜரை வரவேற்றார்.

இதனால் முன்பிறந்த ஆண்டாளுக்குப் பின்பிறந்த இராமானுஜர் அண்ணாவாகும் பேறு கிடைத்தது.

---

துரியோதனனை ஏமாற்றி யிருக்கலாம். அப்படியும் செய்கிறானா சகாதேவன் என்றால் செய்யவில்லை.

''உன்னொருவனால்தானே நாங்கள் பலப்பல கொடுமைகளுக்காளானோம். எங்களை வெல்வதற்காக காலம் கணித்துத் தரக் கேட்கிறாயா? காலமும் நேரமும் பார்க்காமலே, இங்கேயே உன்னைக் கொன்று போருக்கே தேவையின்றிச் செய்து விடுகிறேன் பார்'' என்று கூறியும் சகாதேவன் சீறிப் பாய்ந்திருக்கலாம். அப்படியாவது செய்கிறானா என்றால் அதுவும் செய்யவில்லை. பகைவனான துரியோதனனைப் பக்கம் அமர வைத்துப் பஞ்சாங்கத்தைப் புரட்டி. ''

''நடைபெறும் மார்கழி மாதத்தில், சூரியனும் சந்திரனும் கூடும் அமாவாசைநாள் நள்ளிரவில் களப்பலி கொடுத்தால் உங்கள் வெற்றி நிச்சயம்'' என்று சகாதேவன் காலத்தைக் கணித்துக் கொடுக்கின்றான் என்றால், அவனுடைய நேர்மையை நாம் எப்படிப் பாராட்டுவது? தீர்ப்பளிக்க வேண்டிய நீதிபதியும், வைத்தியம் பார்க்க வேண்டிய மருத்துவரும், மதிப்பெண் தரவேண்டிய ஆசிரியரும், நல்ல நேரம் கணித்துத் தரவேண்டிய ஜோதிடரும் எதிரிகளுக்கும் கூட நியாயமானதையே செய்ய வேண்டும் என்ற தொழில் தருமத்தைச் சரித்திரத்தில் முதல் முதலாய் வற்புறுத்துபவனாக சகாதேவனே விளங்குவதைக் காணுகின்றோம்.

சகாதேவன் இப்படி ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்ற நெறிப்படியும், தொழில் தருமத்தின் படியும் முகூர்த்தம் குறித்துக் கொடுக்க, தான் வந்த வேளையில் ஒரு பாதி முடிந்ததாக மகிழ்ச்சி கொள்கிறான் துரியோதனன். அர்ச்சுனன் மகன் இராவானுக்கும் தன்னுடைய வருகையைத் தெரிவித்து துரியோதனன் ஆள்விட, அவனும் பண்புக்கு இலக்கணம் வகுத்த பாண்டவர் வழி வந்தவன் ஆதலால் துரியோதனனை வந்து வணங்கி, ''தந்தையே, என்னை அழைத்தமைக்கு யாது காரணம், கூறுங்கள்'' என்று கூறி வணங்கி நிற்கின்றான். ''நீ எங்களுக்காகக் களப்பலியாக வேண்டும்'' என்று நாகூசாமல் தான் வந்த காரணத்தைத் தெரிவிக்கின்றான் துரியோதனன். ''எங்களில் உங்களைப் போல் மறுத்து இரண்டு உரைப்பார் இல்லை கண்டாய்'' என்பதாக இராவான் துரியோதனனின் நேர்மையின்மையைக் குத்திக் காட்டி ''என்னைக் களப்பலி கொடுப்பதற்கு உடன்படுகிறேன்'' என்பதாகக் கூறி தன்னைப் பலிகொடுக்கச் சம்மதிக்கிறான். இந்திரன் கேட்க கர்ணன், கவசகுண்டலங்களைக் கொடுத்துப் புகழ் கொண்டான். துரியோதனன் கேட்க இராவானோ தன்னையே தான் கொடுக்கச் சம்மதிக்கிறான் என்றால் ''ஆயிரம் கர்ணன்கள் ஒரு இராவானுக்கு இணையாவாரோ'' என ஆன்றோர்கள் போற்றும் வண்ணம் இராவான் புகழின் இமயத்தைத் தொட்டுவிடக் காணுகின்றோம்.

இந்த இராவான் மகாபாரதத்தில் ஒரு மறக்க முடியாத பாத்திரம்.

கடோற்கஜனாலும் வியக்கப்பட்ட மாபெரும் வீரன் தான் இராவான். இவனுடைய வீரத்தை வீடுமரும் கூடப் பாராட்டி,

**''ஒன்றநம் படைகள் எல்லாம் ஒரு பகற்**
**பொழுதிற் கொல்வான்**
**நின்றனன் இராவான் என்பான் நீயவன்**
**தன்னை வேண்டிற்**
**கொன்றெனைப் பலிக்கொள் என்று கூறும்**

அக்குமரற் கொன்றால்
வென்றுனக் கரசும் வாழ்வும் எய்தலாம்''

- முகூர்த்த கேள்விச் சருக்கம் :3

என்று இராவானின் வீரத்தையும், அருங் குணத்தையும் ஒருங்கே பாராட்டி உரைப்பதைக் காணுகின்றோம். இப்படிப்பட்ட மாவீரன் இராவான் இரந்தவனுக்கு இல்லை என்றுரைப்பது நற்குடிப் பிறந்தார் குணமாகாது என்பதனால், துரியோதனனுக்குக் களப்பலியாக உடன் படுவதை மேலே கண்டோம்.

சகாதேவன் காலம் கணித்துக் கொடுக்க, ''உன்னைப் போல் நாங்கள் பேச்சு மாறுகிறவர்கள் இல்லை'' என்று குத்திக் காட்டினாலும், இராவானும் களப்பலிக்கு உடன்பட்டுவிட, துரியோதனன் மகிழ்ச்சியோடு மீண்டும் இயந்திர விமானம் ஏறி அத்தினாபுரம் போய்ச் சேர்ந்து விடுகின்றான்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொள்கிறார் கண்ண பெருமான். சகாதேவன் குறித்துக் கொடுத்த முகூர்த்தத்தில், இராவானை துரியோதனன் களப்பலி கொடுத்து விட்டால், வெற்றி நிச்சயம் துரியோதனனுக்கே என்பது தெரிந்த பிறகும், கண்ண பெருமான் எப்படி அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும் ? துரியோதனனின் சூழ்ச்சியை மாற்றவல்ல சூழ்ச்சியைப் புரிவதற்கும் வல்லவர் அவர் ஒருவரேயல்லவா ? ஆகவே, தான் பௌர்ணமிக்குப் பின் பதினைந்தாம் நாள் வருகின்ற அமாவாசையைப் பதினான்காம் நாளே வருமாறு மாற்றியருளுகிறார் கண்ணபெருமான். ஆக்கவும் அழிக்கவும் வல்ல அவரால் முடியாதது ஏதும் இல்லை என்பதைத்தானே அவருடைய பெருமையைப் பாராட்டும் புராணங்கள் கூறுகின்றன.

கண்ணபெருமான் பன்னீராயிரம் முனிவர்களை வரவழைத்து பௌர்ணமிக்குப் பின்வரும் பதின்நான்காம் நாளாகிய சதுர்த்தசியையே அமாவாசையாகக் கொண்டு, கொண்டாட வேண்டும் என்கிறார். முனிவர்களும் அவ்வாறே ''தங்கள் கட்டளைப் படியே ஆகட்டும்'' என சதுர்த்தசியை அமாவாசையாகக் கொண்டாடுகின்றனர். சதுர்த்தசி எப்படி அமாவாசையாகும் என்பது சந்திர சூரியர்களுக்கே விளங்கவில்லை. இருவரும் கண்ணபெருமானையே கேட்டுச் சந்தேகத்தைத் தெரிந்து கொள்வோம் என்பதாக எண்ணி வருகிறார்கள்.

அருகருகே ஆசனம் இட்டு, அவர்களை அமர வைக்கும் கண்ணபெருமானும், ''உங்களுக்கு என்ன ஐயமோ கேளுங்கள்'' என, அவர்கள் ''இன்று சதுர்த்தசி தானே ! இன்றைக்கு எப்படி அமாவாசையைக் கொண்டாட முடியும்?'' என வினவுகிறார்கள். அதற்கு கண்ணபெருமானும் தமக்கொன்றுமே தெரியாதவரைப் போல், அமாவாசை என்றால் என்ன ?'' என்று கேட்க, இருவரும் ''சந்திரனும் சூரியனும் ஆகிய நாங்கள் இருவரும் கூடும் நாளே அமாவாசை'' என்று பதில் கூறுகிறார்கள்.


இராவான்

கண்ணபெருமானும் நகைத்தபடியே ''நீங்கள் இருவரும் கூடும் நாள் அமாவாசைஎன்றால் இப்பொழுது இருவரும் ஒன்றாகக் 'கூடித்தானே இருக்கிறீர்கள்'' எனக் கூறி, அவர்களைச் சுட்டிக் காட்ட ''ஆமாம். நாங்கள் இருவரும் கூடித்தான் இருக்கிறோம். இன்று அமாவாசைதான்'' என்று அவர்கள் இருவரும் கூடத் தங்கள் இசைவைக் கண்ணபெருமானுக்குத் தெரிவித்து விடை பெறுகிறார்கள்.

பாரத காவியத்தைத் தமிழில் பாடிய வில்லிப்புத்தூராருக்குப் போர் என்றால் பெரு விருப்பம் போலும். கண்ணபெருமானின் தூதினை விரிவுபடப் பாடிச் சென்ற அவர், துரியோதனன் சகாதேவனிடம் முகூர்த்தம் கேட்டதையும், இராவான் களப்பலிக்கு உடன் பட்டதையும், மிகச் சுருக்கமாகப் பாடியுள்ளார். அவ்வாறே கண்ணபெருமான் சதுர்த்தசியை அமாவாசைஆக்கிய முக்கிய நிகழ்ச்சியினையும் மிகச் சுருக்கமாகவும், மிக வேகமாகவும் பாடிக் கொண்டு போகிறார்.

இதோ பாருங்கள், ஒரு பாடலிலேயே எவ்வளவு வேகமாக நிகழ்ச்சிகளை அவர் விரைந்து சொல்லிச் செல்கிறார் என்பதை.

'' கொடுத்தனன் பலிக்குத் தன்னைக்
குமாரன் என்று அறிந்து குன்றம்
எடுத்தவன் திதி பன்னான் கினிடை உவா
இன்றாகென்று
தொடுத்த நூன் முனிவரோடும்
சொல்லினன் சுடர்கள் தம்மின்
அடுத்திங்கென்னை யென்ன அன்றது வாய
தன்றே''

- களப்பலியிட்ட சருக்கம் :2

(தொடரும்)

## இந்துமதத்தின் பெருமை

காலத்தால் முந்தியது ;
கருணையால் நிறைந்தது ;
ஞானத்தால் உயர்ந்தது ;
தானத்தால் தன்னை
வளர்த்துக் கொண்டது ;
உண்மையால் உலகை
ஆள்வது - அதுதான்
நம்முடைய இந்து மதம்.



## யானை எய்த படலம்

எட்டுத்திக்குகளிலும் புகழ் பரவும்படி விக்கிரம பாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான். விண்ணினின்று இறங்கிய விமானத்தின் அருகில் திருக்கோயில் ஒன்று எடுத்தான். அதில் சித்தமூர்த்தியின் திருவுருவம் அமைத்துத் தினமும் வழிபட்டு வந்தான்.

அப்போது சோழன் ஒருவன் காஞ்சியில் இருந்து ஆட்சி செய்து வந்தான். அவன் சூரிய மரபில் தோன்றியவன். அவன் சமண மதமாகிய புறநெறியில் நின்று விக்கிரம பாண்டியனோடு பகைமை



அருள்மிகு. மீனாட்சி சுந்தரேஸ்வரர், மதுரை.

பாண்டியனை மதுரை நகரத்தோடு அழித்துவிட்டுவா' என்று கூறித் தென் திசைக் கண் அதனைச் செல்ல விடுத்தனர். இடிபோல் பிளிறிக் கொண்டு யானை புறப்பட்டுச் சென்றது. சோழனுடைய சேனையும், சமணர்களும் அந்த யானையைப் பின்பற்றிச் சென்றனர். வடவைத் தீ நடந்து வருவது போன்று விரைந்து யானை மதுரையை நோக்கி நடந்து சென்றது.

யானையினைக் கண்டவர்கள் விரைந்து சென்று பாண்டியனிடம் இதனைக் கூறினர்.

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

கொண்டிருந்தான். விக்கிரம பாண்டியனை நேரில் வந்து எதிர்த்துப் போராட ஆற்றாது ஒடி ஒரு சூழ்ச்சியில் கொல்லக் கருதினான.

அதனால் எட்டுமலைகளின் அருகில் வாழும் சமணக் குரவர் எண்ணாயிரவர்க்கும் தனித்தனியே ஓலை எழுதி அனுப்பினான். ஓலையைக் கண்ட சமணர்கள் காஞ்சிமாநகரில் ஒன்று கூடினர். சோழன் முடியின் மேல் மயில் தோகையை எடுத்து வீசி ஆசி கூறினர். உடனே சோழ மன்னன் சமணர்களை நோக்கி '' நீங்கள் அபிசார வேள்வி செய்து விக்கிரம பாண்டியனைக் கொல்வீரேல் எனது நாட்டின் பாதியை உங்களுக்குத் தருவேன்'' என்றான்.

அதற்குச் சமணர்கள் உடன்பட்டார்கள். பாலியாற்றங்கரையில் யாகசாலை ஒன்று அமைத்தனர். ஓமகுண்டம் ஒன்று அமைக்கப் பட்டது. அவர்கள் அதில் எட்டி முதலிய தீய விறகுகளை இட்டு வேம்பின் நெய்யை வார்த்தனர். நச்சுப்பிராணிகளின் ஊனையும், மிளகுப்பொடி கலந்த எண்ணெயையும் நிறையச் பெய்து அபிசார வேள்வியைச் செய்தார்கள். அபிசார வேள்வித் தீயினால் அருகில் உள்ள நந்தவனம், சோலை, காடுகள் முதலியன கருகின.

அப்போது அவ்வேள்வித் தீயிலிருந்து பெரிய கொடிய யானை ஒன்று எழுந்தது. அவ்யானையை நோக்கி சமணர்கள் 'நீவிரைந்து சென்று விக்கிரம

அதைக் கேட்ட விக்கிரமபாண்டியன சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று பலமுறை வணங்கி, ''எம்பெருமானே, இந்த யானையைக் கொன்று அடியேனைக் காத்தருள வேண்டும்'' என்று குறையிரந்து வேண்டினான.

அப்போது விண்ணிலிருந்து 'பாண்டியனே, நாம் ஒரு வில் ஏந்திய சேவ்கனாய் வந்து அக்கொடிய யானையின் உயிரைக் கவருவோம். அதற்கு முன் இந்நகரின் கீழ்த்திசையில் ஓர் அட்டாலை மண்டபம் செய்விப்பாய்' என்று ஒரு திருவாக்கு எழுந்தது.

பாண்டியன் அது கேட்டு மனம் மகிழ்ந்து, இறைவனை வணங்கிச் சென்று கீழ்த்திசையில் பதினாறு தூண்கள் அமைந்த ஓர் அட்டாலை மண்டபத்தை உண்டாக்கினான். உடனே இறைவர் காளைப் பருவமுடைய வேட்டுவச் சிறுவனாகத் தோன்றி வந்தார். அட்டாலை மண்டபத்தில் ஏறி அந்த யானையின் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தார்.

சற்று நேரத்தில் ஐந்து கூப்பிடு தூரத்தில் அவ்யானை வருதலை விற்சேவகராய் வந்த இறைவர் கண்டார். தமது வில்லை எடுத்து நாணினைப் பூட்டி வளைத்தார். கொடிய நரசிங்கக் கணையை வைத்து நாணினை இழுத்துவிட்டார். அக்கணை விரைந்து சென்று அவ்யானையின் மத்தகத்தைக் கிழித்தது. கொடிய யானை அலறி நிலத்தில் விழுந்து இறந்தது. யானை இறந்ததைக்

# திருவிடந்தை திருக்கோயில்

## மகாசம்ப்ரோட்சணம்



காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கிழக்குக் கடற்கரை சாலையில் மாமல்லபுரத்திலிருந்து 16வது கி.மீ. தூரத்திலும், சென்னையிலிருந்து 42வது கி.மீ. தூரத்திலும் வங்காள விரிகுடா கடலை நோக்கியவாறு, எழிலுற அமைந்துள்ள இத்திருத்தலம் 108 திவ்யதேசங்களில் சிறப்பு வாய்ந்த ஒன்று,

திரு(லட்சுமி)வைத் தம் இடப்பக்கத்தில் பெருமாள் கொண்டுள்ளதால் இத்திருத்தலத்திற்குத் ''திருவிடவெந்தை'' எனப் பெயர் ஏற்பட்டு, பின் மருவி, ''திருவிடந்தை''ஆயிற்று.

மூலவர் ஆதிவராகப் பெருமாள் பூமிதேவி அம்சமான அகிலவள்ளி தாயாரை தம் இடப்புஜத்தில் ஏந்திக் கொண்டு,ஒரு காலை பூமியிலும், மற்றொரு காலை ஆதிசேஷசன் தம்பதியினர் சிரசிலும் வைத்துக் கொண்டு, கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு, உலகத்தார்க்குத் தேவி மூலமாக சரம ஸ்லோகத்தை உபதேசிக்கின்ற ஆறரை அடி உயரதிருக்கோலம்.

திருமணமாகாத ஆண்களும், பெண்களும் இத்தலத்திற்கு வந்து மாலை அணிந்து பெருமாளை வேண்டிகொண்டு ஒன்பது முறை பிரதட்சணம் வந்து வீடு சென்றால் விரைவில் திருமணம் நடைபெறுகிறது. பலன் பெற்றவர்கள் பல்லாயிரம் பேர்.

தம்பதி சமேதராய் பெருமாள் திருவடியைத் தாங்கி நிற்கின்ற ஆதிசேஷசனைச் சேவிப்போரது ''ராகு, கேது தோசங்கள்'' நீங்குகின்றன

உற்சவர் நித்திய கல்யாண பெருமாள், கோமளவல்லி தாயார் ஆகியோரது தாடையில் இயற்கையிலேயே அமைந்துள்ள திருஷ்டிபொட்டைச் சேவிப்போரது ''திருஷ்டிதோஷங்கள்'' நீங்குகின்றன.

திருவிடந்தை அருள்மிகு நித்தியக் கல்யாணப் பெருமாள் திருக்கோயில் மகாசம்ரோட்சண விழா 10.6.05 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஊரகத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





கண்ட சமணர்கள் மிக்க மனவருத்தம் அடைந்தனர். இறந்து கிடந்த யானையைக் கழுகுகளும் பருந்துகளும் வட்டமிட்டன. விக்கிரம பாண்டியர் இதனைக்கண்டு பெருமகிழ்வடைந்தார்.

யானையைப் பின்தொடர்ந்து வந்த சோழனின் படைகளையும், சமணர்களையும் பாண்டிய மன்னன் கண்டான், வெகுண்டான். அவன் குறிப்பினை உணர்ந்த வேற்படை ஏந்திய வீரர்கள் விரைந்தோடிச் சென்று சமணர்களைத் துரத்தினர், படைகளோடு போரிட்டனர்.

பாண்டியனின் படைக்கு ஆற்றமாட்டாமல் சோழனின் படைகளும் சமணர்களும் பெரும் துன்பம் அடைந்தனர். பல படை வீரர்களும் ஒளிந்து பதுங்கி ஓடினர்.

அதன் பின்னர் விக்கிரமபாண்டியன் வீரராக வந்த இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்கி, ''இறைவனே ! நீர் இங்கே இக் கோலத்துடன் எக்காலத்தும் வீற்றிருக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். சிவபெருமான் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினார். பாண்டியன் இறைவனை வணங்கி அரண்மனை அடைந்தான். பின்னர் இராசசேகரன் என்னும் புதல்வனைப் பெற்றுப் புவியைப் பாதுகாத்து வந்தான்.

சிவபெருமான் யானையின் மீது எய்த கணையானது அங்கே உக்கிரநரசிங்கமாக எழுந்தருளியிருந்தது. அந்நரசிங்கமூர்த்தியை உரோமசமுனிவர் என்பவர் வந்து வணங்கி பெரும் பேற்றினை அடைந்தார். பிரகலாதனும் அங்கே வந்துதவம் செய்து அழியாவரம் பெற்றான்.

(தொடரும்)

# தமிழ்நாட்டுச் சித்தர்கள் - பத்ரகிரியார்

முனைவர் இரா. செல்வக்கணபதி

தமிழ்நாட்டுச் சித்தர் வரலாற்றில் பத்ரகிரியாருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு, பட்டினத்தாரையே ஞானகுருவாகக் கொண்டு, அவருக்கும் முன்னாகவே சிவனடி எய்தினார். பத்ரகிரியார் பாடிய 'மெய்ஞ்ஞானப்புலம்பல்' தமிழில் பெரிதும் சிறப்புற்று விளங்குகின்றது.

துளுவநாட்டின் மாமன்னர் பத்ரகிரியார். உஞ்சேனை என்று குறிக்கப்படும் உஜ்ஜைனியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். சிறந்த சிவ பக்தர். இத்தலத்தில் அமைந்துள்ள சிவாலயம் மாகாளேஸ்வரம் எனப்படும். இத்தலம் பற்றிய விரிவான செய்திகள் துளசிராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன.

பட்டினத்தடிகள் தம் தாய் மறைந்தபிறகு. அவருக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை இயற்றிவிட்டு, பாரத நாடெங்கும் தல யாத்திரை மேற் கொண்டார். உஞ்சேனை வந்து மாகாளரை வணங்கிவிட்டு, ஊருக்கு வெளியே தனியிடத்தில் இருந்த காட்டுப் பிள்ளையார் கோயில் சந்நிதியில் நிட்டைகூடித்தியானத்தில் அமர்ந்திருந்தார்.

ஓரிரவு பத்ரகிரியார் அரண்மனையில் கொள்ளை அடித்துத் திரும்பும் கள்வர்களுள் ஒருவன், காணிக்கையாக, ஒரு முத்து மாலையைக் காட்டுப்பிள்ளையார் மீது வீச, அது, நிட்டையில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகள் கழுத்தில் வந்து வீழ்ந்தது. பட்டினத்தார் நிட்டையில் இருந்ததால் அதை உணர்ந்திலர்.



கள்வர்களைத் தேடிவந்த பத்ரிகிரி மன்னனின் சேவகர்கள், அரசனுக்குச் சொந்தமான முத்து மாலையோடு அமர்ந்திருக்கும் பட்டினத்தடிகளைக் கள்வர் எனக்கருதிச், சிறை பிடித்து மன்னர் முன் கொண்டு போய் நிறுத்தினர். மன்னன் பட்டினத்தாரைக் கழுவிலேற்ற ஆணையிட்டான். கழுமரத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்கக் காவலர்கள் முயன்ற போது பட்டினத்தார் சிவனை நினைத்து,

**'என் செயல் ஆவது ஒன்றுமில்லை இனித் தெய்வமே**
**உன் செயலே என்று உணரப் பெற்றேன்'**

என்று பாடினார். கழுமரம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று.

பத்ரகிரியார் இதைக் கண்டு வியந்து, தவத்தின் பெருமை உணர்ந்து, அரசபோகங்களை எல்லாம் துறந்தார். துறவு பூண்டு பட்டினத்தடிகளையே ஞானகுருவாகக் கொண்டு அவருடன் தலயாத்திரை மேற்கொண்டார்.

பட்டினத்தார், பத்ரகிரியாரைத் திருவிடை மருதூர் செல்லுமாறு பணித்தார். பத்ரகிரியார் திருவிடைமருதூர் சேர்ந்து, சிவனை வழிபட்டு, மேற்குக் கோபுர வாசலில் அமர்ந்து பிச்சைஏற்றுத் தாமும் உண்டு, தம் குருநாதருக்கும் வழங்கி வாழ்ந்திருந்தார். ஒரு நாள் பத்ரகிரியார் பிச்சைஏற்றுக் குருவுக்கு வழங்கித் தானும் உண்டிருந்த போது ஒரு பெட்டை நாய் அவர் அருகே வந்து நின்று வாலை ஆட்டியது. அவர் அதற்கு எஞ்சிய உணவை இட, அது அவரை ஒட்டிக் கொண்டு நன்றி பாராட்டித் தொடர்ந்தது.

சிவபெருமான் ஒரு நாள் முனிவர் வேடத்தில் திருவிடைமருதூர் ஆலய கிழக்கு வாசலில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகளிடம் சென்று ''ஐயா என் பசிக்கு அன்னமிடுவீர்'' என்று வேண்டி நின்றார். பட்டினத்தார். ''நானோ கோவணம் கூட மிகை என்று கருதி வாழ்பவன். என்னிடம் சோறு ஏது? மேற்குக் கோபுர வாசலில் ஒரு சம்சாரி வாழ்கிறான். அவனிடம் சென்று கேளும்'' என்று நகையாடிக் கூறினார். (சோற்றுச் சட்டி என்ற ஒரு பொருளின் மேல் பற்றும் - நாய் மீது பாசமும் கொண்டிருந்த பத்ரகிரியாருக்குப் பூரணத் துறவு சித்திக்கவில்லை என்பதால் அவரைச் சம்சாரி என்றார்).

சிவமுனிவர் பத்ரகிரியாரிடம் கை நீட்ட, உண்மை உணர்ந்த அவர் , தம் குருநாதரின் உள்ளக் கருத்தறிந்து, சோற்றுச் சட்டியை நாய் மீது போட்டு உடைக்கச் சட்டியும் உடைந்தது. நாயும் மாண்டது. ஞானியர் எச்சில் உண்ட புண்ணியப் பேற்றால் அப்பெண்நாய் காசிராஜன் மகளாகப் பிறந்தது.

பற்றுக்கள் யாவையும் துறந்த பத்ரகிரியார் ''மெய்ஞ்ஞானப் புலம்பல்'' முதலிய பாடல்களைப் பாடியும், நிட்டை கூடியும் வாழ்ந்திருந்தார்.

காசிராஜன் மகள் மணப்பருவம் எய்த, மன்னன் திருமண ஏற்பாடு செய்தான். மறுத்த அப்பெண் ''நான் எவருக்கும் உரியவள் அல்லள். திருவிடைமருதூரில் இருக்கும் என் குருநாதரிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பியுங்கள்'' என்று உறுதிபடக்கூறினாள்.

காசிராஜன் தன் மகளைப் பத்ரகிரியார் முன் கொண்டு சேர்த்தான். அவள் பத்ரகிரியாரைப் பார்த்துத் தம் பழம்பிறப்பு உணர்த்தி 'அடிநாய் மீண்டும் உங்களை நாடி வந்திருக்கிறேன்' என்று கூறிப் பணிந்தாள். பத்ரகிரியார், அவளைப் பட்டினத்தாரிடம் கொண்டு சென்று, ''குருவே - உம் எச்சில் உண்ட இந்நாய்க்குப் பிறவி நோய் எவ்வாறு வந்தது ?'' என்று வினவிப் பணிந்தார்.

பட்டினத்தார் மருதீசர் திருவருளைச் சிந்தித்தார். உடனே ஒரு பெரும் ஜோதி தோன்றிற்று.

அதில் அப்பெண்ணும், பத்ரகிரியாரும் புகுந்து மறைந்தனர். இருவரும் முத்தி பெற்றனர்.

பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல் காப்பு ஒன்றும், 232 கண்ணிகளும் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கண்ணியும் 'எக்காலம்?' என்று நிறைவுறுவதால் இதனை எக்காலக் கண்ணி என்று கூறுதல் வழக்கு. சிவனருள் நாட்டம், உலக நிலையாமை, பற்று அற வேண்டுதல், துறவின் சிறப்பு, குருவின் பெருமை முதலியன இக்கண்ணிகளிலே நிறைய பேசப்பட்டுள்ளன. முத்தி தரும் 'ஞானமொழியாம் புலம்பல்' என்று உரைக்கும் காப்புக் கொண்டு, இந்நூல் வீடுபேற்றின் வாயில் என்பதை உணர முடிகிறது. தாயுமானாரின் கண்ணிகளுக்குப் பத்ரகிரியார் முன்மாதிரியாகத் தெரிகிறார்.

**''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலன்களைச் சுட்டறுத்துத்**
**தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?''**

அந்தக் கரணங்களுள் ஒன்றாகிய ஆங்காரத்தைக் கட்டுக்குள் வைத்து, ஐம்புல ஆசைகளையும் எரித்தால் மோனம் தித்திக்கும் என்கிறது கண்ணி. 'நான்' என்ற தன் முனைப்பை வாழும் காலத்தில் விட்டொழித்தால் மறுபிறவி இல்லை என்பதை

**'' ஊன் நிறைந்த காயம் உயிர் இழந்து போகுமுன்னம்**
**நான் இறந்து போக இனி நாள் வருவது எக்காலம்?''**

உள்ளத்தேடலில்தான் இறைகாட்சித் தித்திக்கும் என்பதை

**''உள்ளம் அறியாது ஒளித்திருந்த நாயகனை**
**கள்ள மனம் தெளிந்து காண்பதினி எக்காலம்?''**



என்கிறார். உலகப் பற்றுக்களைத் தகர்க்க ஒரு வழிகாட்டுவார்போல,

**'' மனதை ஒரு வில்லாக்கி வான் பொறியை நாணாக்கி**
**எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?''**

என நயம்படப் பேசுகிறார்.

நுட்பமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல். வாய்ப்பு அமையும் போது அதனை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தலாம். சிவஞானக் கருவூலம் இந்நூல் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# நூல் மதிப்புரை

★★★ நூலின் பெயர் : சக்தி பீடங்கள் 51

நூலாசிரியர் : கலைமாமணி மா. லட்சுமணன்

வெளியீடு : மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை - 600 108

பக்கங்கள் : 202

விலை : ரூ. 70.00



ஆன்மீகம் ஊற்றெடுக்கும் பல நூல்களிலிருந்து ஆதாரங்களைத் தேடி எடுத்துத் தொகுக்கப்பட்ட இந்த ''சக்தி பீடங்கள் 51'' என்ற நூல் மனித வாழ்வுக்கு மிகவும் பயனுள்ள நூல். அரிய படங்களுடன் கூடிய இப்பயன்மிகு நூல் யாவரும் படித்துப் பயன் பெறலாம்.

★★★ நூலின் பெயர் : திருவேங்கடவன் அருள்மாலை

நூலாசிரியர் : கவிப்பேரரசர் டாக்டர் மின்னூர் சீனிவாசன்.

வெளியீடு : மின்னூர் வெளியீடு,
ப.எண்-32, ஆர்க்கான் குடியிருப்பு,
வெங்கடராமன் தெரு,
பெரம்பூர், சென்னை - 600 011.

பக்கம் : 34


விலை : ரூ.15.00

கவிப்பேரரசு டாக்டர் மின்னூர் சீனிவாசன் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனார் போல் புதுமைக் கவிதைகள் பல படைத்துத் தமிழன்னைக்கு ஆரமாய்ச் சூட்டி அழகு பார்த்தவர்.

''திருவேங்கடவன் அருள்மாலை'' இசையோடு பாடி நாளும் உருகவேண்டிய அருட்பாமாலை ஆகும்.

# இவ்வளவு தூரம் வந்த பிறகு

நிறைமதி



பாண்டிய நாடென்ற மங்கைக்கு, அழகிய திருமுகமாக அமைந்தது மதுரை மாநகரம் என்று கூறுகின்றது திருவிளையாடல் புராணம்.

சிவபெருமான் தமது சடையில் சூடிய பிறைமதியிலிருந்து அமுதம் ஆகிய மதுவைத் தெளித்தார் என்பதால் இத்திருத்தலத்திற்கே **''மதுரை''** என்ற பெயர் அமைந்ததாகத் தலபுராணம் கூறுகின்றது.

சிவபெருமான் அங்கயற்கண்ணியாம் மீனாட்சியைத் திருமணம் செய்ததால் **''பூலோகக் கயிலாயம்''** என்ற பெருமை பெற்றுத் திகழ்வது மதுரை.

சிவபெருமானின் ஆபரணமாய்த் திகழும் பாம்பு, தன்வாலை வாயாற் கவ்வியவாறு வட்டமாய் மதுரையின் எல்லையைக் காட்டியதால் மதுரைக்கு **''ஆலவாய்''** என்றொரு பெயரும் உண்டு.

மதுரை என்ற தலத்தின் பெயரைக் கேட்டாலும், நினைத்தாலும், சென்று வழிபட்டாலும் அத்தகைய பக்தர்கள் அடையும் பலாபலன்களுக்கு எல்லையே இல்லை என்பது யாவரும் அறிந்துள்ள ஒன்று.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் வளர்த்த பெருமை கொண்ட தமிழ் மதுரையின் மாண்பை விவரித்திட அத்தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானை அன்றி வேறு எவராலும் இயலாது என்பது யாவரும் அறிந்துள்ள ஒன்று.

இத்தகைய எல்லையற்ற மாண்பினைக் கொண்டு விளங்கும் மதுரைக்கு வந்து அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபடும் பக்தர்கள் பலர், இவ்வளவு தூரம் வந்தபிறகு... மதுரையைத் தரிசித்த மகிழ்வோடு மதுரையிலும், மதுரையைச் சுற்றிலும் உள்ள மகிமைமிக்க திருத்தலங்கள் சிலவாகிலும் தரிசித்து, திருத்தல யாத்திரையின் முழுப் பயனையும் பெற்றிட வேண்டும் என்ற வகையில் ஆற்றுப் படுத்தும் நோக்கில் வழிகாட்டுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

மதுரை, உலகப் புகழ் பெற்ற சிவாலயம். பாண்டிய அரசியாக அம்பிகை அவதரித்து, நல்லாட்சி செய்த பழம்பதி. சிவபெருமான் 64 திருவிளையாடல் நிகழ்த்திய பூலோகக் கயிலாயம்.

இம்மதுரைத் திருத்தலம் ஒன்றை வழிபட்டாலே புண்ணிய பேறுகள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம் என்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை.

இருந்தாலும் ''இவ்வளவு தூரம் வந்தோம், பூலோகக் கயிலாயமாம் மதுரையை வழிபட்டோம்'' என்பதே போதுமா என்றால் போதாது. இன்னும் ஒரு சில நாட்கள் கூட மதுரையில் இருந்து, மதுரையிலும் அதைச் சுற்றிலும் உள்ள மற்ற புண்ணிய திருத்தலங்களையும் தரிசிப்பதால் **''கோடானகோடி பலன்''**களைப் பக்தர்கள் பெற்று மகிழ முடியும் என்பது திண்ணம்.

அவ்வகையில் மதுரையிலேயே அமைந்து விளங்கும் பக்தர்கள் கண்டு வழிபடவேண்டிய ஒப்பற்ற ஒரு திருத்தலம் **அருள்மிகு இம்மையில் நன்மை தருவார் திருக்கோயில்** ஆகும்.

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மிக அருகில் உள்ள இத்திருக்கோயிலின் விசேடம் என்ன தெரியுமா?

சிவபெருமான் தன்னைத் தானே வழிபட்டுக் கொண்ட பெருமை மிக்கது இத்திருத்தலம்.

பிரம்மா, திருமால், பார்வதி, தேவர்கள், முனிவர்கள் எனப் பலரும் சிவபெருமானைப் பூசித்து நலமும் வளமும் பெற்றதைத் தலபுராணங்கள் கூறுகின்றன.

ஆனால் சிவபெருமான் தன்னைத் தானே வழிபட்டுக் கொண்ட பெருமைக்குரிய திருத்தலம் தான் **அருள்மிகு இம்மையில் நன்மை தருவார்**



திருக்கோயில் ஆகும்.

மதுரையை ஆண்ட மீனாட்சி, திக்கெட்டும் விஜயம் செய்து, மூன்று உலகங்களையும் வென்று முடிவில் கயிலாயத்திற்கு வந்தார். அங்கு உலக நாயகனான ஈசனைச் சந்தித்தவுடன் சக்தியின் கோபம் தணிந்தது. இறைவர் திருவுளப்படி சுந்தரேசுவரருக்கும் மீனாட்சிக்கும் திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்குப் பின் மதுரையை இறைவர் சுந்தரேசுவரர் 8 மாதமும், மீனாட்சி 4 மாதமும் ஆட்சி செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.

நாடாளும் முன், பட்டம் ஏற்குமுன் சிவபூஜை செய்ய வேண்டும் என்பது மரபு.

அம்மரபைத் தானே கடைப்பிடித்துக் காட்ட வேண்டும் என்று திருவுள்ளம் கொள்கின்றார் சுந்தரேசுவரர்.

சுந்தரேசுவரர் தம் ஆத்மாவையே **''இகா அபிஷ்ட வரப் பிரதேஷ்வர்''** என்ற நாமத்துடன் லிங்கமாகப் பிரதிஷ்டை செய்து அதற்குத் தானே பூஜை செய்து ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளார். இவ்வாறு சுந்தரேசுவரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், சுந்தரேசுவரருக்கே வரம் அருளிய ஈசனே **''இம்மையிலும் நன்மை தருவார்''** என்ற திருநாமத்துடன் இங்கு எழுந்தருளியுள்ளார்.

அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவாரை வழிபட்டால் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் வரக் கூடிய துன்பங்கள் யாவும் விலகிவிடும். முத்தி எளிதில் கூடும். மேலும் ஈசனே வழிபட்ட ஈசனை வழிபட்டோம் என்ற மகிழ்வும், பெருமையும் உண்டாகும் அல்லவா ! ஆகவே மதுரைக்கு வருகை தரும் அன்பர்கள் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு மிக அருகிலேயே உள்ள இத்திருத்தலத்தை அவசியம் வழிபடுதல் வேண்டும்.

மதுரை நகரிலேயே உள்ள மகிமை மிக்க மற்றொரு சிவத்தலம் திரு ஆப்புடையார் திருக்கோயில். இத்திருத்தலத்தின் பெயரே புதுமையாக உள்ளது அல்லவா ? தல வரலாறு கூறும் பெயர்க்காரணம் இதுதான்.

சோழாந்தகன் என்ற மன்னன், சிறந்த சிவபக்தன். சிவபூஜை தினமும் செய்யாமல் உணவு அருந்த மாட்டான்.

ஒரு முறை மான் வேட்டையாடச் சென்ற மன்னன் நடுக்காட்டில் மயங்கி விழுந்தான். மூர்ச்சைதெளிவித்த அமைச்சர் களைப்பு தீர உணவருந்த வேண்டினார். சிவபூஜை செய்யாமல் உணவருந்த மாட்டேன் என மறுத்துவிட்டார் மன்னர்.

அமைச்சர் அரசரைக் காப்பாற்ற ஒரு தந்திரம் செய்தார். காட்டில் கிடைத்த மரத்துண்டு ஒன்றை எடுத்துத் தரையில் ஆப்படித்தார். ''மன்னா ! இங்கொரு சுயம்புலிங்கம் உள்ளது. இதனைப் பூஜை செய்து உணவருந்தலாம்'' என்றார்.

அரசரும் அவ்வாறே ஆப்பைச் சுயம்புலிங்கம் என்று நம்பி வணங்கி உணவருந்தி விட்டார்.

பிறகுதான் தான் வணங்கியது சுயம்புலிங்கம் அல்ல, அது ஒரு ஆப்பு என்று தெரிந்து கொண்ட மன்னன் மிகவும் வருந்தினான். ''இறைவா ! நான் தவறு செய்து விட்டேன். இது நாள் வரை நான் உன்னைப் பூசித்தது உண்மை என்றால், நீஇந்த ஆப்பிலே வந்து அருள் பாலிக்க வேண்டும்'' என்று மன்றாடினான்.

மன்னனின் பக்திக்கு மகிழ்ந்த இறைவன் அந்த ஆப்பிலே தோன்றி அருள்பாலித்தபடியால் சிவன் **அருள்மிகு ஆப்புடையார்** ஆனார்.

இந்த ஆப்புடையாரே குபேரனுக்கு சங்கநிதி - பதுமநிதி தந்து, வடதிசைக் காவல் என்ற பெருமையும் தந்தார் என்று தலபுராணம் கூறுகின்றது.


இங்குள்ள இறைவருக்கு ஒரு நெய் தீபம் ஏற்றினால் 1000 பசுதானம் செய்த பலனும், இளநீர் அபிஷேகம் செய்தால் 100 அசுவமேதயாகம் செய்த பலனும் உண்டாகும் எனத் தலபுராணம் கூறுகின்றது.

மதுரை நகரின் மத்தியிலேயே அமைந்து விளங்கும் இத்திருத்தலத்தையும் மதுரைக்கு வரும் பக்தர்கள்அவசியம்வழிபடுதல்வேண்டும்.

(தொடரும்)

## அன்னதானப்பட்டி மாரியம்மன்

அன்னதானத்தைப் பெயரிலே கொண்டுள்ள ''அன்னதானப்பட்டி'' மாரியம்மன் திருவிழாவில் சத்தாபரண நாளில் நடைபெறும் வாணவேடிக்கை காண ஆயிரம் கண்கள் வேண்டும்.



ஜனத்தில் பெருத்தவள் கோட்டை மாரியம்மன்;

பணத்தில் பெருத்தவள் செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன்.

அழகில் சிறந்தவள் அன்னதானப்பட்டி மாரியம்மன்;

நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் அன்னதானப்பட்டி மாரியம்மனை வழிபட்டு வளமும் நலமும் பெறலாம்.

# அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன்

க. முருகன், எம்.ஏ., பி.எட்.

சேலம் மாவட்டத்தில். மாங்கனி நகராம் சேலம் மாநகரில் பிரசித்திப் பெற்ற பிரார்த்தனை ஸ்தலமாக அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில் விளங்குகிறது. சேலத்தில் அமைந்துள்ள

1. கோட்டை மாரியம்மன்
2. அம்மாப்பேட்டை மாரியம்மன்
3. செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன்
4. சஞ்சீவராயன்பேட்டை மாரியம்மன்
5. சின்னக்கடைவீதி சின்ன மாரியம்மன்
6. குகை மாரியம்மன்
7. அன்னதானப்பட்டி மாரியம்மன்
8. பொன்னம்மாப்பேட்டை மாரியம்மன்

ஆகிய எட்டு மாரியம்மன்களில் கோட்டை மாரியம்மன் தான் பெரியவள், சக்தி வாய்ந்தவள். இதனாலேயே ''கோட்டை பெரியமாரியம்மன்'' என்று பக்தர்களால் அழைக்கப்படுகின்றது. சேலத்தில் உள்ள எட்டு மாரியம்மன்களுக்கும் தலைமையாக விளங்குவதால். ''எட்டுப் பேட்டைகளைக் கட்டி யாளும் அன்னை கோட்டை மாரி'' என்ற சிறப்புப் பெயர் உண்டு.

சேலத்தில் உள்ள எட்டு மாரியம்மன்களுக்கும் தலைமையானவள் கோட்டை மாரி என்பதற்கு மற்றொரு சான்றையும் சொல்லலாம். ஆடிப்பெருந்திருவிழா ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் சேலம் மாநகரத்தில் நடைபெறும் மிகப்பெரிய விழாவாகும். இவ்விழாவின் போது பூச்சாட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்தப் பூச்சாட்டுதலின் போது சேலத்தில் உள்ள ஏனைய ஏழு மாரியம்மன் திருக்கோயில்களுக்கும் இங்கிருந்துதான் பூ எடுத்துச் சென்று அந்தந்த மாரியம்மன் திருக்கோயில்களில் பூச்சாட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது தொன்றுதொட்டு வரும் நிகழ்ச்சியாகும். எனவே, இந்த வகையிலும் பெரிய மாரியம்மன் என்று அழைப்பது பொருத்தமாகும்.

சேலம் கோட்டை மாரியம்மன் திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு சேர நாட்டைச் சேர்ந்த சிற்றரசர்கள் இப்போது கோட்டை என்று சொல்லும் இடத்தில் ஒரு கோட்டை அமைத்து ஆட்சி செய்தபோது இந்த மாரியம்மன் கோயிலையும், ஒரு பெருமாள் கோயிலையும் அமைத்தார்கள். இந்த அம்மன் கோயிலைக் கோட்டை வீரர்கள் எல்லாம் ஒரு காவல் தெய்வமாக வணங்கி வழிபட்டு வந்தார்கள். கோட்டையில் இருந்த வீரர்களுக்கு மாரி காவல் தெய்வமாக இருந்திருக்கிறாள். ஆனால், இன்று அந்தக் கோட்டை இல்லை. கோட்டை இருந்ததற்கு அடையாளமாகக் கோட்டை மேடு என்ற பகுதி மட்டுமே இன்று உள்ளது.

இக்கோட்டையில் அமைந்த இக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகிறது. கோட்டைக்குக் காவல் தெய்வமாக இருந்ததால் ''கோட்டை பிறக்கையிலே கூடப் பிறந்த பெரிய மாரி, சேலம் பிறக்கையிலே சேர்ந்து பிறந்த பெரிய மாரி'' என்று பாடல்கள் மூலம் தெரிய வருகிறது.

காவல் தெய்வமாக நின்று உலகைக் காத்து அருளும் அன்னை கோட்டை பெரிய மாரியம்மன் எழுந்தருளி இருக்கும் திருக்கோயில் கருவறை, முன் மண்டபம், பலிபீடம், வெளிப்பிரகார மண்டபம், கிளி மண்டபம், வசந்த மண்டபம், முதலிய வற்றுடன் பிரமாண்ட முறையில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட இராசகோபுரம் ஒன்றையும் பெற்று சீரும் சிறப்புமாக விளங்குகிறது.

இத்திருகோயிலின் கருவறை சிறியதாகவும் மிக அழகிய முறையிலும் அமைந்துள்ளது. 4 மீட்டர் நீளம், 6 மீட்டர் அகலத்தில் உட்பிரகாரம் அமைந்துள்ளது. உட்பிரகார வாயிலில் (கருவறை வாயில்) இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாய் இரண்டு துவார பாலகிகளின் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அன்னையின் சிரசில் ஜுவாலா கிரீடம் அக்னி ஜுவாலையுடன் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. அக்கிரீடத்தில் நாகம்படம் எடுத்துள்ளது போன்ற அமைப்பு உள்ளது. நான்கு கரங்களுடன் அன்னை விளங்குகிறாள். வலது மேற் கரத்தில் நாகபாசமும், உடுக்கையும் ஏந்தி இருக்கிறாள். வலது



# அருள்மிகு குகை மாரியம்மன் மகிமை



குகை மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெறும் ''பூமிதி'' விழாவில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ''பூமிதித்து'' மாரியம்மன் திருவருள் பெறுகின்றனர்.

இவ்விழாவைக் காணப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பல ஊர்களிலிருந்தும் வருவர். ''பூமிதி விழா''விற்கு அடுத்த நாள் (வியாழக்கிழமையன்று) நடைபெறும் ''வண்டி வேடிக்கை'' திருவிழா காண ஆயிரம் கண்கள் வேண்டும். அலங்கார வண்டிகளில் பக்தர்கள் தெய்வ வேடம் தாங்கி வருவது காணக் கண்கோடி வேண்டும். அலங்கார வண்டிகளில் சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படும்.

கீழ்க்கரத்தில் திரிசூலம் விளங்குகிறது. அன்னை வலது காலைத் தொங்கவிட்டுக் கொண்டு, இடது காலை மேல் யோகாசனமாக மடித்து வைத்துக் கொண்டு ஈசான திசைநோக்கி, அமைதி வடிவமாய், ஆனந்தம் பொங்கும் முகத்தாளாய் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருளாட்சி செய்து வருகின்றாள்.

கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் புதியதாக இராஜகோபுரம் கட்டப் பட்டு 01.07.1993ல் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. இக்கோபுரம் 42அடி8'' நீளமும், 30 அடி அகலமும் 81 அடி உயரமும் கொண்டதாகும். ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜகோபுரம் மிகச் சிறப்பாகவும், அழகிய வேலைப்பாடுகளுடனும் முற்றிலும் கருங் கற்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத் திருக்கோயில்களில் உள்ள பெரிய இராஜகோபுரங்களில் இதுவும் ஒன்றாகும்.



அன்னையின் மகிமை அனைவரும் அறிந்த ஒன்றே. அன்னையின் அடியவர்கள் மாரி (மழை) வேண்டி விழா எடுக்க அன்னையும் மனமுருகி அடியார்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து வேண்டுதலை நிறைவேற்றுகிறாள். ஆடி மாதம் முழுவதும் மழை பெய்து 18-ம் நாள் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.

சேலம் மணக்காட்டைச் சேர்ந்த மாணிக்கம் என்பவர் தீராத நெஞ்சுவலியால் அவதிப்பட்டார். பல மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்தும் பலன் இல்லை. பல்வேறு கோயில் குளங்களுக்கும் சென்று வந்தும் பயன் இல்லை. இறுதியாக அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு வந்து, ''அன்னையே! என்னைக் காக்க வேண்டும். தாயே என்னை காக்கவில்லை என்றால் நீயே என்னை எடுத்துக் கொள்'' என்று கூறியவாறே திருக்கோயில் பலிபீடத்திற்கும் உண்டியலுக்கும் இடையே படுத்துக் கொண்டு, ஒரு கத்தியை எடுத்து தன் குரல்வளையைத் தானே அறுத்துக் கொண்டார். குரல்வளையிலிருந்து ரத்தம் பீறிட்டு வந்ததும் அக்கம் பக்கம் இருந்தவர்கள் மாணிக்கத்தை மருத்துவமனையில் சேர்த்தார்கள். பிழைப்பது அரிது என்று மருத்துவர்களும் கைவிட்டனர். இருப்பினும், அன்னை மீது பாரத்தைப் போட்டு முயற்சி செய்கிறோம் என்று கூறிக் குரல்வளையத்திற்குச் சிகிச்சைசெய்தனர். மருத்துவர்களும் வியக்கும் வண்ணம் அறுவை சிகிச்சைசெய்த பின்னர் குரல்வளை சரியாகிவிட்டது. அவருடைய நெஞ்சு வலியும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. பிறகு, அவர் கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு வந்து மாலைமாலையாய் கண்ணீர் வடித்து மனமுருகி வணங்கிச் சென்றார்.

அன்பர் ஒருவர் கோட்டை மாரியம்மனிடம் மிகுந்த பக்தியுடையவர். எந்தக்

# அருள்மிகு பலபட்டரை மாரியம்மன்




சேலம் அம்மாப் பேட்டையில் எழுந்தருளி யுள்ள மாரியம்மனுக்குப் பலபட்டரை மாரியம்மன் என நாமம் வழங்குகின்றது.

இவ்வம்மனின் அபிஷேக தீர்த்தம் பக்தர்களின் கண்நோய், கை, கால்கள் வலி தீர்த்து சுகம் தர வல்லதாகும்.



## மதுரை வெள்ளியம்பலம் திருக்குட நீராட்டு விழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ள நடராசப்பெருமான் கால்மாறியாடிய வெள்ளியம்பலத்திற்குத் திருக்குட நீராட்டு விழா 10.6..05 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு **த. பிச்சாண்டி** இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பி.எஸ்.சி.பி.எல் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

காரியத்தையும் கோட்டை மாரியம்மனை நினைத்தே தொடங்குபவர். அவளின்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அத்தகைய அன்பருக்கு ஒரு சோதனைக் காலம். அவருடைய பங்காளி ஒருவர் அவர் மீது வழக்கு தொடுத்தார். செல்வந்தரான பங்காளியை எதிர்த்து ஏழை அடியவர் வழக்காட முடியவில்லை. கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு வந்தார். அருள் சுரக்கும் தாயை வணங்கி, ''அன்னையே நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு, நீதிமன்றம் சென்றார். வழக்கு அன்பருக்கு ஆதரவாக முடிந்தது.

அன்பர் நீதிமன்றத்திலிருந்து, நேரே கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு ஓடோடி வந்தார். ஆனந்தக் கண்ணீர் மல்க அன்னையின் சன்னதியில் நின்றார். எவ்வளவு நேரம் நின்றாரோ தெரியாது. பின் அன்னையின் திருப்பாதம் வணங்கி மனநிறைவோடு வீடு திரும்பினார். மாரி தன்னை நம்பியவர்களுக்குக் காவல் தெய்வமாக இருந்து காத்து வருகிறாள் என்பது மேற்காணும் நிகழ்ச்சி களிலிருந்து அறியலாம்.

**முகத்தினில் முத்தையம்மா முன்னதா நீயிறக்கு**
**கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கு**
**தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கு**
**மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கு**
**வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரியே நீயிறக்கு**
**துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கு**
**பாதத்தில் முத்தையம்மா பாரி லிறக்கிவிடு**
**பூமியி லிறக்கிவிடு பெற்றவளே காருமம்மா !**
**பெற்றவளே என்தாயே பேரரசி மாரிமுத்தே !**
**உற்றதுணை நீயிருந்து உகந்தரசி காருமம்மா !**

என்று மாரியம்மன் தாலாட்டில் குறிப்பிடுவது போல் மக்களுக்கு வரும் கொடிய நோய்களில் ஒன்றான அம்மை நோய் வருமானால் அதைக் காப்பதிலும், முத்தை இறக்குவதிலும், மாரி அன்னை சிறந்து விளங்குகிறாள். முகத்தில், தோளில், கழுத்தில், மார்பில், வயிற்றில், தொடையில், பாதத்தில் எங்கு இருந்தாலும் அம்முத்தை இறக்கிப் பூமியிலே விடும் ஆற்றல் நிறைந்த வேப்பிலைக்காரி மாரியம்மன்.

இவ்வாறு அன்னையின் திருநீறினாலும், அருள் நீரினாலும் முத்து இறங்கிய பின்னர் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன் செலுத்த கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகிறார்கள். கையில் வேப்பிலை ஏந்தியவர்களாய், ''தாயே, பராசக்தியே! என் உடலில் இருந்த முத்தையெல்லாம் நீக்கியவளே! இதோ என் நேர்த்திக்கடன் ஏற்றுக் கொள்'' என்று மனமுருகி வேண்டியவாறே (அங்கப் பிரதட்சணை) திருக்கோயில் பிரகாரத்தை மூன்று முறை வலமாகத் தரையில் உருண்டு கொண்டே வருவார்கள். இவ்வாறு உருண்டு வருவதற்கு உருளுதண்டம் என்று பெயர்.

இத்திருக்கோயிலில் பூப்போட்டு கேட்டல் பிரசித்தமானது. குடும்பத்தில் ஏற்படும் சிக்கல் தீருமா ? மகளுக்கு விரைவில் திருமணம் நடைபெறுமா ? தந்தைக்கு வந்திருக்கும் நோய் தீருமா ? மகனுக்கு வேலை கிடைக்குமா ? போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க வெள்ளை, சிவப்பு நிறங்களில் பூக்களைப் பொட்டலங்களாகக் கட்டி அம்மனின் திருவடியில் வைத்து அவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துப் பார்த்தால், நினைத்த பூ வந்தால், தாம் எண்ணி வந்த செயல் விரைவில் நிறைவேறும் என்று நம்பிக்கையோடு செல்வர். இதற்குப் பூப்போட்டு பார்த்தல் என்று பெயர். பக்தர்கள் பூப்போட்டு பார்த்துத் தம் பிரச்சனைகளைத் தீர்த்து செல்வதுண்டு.

அம்மை நோய் கண்ட பக்தர்கள் தம் நோய் நீக்கி நலமளித்து காக்குமாறு, கோட்டை பெரிய மாரியம்மனிடம் வேண்டிக் கொள்வர். அம்மனின் திருக்கோயில் புனித நீர் (தீர்த்தம்) வாங்கிச் சென்று தம் மீதும் தம்மைச் சுற்றியும் தெளித்துக் கொள்வர். உடலை வேப்பிலைக் கொண்டு தடவுவார்கள். அம்மனின் அருளால் நோய் நீங்கப் பெற்று குணமடைவார்கள். அதற்கு நேர்த்திக் கடனாக பொம்மை உருவங்களைத் தம் தலை மீது வைத்துக் கொண்டு, திருக்கோயிலை மூன்று முறை வலம் வந்து பலிபீடத்தின் அருகில் வைப்பார்கள். இதன் பொருள் தமக்கு நலம் அளித்ததற்குத் தம்மையே அம்மனுக்கு ஒப்படைப்பு செய்து விட்டதற்கு ஒப்பாகும்.

கண்ணில் பூ விழுந்தாலோ அல்லது வேறு சில நோய்கள் ஏற்பட்டாலோ கோட்டை பெரிய மாரியம்மனிடம், தமது கண்ணிற்கு ஏற்பட்ட நோயை நீக்குமாறு வேண்டிக்கொள்வர். அதன் காரணமாக நோய் நீங்கி நலமடைவர். தங்கள் வேண்டுதலுக்கு ஏற்ப மாரியம்மனுக்குப் பொன்னாலோ (அ) வெள்ளியாலோ (அ) தகடுகளாலோ கண்ணடக்கம் செய்து அம்மனுக்குச் சாத்தி, நேர்த்திக் கடனைச் செலுத்துவார்கள். . சில

# குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழார் விழா



குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழார் விழா இந்து சமய அறநிலையத்துறையினரால் 4.6.05 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது, பெரியபுராணப் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் பரிசு வழங்கினார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப.இராஜா பிஎஸ்.சி.,பிஎல். மற்றும் வேலூர் இணை ஆணையாளர் திருமிகு மு.க.பாலசுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல். ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.





நேரங்களில் திருக்கோயிலுக்கு வந்து மொட்டை அடித்து முடிக்காணிக்கை செலுத்துவதும் உண்டு.

பக்தர்கள் செய்கின்ற நேர்த்திக் கடன்களுள் அடியளந்து கொடுத்தல் என்பதும் ஒன்றாகும். இந்த வேண்டுதலைப் பெண்கள் மட்டுமே செய்கிறார்கள். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து மூன்று முறை திருக்கோயிலை வலமாகச் சுற்றி வருதலே அடியளந்து கொடுத்தல் என்கின்றோம். அதனால் அவர்கள் வேண்டுதல்கள் நிறைவேற்றி அன்னை அருள்பாலிக்கின்றாள்.

பக்தர்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறையோ அல்லது நோயோ நீங்கிட வேண்டும் என்று அம்மனிடம் வேண்டிக் கொள்வர். அப்பொழுது குங்குமம் கலந்த உப்பைப் பலிபீடத்தின் மீது போட்டு நீர் ஊற்றுவார்கள். நீருடன் கலந்து உப்பு எவ்வாறு கரைந்து விடுகிறதோ அதே போன்று அம்மன் அருளால் நோய் இருந்த இடம் தெரியாமல் நீங்க வேண்டும் என்பதே இந்த வேண்டுதலின் நோக்கமாகும்.

இதே போன்று வியாபாரிகள் தங்களது வியாபாரம் சிறப்பாக நடக்கவும், விவசாயிகள் விளைச்சல் பெருகவும், கால்நடைகள் நோய் நொடியின்றி இருக்கவும் வேண்டிக் கொள்வர். வேண்டுதல் நிறைவேறப் பெற்றவுடன் அம்மனுக்குக் காணிக்கைச் செலுத்துவர்.

கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை, தைப்பொங்கல், மகா சிவராத்திரி, தமிழ் வருடப்பிறப்பு, ஆடிப் பெருந்திருவிழா ஆகிய விழாக்கள் நடை பெறுகின்றது. அனைத்து விழாக்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் சீரிய சிறப்பான விழாவாக விளங்குவது ஆடிப்பெருந்திருவிழா ஆகும்.

மாரி வளம் சுரக்க, மக்கள் நலம் பெற்று பசியும் பிணியும் நீங்கி வளமுடன் வாழ இவ்விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா ஆடிமாதம் 22 நாட்கள் சிறப்புற கொண்டாடப் படுகிறது. ஆடிமாதம் 18-ந் தேதியை அடிப்படையாக கொண்டே முக்கிய விழாக்கள் நிர்ணயிக்கப்படுகிறது. ஆடி 18ந் தேதிக்கு முந்தைய செவ்வாய்க்கிழமைகளில் முதல் செவ்வாய் பூச்சாட்டுதலும், இரண்டாம் செவ்வாய் கம்பம் நடுதலும் நடைபெறுகிறது. ஆடி 18-ந் தேதிக்கு பிறகு வரும் முதல் செவ்வாய்க்கிழமை சக்தி கரகமும், அதைத் தொடர்ந்து பொங்கல் வைத்தல், உருளுதண்டம் விழாக்களும் நடைபெறும். கடைசி செவ்வாய்க்கிழமை மகா அபிசேகத்துடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. சேலம் மாநகரில் எட்டுப் பேட்டைகளிலும் உள்ள மாரியம்மன் கோயில் களிலும் ஆடிப்பெருந்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு மாரியம்மன், காளியம்மன் முனியப்பன் திருக்கோயில்கள்

# குகை, சேலம் – 636 006.



## வரலாற்றுச் சிறப்புமிக்க ஆடிப்பெருந்திருவிழா

சேலம் மாநகரில் வேண்டுவோர்க்கு வேண்டிய வண்ணம் கோரிக்கைகள் நிறைவேற்றி அருள்வழங்கி வரும் வரலாற்று சிறப்புமிக்க குகையில் அடியார் சிந்தையில் எந்நாளும் சிறந்து விளங்கும் அருள்மிகு மாரியம்மன், காளியம்மன், முனியப்பன் திருக்கோயில்களில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் சீரோடும், சிறப்போடும் வெகு விமர்சையாக ஆடித் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

மக்களின் உயிர்துடிப்பான மழைத் தெய்வமாக, மாரி என வழங்கும் அன்னை மாரியின் அருள் வழங்கும் ஆடிப்பெருவிழா ஆடிமாதத்தில் 30 நாட்கள் நடைபெறும். அம்மன் சக்தி அழைத்தல், மாரியம்மனுக்கு உருளுதண்டம் போடுதல், காளியம்மன் சூரசம்ஹாரம் செய்தல், பூ மிதி திருவிழா, வண்டி வேடிக்கை, சத்தாபரணம் ஆகியவை சிறப்பாக நடைபெறும்.

| ஆடித்திருவிழா முக்கிய நாட்கள் : | |
|---|---|
| 26-07-2005 | அம்மனுக்குப் பூ சாட்டுதல் |
| 28-07-2005 | திருக்கல்யாணம், கம்பம் போடுதல் |
| 09-08-2005 | சக்தி அழைத்தல் |
| 10-08-2005 | பூ மிதி திருவிழா, பொங்கல் |
| 11-08-2005 | காலை திருத்தேர் |
| 11-08-2005 | மாலை வண்டி வேடிக்கை |
| 12-08-2005 | சத்தாபரணம் |

ஆடிப்பெருந்திருவிழாவிற்கு அன்னையின் பக்தர்கள் அம்மன் அருள் பெற வருமாறு

**பா. சேதுராமலிங்கம், எம்.ஏ., பி.எட்.,**
செயல் அலுவலர்

**செ. தனபாண்டியன், பி.எஸ்.சி.பி.எல்.,**
தக்கார் / உதவி ஆணையர்



பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05

# அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், கோட்டை, சேலம் - 636 001.

தொலைபேசி எண். 0427-2267845 Website : www.kottaimariammantemple.com
E-Pooja - E-mail : kottaimariamman@sancharnet.in

## சேலம் மாநகரத்திற்கே பெருமை சேர்க்கும் ஆடிப் பெருந்திருவிழா

சேலம் மாவட்டத்தில், மாங்கனி நகராம் சேலம் மாநகரில் பிரசித்திப் பெற்ற பிரார்த்தனைத் திருத்தலமாக அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் விளங்குகின்றது. சேலம் மாநகரில் அமையப்பெற்றுள்ள,

1. கோட்டை மாரியம்மன்
2. அம்மாப்பேட்டை மாரியம்மன்
3. செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன்
4. சஞ்சீவிராயன்பேட்டை மாரியம்மன்
5. சின்னக்கடைவீதி சின்ன மாரியம்மன்
6. குகை மாரியம்மன்
7. அன்னதானப்பட்டி மாரியம்மன்
8. பொன்னம்மாப்பேட்டை மாரியம்மன்

ஆகிய எட்டு மாரியம்மன்களில் கோட்டை மாரியம்மன் தான் பெரியவள், சக்தி வாய்ந்தவள். இதனாலேயே கோட்டை பெரியமாரியம்மன் என்று பக்தர்களால் அழைக்கப்படுகின்றது.

பழமையும், தொன்மையும் வாய்ந்த இத்திருக்கோயில் சேலம் மாநகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. பக்தர்களின் குறைகளைப் போக்கி, கேட்டவர்களுக்குக் கேட்ட வரம் அருளும் அன்னை கோட்டை மாரியம்மன் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள் பாலித்து வருகின்றாள். இத்திருக்கோயிலின் அருகாமையில் மாநகரப் பேருந்து நிலையம் அமைந்திருப்பதால், சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் எந்நேரமும் அம்மனைத் தரிசனம் செய்து செல்வார்கள். இத்திருக்கோயிலில் அமையப்பெற்றுள்ள 81 அடி உயரமுள்ள இராஜகோபுரம் மாநகருக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் கம்பீரமாக அமைந்துள்ளது.

நாட்டில் மழை பெய்ய வேண்டியும், மக்கள் நலம் பெற்று, பசியும் பிணியும் நீங்கி வளமும் வாழ்வும் பெறவும், ஆடி மாதத்தில் 22 நாட்கள் ஆடிப்பெருந்திருவிழா சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்படுகிறது. சேலம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான மாரியம்மன் திருக்கோயில்களில் ஆடிப்பெருந்திருவிழா கொண்டாடப்படுவதால், நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும். இத்திருவிழாவில் அம்மனுக்குப் பொங்கலிட்டும், உருளுதண்டம் போட்டும், அலகு குத்தியும் , மாவிளக்கு போட்டும் பக்தர்கள் தங்களது நேர்த்திக் கடனைச் செலுத்தி வழிபாடு செய்வார்கள்.

இத்திருக்கோயிலில், தமிழ்நாடு அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுப் பக்தர்களுக்குத் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அரசு நலத் திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு ஆன்மீகப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சமயச் சொற்பொழிவு தொடர் சொற்பொழிவாக நடைபெற்று வருகின்றது.

**ஆடித்திருவிழா முக்கிய நிகழ்ச்சிகள் விபரம் :**

| | | |
|---|---|---|
| 26.07.2005 | - | அம்மனுக்கு பூச்சாட்டுதல் |
| 02-08-2005 | - | கம்பம் நடுதல் |
| 09-08-2005 | - | சக்தி கரகம் |
| 10-08-2005 | - | பொங்கல், உருளுதண்டம் |
| 11-08-2005 | - | பொங்கல், உருளுதண்டம் |
| 12-08-2005 | - | பொங்கல், உருளுதண்டம் |
| 14-08-2005 | - | சத்தாபரணம். |

ஆடிப்பெருந்திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரையும் அம்மன் அருள் பெற்று நீடுழி வாழ அன்புடன் வரவேற்கின்றோம்.

கே கந்தசாமி
நிர்வாக அதிகாரி

என். பழனியாண்டி, தலைவர், அறங்காவலர் குழு
என். வெங்கடாஜலம்,அறங்காவலர்.
பெ. ராஜேந்திரன்,அறங்காவலர்.
அரிசிக்கடை எம்.ராமசாமி,அறங்கா[illegible]
ஏ. மாது அர்ச்சுனன்.